திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர்

மாலை 6] சோபகிருது - தை - பிப்ரவரி 1964 [மணி 5

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



★

சென்னை - கோடம்பாக்கம்
ஸ்ரீ வடபழநி யாண்டவர் கோயில்
ஸ்ரீ நடராஜமூர்த்தி, உற்சவர்.

★

பொருள் அடக்கம்

1. நமது தாய்நாடு
2. ஸ்ரீபழநி யாண்டவர் சிறப்பு
3. ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள்
4. சிவஞான போதம்
5. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
6. அரங்கமும் அரங்கனும்
7. உய்திக்குரிய ஒரேவழி
8. ஒன்று அவன் தானே
9. திருமுக் கூடல் கல்வெட்டு
10. திருநாவுக்கரசர் தேவாரம்
11. ஸ்ரீ வைஷ்ணவம்
12. செய்திகள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- ★ தனி இதழ் விலை ரூ. ஒன்று

சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "**திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை 34**" என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்தமாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப் பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்தல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—**ஆசிரியர்.**

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 6] சோபகிருது தை-பிப்ரவரி 1964 [மணி 5

"நமது தாய்நாடு"

[ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி, ஸ்ரீ சுவாமிகள் அவர்கள் ஆற்றிய "Our Motherland" என்னும் ஆங்கிலச் சொற்பொழிவு, ஈண்டுத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப் பெறுகின்றது. தேச பக்தியும் தெய்வ பக்தியும் ஒன்றை யொன்று தழுவி, இணைந்து அணைநது நின்றொளிர்பவை யாதலின், ஸ்ரீ சுவாமிகள் அறிவுறுத்தி யருளி யுள்ளபடி, நாம் அனைவரும் தேச பக்தி—தெய்வ பக்திகளிற் சிறந்து திகழ்ந்து, நன்கினிது வாழ முயலுவோமாக!
—ஆசிரியர்]

புண்ணிய பூமி :

இவ்வுலகத்தில் புனித புண்ணிய பூமி எனப்படுதற் குரிமையுடைய ஒரு நாடு இருக்குமானால், அஃது இந்தியாவே யாகும். இங்கேதான் எல்லா ஆன்மாக்களும் தாந்தாம் செய்த வினைப்பயன்களை நுகர வருதல் வேண்டும். இங்கேதான் கடவுளை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒவ்வோர் ஆன்மாவும் இறுதிப் புகலிடமாக வந்து சேர்தல் வேண்டும். மனித குலமானது மென்மை இரக்கம் தூய்மை அமைதி ஆகிய பண்புகளின் உயர்வற உயர்ந்த நலங்களில், இங்கேதான் ஓங்கியுள்ளன. அகமுக நாட்டத்திலும், ஆத்மானுபூதி யருளுணர்விலும் தலை சிறந்து நிற்கும் நாடு, இந்தியாவே யாகும்.

சமயமும் தத்துவமும் :

பிறநாடுகள் அனைத்தும் அறிவு பெறுத முன்பே, மெய்யுணர்வில் மேலோங்கித் திகழ்ந்த பழம் பெரும் நாடு, இந்தியாவே. கடல் போன்று பரவிப் பெருகி ஓடும் ஆறுகளிலும், வானை யளாவி ஓங்கி யுயர்ந்து நிற்கும் இமாலய மலைகளிலும், அதன் ஆன்மீகச் சிறப்புப் பிரதிபலித்துப் புலனுதல் காணலாம். ஈடும் எடுப்பும் அற்ற மிக மேலான மெய்ஞ்ஞானச் சான்றோர்கள் பற்பலரின் பாத மலர்கள் பதியப் பெற்ற புனிதத்துவம் வாய்ந்த இந்திய தேசம், இதுவேதான்!

இங்கேயே மனித இயற்கை பற்றியும், அகவுலகம் பற்றியும், ஆழ்ந்த ஆராய்ச்சி முதன் முதலாக எழுந்தது. இங்கேதான் ஆன்மாவின் அழியா இயல்பு, உலகைப் படைத்து இயக்கி வரும் கடவுளின் உண்மை, இயற்கையிலும் மனிதனிலும் இறைவன் கலந்து நிற்கும் தன்மை என்பன பற்றிய கொள்கைகள் முதன் முதல் அரும்பி மலர்ந்தன. சமய நெறி-தத்துவத் துறை என்பவற்றின் ஒப்புயர்வற்ற கொள்கைகள், இங்கேதான் இணையற்ற உயர்ந்த நிலையை எய்தி நின்றன.

பண்பு நலங்கள் :

நம்முடைய புனிதத் தாய் நாடுதான், சமயத்திற்கும் தத்துவத்திற்கும் உரிமையுடைய நாடு ஆகும். ஆத்ம ஞானிகள் பலப் பலர் திருவவதாரம் செய்தருளிய நாடு இதுவே யன்றோ? பண்டைக் காலம் முதல் இன்றைய நாள் வரை இங்கே மட்டுந்தான், மனிதன் கடைப் பிடித்தற்குரிய வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோள். ஒளி விட்டு விளங்கி வந்திருக்கின்றது. தத்துவம் ஆன்மீகம் ஒழுக்கம் இனிமை மென்மை அன்பு அருள் ஆகிய சிறந்த பண்புகளின் தாயகமாகத் திகழ்ந்து வருவது இந்திய தேசமே. இவைகள் இன்றுகாறும் இங்கு நிலை பெற்று வருகின்றன. என்னுடைய உலக அனுபவம், இந்தியாதான் இத்தகைய சிறப்பியல்புகளில் இன்றும்கூட, முதன்மையாகவும் முன்னணியிலும், உலக நாடுகளிலெல்லாம் இணையற்று விளங்கி வருகின்றது என, மிகவும் வலியுறுத்தித் துணிவுடன் கூறுமாறு தூண்டுகின்றது.

நூற்றுக்கணக்கான அயல் நாட்டுப் படையெடுப்புக்களையும், நூற்றுக்கணக்கான பழக்க வழக்கப் பண்பாடுகளின் மேடு பள்ளங்களையும், எத்தனையோ நூற்றாண்டாக ஏற்றுத் தாங்கிக் கொண்டு, கலங்கா நிலையில் விளங்கி வருகின்ற அதே இந்திய தேசம்தான், இது! உலகின் எந்தக் கருங்கற் குன்றையும் விட மிகவும் உறுதி வாய்ந்ததாய், ஆற்றலிற் குன்றாததாய், அழிக்க இயலாத வாழ்க்கையை யுடையதாய், இந்திய தேசம் இலங்கி வருகின்றது. இதன் வாழ்க்கையும் கூட, ஆன்மாவைப் போன்ற அதே இயல்புடையதாய், முதலும் முடிவும் இன்றி, அழியாத் தன்மை பெற்று அமைந்துள்ளது. அத்தகைய ஒரு சிறந்த நாட்டின் குழந்தைகளே நாம்!

நாகரிகப் பழமை :

கிரீசு தேசம் ஏற்படாத பொழுதே, உரோமாபுரி நினைக்கப்படாதே பொழுதே, புதிய ஐரோப்பாவின் முன்னோர்கள் காடுகளில் வாழ்ந்து தம் மீது நீலச் சாயம் தீட்டிக் கொண்டு காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலேயே, இங்கே மக்கள் செயல் நலங்களிற் சிறந்து திகழ்ந்து கொண்டிருந்தனர்.

அதற்கும் மிக முன்னரே, வரலாறு தோன்றாத பொழுதே பழைமையின் செறிந்த இருளிற் செவிவழி நோக்கம் செல்லத் துணிவு கொள்ளாத முன்பே, அன்றிலிருந்து இன்று வரை, ஒன்றன்பின் ஒன்றாக எத்தனையோ உயரிய கருத்துக்களும் கொள்கைகளும் இங்கிருந்து தோன்றி, அயல் நாடுகளுக்கு அணிவகுத்துச் சென்று பரவியுள்ளன. இங்கே ஒவ்வொரு சொல்லும், தனக்கு முன்னே அமைதியும், பின்னே வாழ்த்தும் தொடரும் வண்ணம், பேசப் பெற்று வந்திருக்கின்றன.

உலக வரலாறு முழுவதையும் நீங்கள் படித்துப் பாருங்கள்! எங்கேயாவது நீங்கள் காண நேர்கின்ற உயர்ந்த குறிக்கோள்கள் ஒவ்வொன்றும், முதன்முதல் தோன்றிய இடம் இந்தியாதான் என்பதனை, நீங்கள் இனிது உணர்வீர்கள். நினைக்கவும் இயலாத காலம் முதல், மனித குலத்தின் சிறந்த கருத்துக்களுக்கு, இந்தியா சிறந்ததொரு சுரங்கம் ஆக இருந்து வந்திருக்கின்றது; உயர்ந்த கருத்துக்களை உதிப்பித்து, அவற்றை உலகம் முழுவதற்கும் வழங்கிப் பரப்பியிருக்கின்றது.

சமய ஆராய்ச்சியானது, ஒரு நல்ல ஒழுக்க நெறி முறையை இந்தியாவினின்றே, பிறநாடுகள் பெற்றிருக்கின்றன என்னும் உண்மையை வெளிப்படுத்துகின்றது. ஆன்மாவின் அழியாத் தன்மையை நம்மிடமிருந்தே, நேர்முகமாகவோ மறைமுகமாகவோ, பிற சமயங்கள் பெற்றிருக்கின்றன. இந்த நாட்டிலிருந்தே, அலையலையாகச் சமய ஞானமும், தத்துவ ஞானமும் மீண்டும் மீண்டும் வெளிப்பட்டுப் பெருகி, உலகில் வெள்ளம் போல் எங்கும் பரவிப் பாய்ந்தது. இந் நாட்டிலிருந்தேதான் மீண்டும் ஒரு முறை அத்தகைய ஞான அலைகள் புறப்பட்டு, அழிவு எய்திக் கொண்டிருக்கும் மனித குலத்திற்குப் புத்துயிர்ப்பும் புது வலிவும் அளித்தல் வேண்டும்.

மேலை நாட்டு மக்கள் "தகுதி யுடையதே நிலைக்கும்" (Survival of the Fittest) என்பன போன்ற புதிய கொள்கைகளைப் பற்றி மிகவும் பேசி வருகின்றனர். உடல் தசையின் வலிவே "எஞ்சி நிலைப்பதற்கு" ஏற்றது என்று அவர்கள் கருதுகின்றனர். 'அஃது உண்மையாக இருந்தால், வல்லமை மிக்கு விளங்கிய

பழைய நாடுகள் பல, இன்றும் உலகில் சிறப்புற வாழ்ந்து வந்திருக்கும்!

நமக்குள்ள நல்ல சிறப்பு:

வலிவில்லாத இந்துக்களாகிய நாம்—ஓரினத்தையோ ஒரு நாட்டையோ என்றுமே வென்று அடக்கி யாளாத நாம்—எப்போதோ மாய்ந்து மறைந்து போய் விட்டிருப்போம். ஆனால் நாமோ, நாற்பது கோடி மக்களாகப் பெருகி வாழ்ந்து வருகின்றோம். உலக நாடுகள் அனைத்திலும், நாம் மட்டுமே பிறரை வென்று அடக்கி யாளும் ஓர் இனமாக என்றுமே இருந்ததில்லை. அதுவே நமக்குள்ள நல்ல சிறப்பாகும். அதனாலேயே நலமுற நாம் வாழ்ந்து வருகின்றோம்!

மாறிலா மாண்பு:

பழைய கிரேக்கர்களின் நாடானது மண்ணோடு மண்ணாய் அறவே மாய்ந்து மறைந்து போய் விட்டது. அதன் பழம் பெருமைகளெல்லாம், இன்று பழங் கதைகளாய் மறக்கப்பட்டுப் போயின. ஒரு காலத்தில் உரோமப் பேரரசு ஒப்பின்றிச் சிறந்து விளங்கி யிருந்தது. உரோமின் ஆற்றலும் ஆட்சியும் யாண்டும் பரவி ஓங்கி யிருந்தன. உரோம் என்னும் பெயரைக் கேட்ட அளவிலேயே, உலகம் நடு நடுங்கிய காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்றோ, கேபிடால் ஆட்சி மாளிகையானது இடிந்து சிதைந்த மட்குவியலாகக் கிடக்கின்றது. சீசர்கள் ஆண்ட இடத்தில், சிலந்திகள் வலை பின்னிக் கொண்டு வாழ்கின்றன.

இவற்றைப் போலவே, புகழ் பெற்ற மற்றும் எத்தனையோ பல நாடுகள் வந்தன; சென்றன; பிற நாடுகளை அடக்கியாண்டு ஆர்ப்பரித்துச் செருக்குற்று, வஞ்சகம் மலிய வாழ்ந்தன; நீர்க்குமிழி போல ஒரு சில காலமே நிலவிப் பின்னர் அழிந்தொழிந்தன. மனித குலத்தின் முகத்தில் வடுக்கள் பல வற்றை ஏற்படுத்திய அந் நாடுகள், இருந்த இடம் இன்று தெரியவில்லை. ஆனால் நாமோ, இன்றும் நன்கினிது நிலைபெற்று வாழ்ந்து வருகின்றோம். பண்டைக் காலத்தில் வாழ்ந்த நமது மனுஸ்மிருதி ஆசிரியர், இன்று திரும்பி வந்தாலும் நம்மைக் கண்டு சிறிதும் திகைப்படையார்! தாம் ஒரு புதிய நாட்டில் இருப்பதாக அவர் எண்ணிக் கொள்ள மாட்டார்! ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவர் வகுத்தளித்த சட்டங்கள் இன்றும் நிலவி வருகின்றன. பல காலத்து அறிவும், பல நூற்றாண்டின் அனுபவப் பயனும் ஆகிய பழக்க வழக்கங்கள், இடையறாது தொடர்ந்து இன்றளவும் நம்மிடையே நிலைபெற்று வருகின்றன. அவற்றின் மீது எத்தனையோ தாக்குதல்களும், எதிர்ப்புக்களும் ஏற்பட்டு வந்துள்ளன. எனினும், அவற்றால் அவை சிறிதும் தளர்வுறாமல் மேலும் மேலும் வலிவும் ஆக்கமும் பெற்று விளங்கி வருகின்றன.

மகரிஷிகளின் மரபு:

வேறு எந்த நாட்டிலாவது, ஆற்றல் மிக்க அரசர்கள் தங்கள் மரபு, அரசர்கள்—பிரபுக்கள்—அரண்மனை வாசிகளின் வழியில் வந்தது என்று கூறிக் கொள்வதே யன்றி, காடுகளில் வாழும் அரைகுறை ஆடைகள் அணிந்த துறவிகளின் மரபைச் சேர்ந்ததென்று பெருமிதத்துடன் கூறிக் கொள்வதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? இதுதான், அந்த நாடு!

பெருமிதத்தின் காரணம்:

இது வரையிற் பிறந்துள்ள மனிதர்களிலேயே, நான்தான் மிக மிகத் தலையெடுப்பு உடையவன்! ஆனால் வெளிப்படையாகச் சொல்ல இசைவு அளியுங்கள்! நான் பெருமிதம் கொள்வது எனக்காக அன்று. என் முன்னோர்களின் சிறப்புக்காகவே நான் பெருமைப்பட்டுக் கொள்ளுகின்றேன். பழமையைப் பற்றி எவ்வளவு மிகுதியாகப் படித்துணர்கின்றேனோ, எவ்வளவுக் கெவ்வளவு பின்னே நோக்கிக் கடந்த காலத்தை எண்ணுகின்றேனோ, அவ்வளவுக்கவ்வளவு என் பெருமிதம் ஓங்கி வளர்கின்றது; அஃது எனக்கு ஆற்றலையும் துணிவையும் அளித்து, என்னைத் தரைப் புழுதியினின்று எடுத்துத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்கின்றது! நமமுடைய சிறந்த முன்னோர்கள் வகுத்தளித்த வழிகளிற் பணிபுரியுமாறு என்னைத் தூண்டுகின்றது!

அந்தப் பண்டைப் பெருஞ் சான்றோர்களின் புதல்வர்களே! இறைவன் அருளால் நீங்களும் இத்தகைய பெருமிதவுணர்ச்சியையே

பெறுவீர்களாக! உங்கள் முன்னோர்கள்பால் உங்களுக்கு நம்பிக்கை, குருதியுடன் கலந்து பெருகுவதாக! அஃது உங்கள் வாழ்க்கையின் கூறும்சீருமாக அமைவதாக! அஃது உலகநலங் குறித்துச் செயலாற்றிச் சிறப்பெய்துவ தாக!

பிற நாடுகளிற் பரவிப் பல நூறுயிரக் கணக்கான மக்களின் உள்ளங்களிற் பற்றி எரிந்து கொண்டுள்ள உலகாயத நெருப்பைத் தணித்து, உயிர் நல்கவல்ல உயரிய அருள்நீர் இங்கேதான் உள்ளது!

அழிவிலா இந்தியா :

இந்திய தேசம் அழிக்கப்பட முடியாதது! அழியா நிலையில் அது திகழ்கின்றது! ஆன்மீக உணர்வு பின்னணியாக நிலை பெற்று நிற்கும் வரையிலும், அதன் மக்கள் ஆன்மீக உணர்வைக் கைவிடாது கடைப் பிடிக்கும் வரையிலும், இந்திய தேசம் என்றும் அழிவின்றி விளங்கிக் கொண்டுதான் இருக்கும்.

இந்தியர்கள் ஏழைகளாகவும், இரவலர்களாகவும் இருக்கலாம்! வறுமை அவர்களை வாட்டலாம்! புழுதியும் அழுக்கும் எப்போதும் அவர்களைச் சூழ்ந்து கொண்டிருக்கலாம்! எனினும், அவர்கள் தம்முடைய கடவுளை விடாதிருப்பார்களாக! தாங்கள் மகரிஷிகளின் வழியில் வந்த புதல்வர்கள் என்பதை அவர்கள் மறவாது இருப்பார்களாக!

செங்கோல்கள் பல உடைத்தெறியப் பட்டிருக்கின்றன; பதவியும் ஆட்சியும் பல கைகளுக்கு மாறி யிருக்கின்றன. ஆனால் அரசர்களும் அரசவைகளும் இந்தியாவில் பொது மக்களுள் ஒரு சிலரை மட்டுமே தொட்டிருக்கின்றன. பெரும்பாலான மக்கள் தொகுதியினர், மேலிருந்து கீழ் வரையில், தங்கள் தங்களின் இயல்பான போக்கிலேயே செல்லு மாறு விடப் பெற்றிருந்தனர். தேசீய வாழ்க்கை வெள்ளம், சில சமயங்களில் மெதுவாகவும் உணர்வின்றியும், மற்றும் சில சமயங்களில் வலிவாகவும் விழிப்புடனும், ஓடிக் கொண்டிருந்தது. ஒளி மிக்க பல நூற்றுண்டுகள் வரிசையாகவும், தொடர்பு அருமலும் கழிந்துள்ளன. அவற்றை நினைக்குங்கால் யான் வியப்பும் விம்மிதமும் எய்தி நிற்கின்றேன்! அந்தச் சங்கிலியில், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில இடங்களில், ஒளி குன்றியிருக்கலாம். ஆனால் அவை மீண்டும் பேரொளி பெற்று விளங்கி யுள்ளன.

என்னுடைய தாய் நாடு ஆகிய இந்திய தேசம், விலங்கியல் நிலையிலுள்ள மனிதனைச் சிறந்த மேலான தெய்விக நலம் குலவும் மனிதன் ஆகச் செய்யும் புகழ் மிகுந்த பெருந் தொண்டினை ஆற்றுதற்குப் பெருமித நடையுடன் வீறு தோன்ற விரைந்து சென்று கொண்டுள்ளது! இதனை மண்ணுலகிலோ அன்றி விண்ணுலகிலோ உள்ள எந்தச் சக்தியும் தடுத்து நிறுத்துதல் இயலாது.

சிக்கல்களுக்குத் தீர்வு :

ஆம்! என்னுடைய சகோதரர்களே! உபநிஷத காலம் தொட்டே நாம் உலகுக்கு ஒரு பெரிய அறைகூவலை விடுத்திருக்கின்றோம். "ந தநேந ந ப்ரஜ்யா த்யாகே நைகே அமிர்தத்வம் நஷ்ᵘ": அழியாத் தன்மை அடைவது செல்வத்தாலோ, அன்றிச் சந்ததியாலோ இல்லை, துறவு நெறி யுணர்வினாலேயே ஆகும். ஒவ்வோர் இனமும் வரிசையாக இவ் அறைகூவலை ஏற்றுக் கொண்டு, தங்களால் இயன்ற வரையில் முயன்று, உலகச் சிக்கல்களை ஆசாபாசங்களால் விடுவிக்க முயன்றுள்ளன. கடந்த காலத்தில் அவைகளெல்லாம் தோற்றுப் போயின. பொருளும் பதவியும் காரணமாக எழும் சூழ்ச்சி-வஞ்சகம்-துன்பம் முதலிய சுமைகளால் நலிவுற்று, அப் பழைய இனங்கள் யாவும் மறைந்தொழிந்தன, புதியனவும் கூட, நிற்க முடியாமல் தள்ளாடிக் கொண்டுள்ளன.

அமைதியா போரா, பொறுமையுடைமையா விரைவுடைமையா, நல்லியல்பா வல்லியல்பா, உடல் வலிமையா அறிவு வலிமையா, உலகாயதமா ஆன்மீகமா, இவற்றுள் எது முடிவில் வெற்றி பெறும்? என்பது இனிமேல் தான் தெரியும். எவ்வளவோ காலத்திற்கு முன்பே நாம் நம்முடைய சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டு விட்டோம். ஆகூழ், போகூழ் இரண்டிலும், கடைசி வரையிலும், அதனையே நாம் கைக்கொண்டிருக்கக் கருதியுள்ளோம். நம்முடைய தீர்வு: உலகியலிற் பற்றின்மை—துறவுணர்வு என்பதே யாகும்.

இந்திய ஆன்மீக ஞானம் :

மனித குலத்தை இறையருள் நெறிப் படுத்துதலே இந்திய வாழ்வியல் நோக்கமும், என்றுமுள்ள கவிதை இன்பொருளும், நிலை பேற்றின் முதுகெலும்பும், அமைப்பின் அடிப் படையும், சிறப்பியல்புக்குரிய சீரிய காரணமும் ஆகும். டார்ட்டர் அல்லது தர்க்கர் ஆயினும், ஆங்கிலேயர்கள் அல்லது மொகலாயர்கள் ஆயினும், இந்தியத்தாய் தன்னுடைய இவ் வாழ்க்கை நெறிப் போக்கினின்று சிறிதும் வழுவியதில்லை.

முழுமையான நாகரிகம் அடையும் நிலையை உலகம், எதிர்பார்த்துக் கொண்டிருக் கின்றது. இழிவிலும் துயரிலும் கூட விட்டு விடாமல், எவ்வளவோ காலமாக இடர்ப்பட்டுப் போற்றி இருதயத்தோடு அணைத்து இந்தியா பேணிவரும் அரும்பொருட் செல்வத் திரள்கள் வெளிப்படுவதற்காக—இந்திய மக்களினத்தின் அற்புதமான ஆன்மீகஞான அருட் செல்வம் கிடைப்பதற்காக—உலகம் ஆவலுடன் எதிர் நோக்கியிருக்கின்றது. இந்தியாவிற்கு வெளியேயுள்ள மக்கள், நம்முடைய முன்னோர் களின் விந்தை மிக்க இவ்வரும் பொருட் டிரளைப் பெறுவதற்காக, எவ்வளவு பசியும் விடாயும் கொண்டிருக்கின்றனர் என்பதனை நீங்கள் அறிந்து கொள்ளவில்லை.

நாம் பேசுகின்றோம் ; ஒருவரோடு ஒருவர் கலகம் புரிந்து கொள்ளுகின்றோம் ; ஒவ்வொரு தூய புனிதப் பொருளையும் பற்றி ஏளனம் செய்து, பழித்துரைத்து நகையாடுகின்றோம். நம்முடைய இந்திய தேசத்தின் முன்னோர்கள் தேடித் தொகுத்து வைத்துச் சென்றுள்ள ஞான அமிழ்தத்தின் ஒரு சிறு துளியையாவது சுவைத் துணர்தற்காக, இதன் எல்லைச் சுவர்களுக்கு அப்பாலுள்ள பல நூறாயிரக் கணக்கான மக்கள் தங்கள் கைகளை நீட்டிக்கொண்டு, எத்தகைய மனவேதனையுடன் காத்துக்கொண்டிருக்கின்ற னர் என்பதனை, நீங்கள் ஒரு சிறிதும் உணர்ந்து கொள்ள வில்லை.

விழிப்புறும் இந்தியா :

மிக நீண்ட இரவு கழிவது போலத் தோன்றுகின்றது; கொடிய துயரம் முடிவடை வதாகத் தெரிகின்றது ; உயிரற்ற பிணம் உயிர் பெறுவது போலக் காணப்படுகின்றது. பழங் கால இருட் செறிவிலிருந்து, நம்முடைய தாய் நாடாகிய இந்தியாவினிட மிருந்து, இமாலய மலையின் ஓங்கி யுயர்ந்த சிகரங்களைப் போல ஞானம் இச்சை கிரியை ஆகியவற்றைப் பிரதி பலிக்கும் தன்மையில், ஒரு மெல்லிய—இனிய—திடமான—பிழைபடாத குரல் தோன்றி, நம்மை நோக்கி வருகின்றது. நாளுக்கு நாள், அதன் ஆற்றலும் அளவும் பெருகிக்கொண்டுள்ளன. அதோ பாருங்கள் ! உறங்குபவன் விழிக்கத் தலைப்படுகின்றான். இமாலய மலைகளினின்று வீசும் ஒரு மெல்லிய தென்றல் போல, அஃது உணர்வற்றுக் கிடக்கும் எலும்புகளிலும் தசை களிலும், ஒரு புத்துயிர்ப்பை ஊட்டுகின்றது. அதனால் மடிமைத்தனம் மறைகின்றது. குருடர் கள் மட்டுமே அதனைக் காண்டல் இயலாது. கோணற் புத்தியுள்ளவர்கள் மட்டுமே, நம் இந்தியத்தாய் தன் ஆழ்ந்த நீண்ட உறக்கத் தினின்று விழிப்படைந்து கொண்டிருத்தலைக் காணமாட்டார்கள். இனி அவளை யாரும் தடுத்து நிறுத்த இயலாது. இனி ஒருபோதும் அவள் இங்ஙனம் உறங்கப்போவதில்லை. புறம்பேயுள்ள ஆற்றல்கள் எதுவும், அதனை இழுத்துப் பிடிக்க வைக்க முடியாது. பேராற் றல் மிக்க இந்தியத் தாய் எழுந்து நிற்கத் தொடங்கிவிட்டாள்.

எழுமின் ! எழுமின் ! நீண்ட இரவு கழிந்து விட்டது ! பொழுது புலர்ந்து ஒளிபரவிக்கொண் டிருக்கின்றது. அலைகள் உயர்ந்து எழுகின் றன. பொங்கி எழும் அலையின் வேகத்தைத் தடுத்து நிறுத்த இயலாது. நம்புமின்! நம்புமின்! 'இந்தியா எழுதல்வேண்டும். ஏழைகளும் எளிய வர்களும் இன்புறுமாறு செய்யப்படுதல் வேண் டும்' என்று, இறைவனின் கட்டளை பிறந்து விட்டது; ஆணை புறப்பட்டு ஆயிற்று. நீங்கள் இன்பக் களிப்பு எய்துமின்கள் ஆன்மீக அருள் வெள்ளம் பெருகிப் பாய்கின்றது ! தடையின்றி—எல்லையின்றி—எல்லாவற்றையும் கவர்ந்துகொண்டு, அஃது எங்கும் பரவி ஓடி வருதலை யான் காண்கின் றேன். முன்னணியில் உள்ள ஒவ்வொரு மனித னும், அதன் ஆற்றல் ஓங்கி வளரத் துணை புரிவான். ஒவ்வொருவருடைய நல்லெண்ண மும் அதற்குத் தொண்டு செய்யும். எல்லா ருடைய கைகளும், அதன் வழியைச் செப்ப னிடும். இறைவனின் புகழ் ஒளிர்வதாக !

பிரிந்து நிற்பது பெருங்கேடு :

'ஆய்ஸ்டர்' மீன் செய்வது போல, இந்தியா தன்னைக் குறுக்கிக்கொண்டு, தனக்குள் ஒடுங்கி நின்றது. தன்னுடைய அணிகலன்களையும் அரும்பொருள்களையும், பிறநாட்டு மனித குலத்தினர்க்குக் கொடுக்க மறுத்துவிட்டது. உயிரளிக்க வல்ல உண்மைகளைத் தன் இனத்திற்கே யன்றிப் புறம்பே யுள்ள அயல்நாட்டு மக்களுக்கு நல்க இணங்காதொழிந்தது.

ஒரு தனி மனிதனோ, ஒரு தனி நாடோ, பிறரோடும் பிறவற்றோடும் சேராமல் தனித்து ஒதுங்கி நின்று ஒருபோதும் வாழ முடியாது என்று, நான் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டிருக்கின்றேன். தற்பெருமை, போலித் தூய்மை முதலிய தவறான கருத்துக்களைக் கொண்டு, எப்போதாவது தனித்துப் பிரிந்து நிற்க முயற்சி செய்தால், அதன் விளைவாகப் பிரிந்து நிற்பது எதுவோ, அதுவே என்றும் பெருங்கேடு எய்துகின்றது.

வீழ்ச்சிக்குக் காரணம் :

இந்தியாவின் விழ்ச்சிக்கும், அழிவுக்கும் ஒருபெருங் காரணம் : தன்னைச் சூழ்ந்துள்ள பௌத்த சமய தேசங்களுடன் தான் தொடர்பு கொள்ளுதல் கூடாது என்னும் கருத்துடன், பிறர்மீது வெறுப்புணர்வை அடிப்படையாக அமைத்துக்கொண்டு, பழக்க வழக்கம் என்னும் ஒரு சுவரைச் சுற்றிலும் எழுப்பிக்கொண்டு, அது பண்டைய நாட்களில் தனித்துப் பிரிந்து நின்ற தவறான செயலேயாகும்.

கடந்த 2000 ஆண்டு காலமாக ஒரு தேசத்தின் மாபெருந் தலைவர்கள், உணவை எடுத்துண்பது வலக்கையினாலா அல்லது இடக்கையினாலா என்றும் ; தண்ணீரை எடுப்பது வலப்பக்கத்திலிருந்தா அல்லது இடப்பக்கத்திலிருந்தா என்றும் ; இன்னோரன்னவை பற்றியே இடைவிடாத வழக்கீடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால், அந்தத் தேசம் அழிவடையாமல், வேறு எந்தத் தேசம்தான் அழிவடைய முடியும் ?

கடந்த 600 அல்லது 700 ஆண்டுகளின் சீர்கேட்டைப் பற்றிச் சிந்தியுங்கள் ! நூற்றுக் கணக்கான பெரும் புலவர்கள், எத்துணையோ பல ஆண்டுகளாக, ஒரு குவளையிலுள்ள தண்ணீரை எடுத்துக் குடிப்பது வலக்கையினாலா இடக்கையினாலா என்றும் ; கையைக் கழுவுவது மூன்று முறையா நான்கு முறையா என்றும் ; வாய்கொப்பளிப்பது ஐந்து முறையா ஆறு முறையா என்றும் பயனிலா ஆராய்ச்சிகள் செய்துகொண்டு இருந்திருக்கின்றனர். இத்தகைய அற்ப ஐய வினாக்களை எழுப்பிக் கொண்டு, இவற்றிற்காகப் புலமை செறிந்த பல ஆராய்ச்சி நூல்களை எழுத முனைந்து, அத்துறையிலேயே வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருக்கும் மனிதர்களிடம் இருந்து, நீங்கள் வேறு எதனை எதிர்பார்க்க முடியும் ?

ஒரு நாடோ, ஒரு மனிதனோ பிறரை வெறுத்து வாழ்தல் இயலாது. என்றைக்கு இந்தியர்கள் "மிலேச்சன்" என்னும் சொல்லை யுண்டாக்கிப் பிறரிடமிருந்து தொடர்பை அறுத்துக் கொண்டார்களோ, அன்றே இந்தியாவின் அழிவுக்கு அடிகோலியாயிற்று.

அன்பின் ஆற்றல் :

அன்பு ஒருபோதும் தவறுவதில்லை. இன்றோ—நாளையோ—பலகாலம் கழித்தோ, உண்மையே வெற்றிபெறும். அன்பே வெற்றியை அடைந்து தீரும். நீங்கள் உங்கள் அயலார்களை நேசிக்கின்றீர்களா ?

கடவுளை வழிபட நீங்கள் எங்கே போக வேண்டும் ? ஏழையர்—பிணியாளர் – வலிவிலார்—இவர்கள் எல்லாம் கடவுள் அல்லரா? அவர்களை ஏன் முதலில் தொழுதல் கூடாது? கங்கைக் கரையில் ஏன் கிணறு வெட்டச் செல்லுகின்றீர்கள் ? அன்பின் எல்லையற்ற ஆற்றலை நம்புங்கள் ! உங்களுக்கு அன்பு இருக்கின்றதா ? நீங்கள் ஆற்றல் மிக்கவர்கள். நீங்கள் முழுவதும் தன்னலம் இல்லாதவர்களா ? அங்ஙனமாயின், நீங்கள் பிறரால் எதிர்க்க இயலாதவர்கள். ஒழுக்கம்தான் எங்கும் பயன் தரும். கடவுள்தான் தன் குழந்தைகளைக் கடலின் ஆழத்திலும் காப்பாற்றுகின்றார். உங்கள் தேசம் சிறந்த வீரர்களை வேண்டி நிற்கின்றது. நீங்கள் மிகச் சிறந்த வீர புருஷர்களாக விளங்குங்கள் !

உள்ளத்தைத் தொட்டுப் பார்த்துணருங்கள் ! வெறும் அறிவிலோ, சிந்தனையிலோ

என்ன இருக்கின்றது? அது சில அடிகள் செல்லுகின்றது, பின்னர் அங்கேயே நின்று போகின்றது ஆனால் உள்ளத்தின் மூலம் உள்ளொளி அரும்புகின்றது. அன்பு திறக்க முடியாத கதவுகளையும் திறக்கின்றது. உலகத்தின் எல்லா வகை மறைபொருள்களுக்கும் அன்புதான் வாயிலாகத் திகழ்கின்றது. எதிர்காலத்துச் சீர்திருத்தச் செம்மல்களே! எதிர்காலத்தின் தேசபக்தர்களே! நீங்கள் இதனையுணருங்கள்!

கடவுளின் அருள்பெற்றவர்களும், மகரிஷிகளின் வழிவந்தவர்களும் ஆகிய பல நூறுயிரக் கணக்கான சான்றோர்கள், விலங்குகளையும் கூட நேசித்து, அவற்றிடமும் ஆழ்ந்த அன்பும் பரிவும் காட்டினார்கள் என்பதனை நீங்கள் உணர்கின்றீர்களா?

முதற்படி நிலை:

இன்று எத்துணையோ லட்சக்கணக்கான மக்கள் பட்டினி கிடக்கின்றார்கள்! இங்ஙனமே எத்துணையோ பல காலமாக எத்துணையோ லட்சக்கணக்கான மக்கள், பட்டினியால் வாடிக்கொண்டிருந்திருக்கின்றார்கள் என்று நீங்கள் உணருகின்றீர்களா? தேசத்தை அறியாமை என்னும் இருள் சூழ்ந்து கவிந்து கொண்டிருக்கின்றதே! அதை நீங்கள் உணருகின்றீர்களா? அஃது உங்களை அமைதி குலையச் செய்கின்றதா? அஃது உங்களை உறங்க முடியாமற் செய்கின்றதா? இடையறாத இருதயத் துடிப்பின் மூலம், அஃது உங்கள் இரத்த நாளங்களிற் பரவி, இரத்தத்திற் சேர்ந்து கலந்துள்ளதா? அழிவுத் துன்பம் பற்றிய ஒரு கருத்து உங்களைப் பற்றிக்கொண்டு விட்டதா? உங்களுடைய பேரும் - புகழும் - மனைவியும் - குழந்தைகளும்- பொருளும் - உடலும் ஆகியவற்றை யெல்லாம், நீங்கள் மறந்து விட்டீர்களா? இதனை நீங்கள் செய்து முடித்திருக்கின்றீர்களா? ஒரு தேச பக்தன் ஆவதற்கு, அதுதான் முதற்படிநிலை.

தேசபக்தி:

உங்கள் குறுகிய சிறு வளையினின்று கிளம்பி வெளியே வாருங்கள்! வந்து வெளியுலகைப் பாருங்கள்! மற்ற நாடுகள் எங்ஙனம் அணிவகுத்துச் செல்கின்றன என்று காணுங்கள். நீங்கள் மனிதகுலத்தை நேசிக்கின்றீர்களா? உங்களுக்குத் தேசபக்தி இருக்கின்றதா? அங்ஙனமாயின் வாருங்கள். உயர்ந்த சிறந்த நலங்களுக்காக நாம் பாடுபடுவோம். உங்களுடைய அருமையும் உரிமையும் மிக்க உறவினர்கள், அழுது புலம்பினாலுங் கூட நீங்கள் திரும்பிப் பாராதீர்கள். முன்னேயே நோக்கிச் செல்லுங்கள்.

ஆட்கள்! ஆட்கள்!! அவர்கள்தான் தேவை. மற்றையன எல்லாம் பின் தாமே கிடைக்கும். வலிவான—ஆற்றல் மிக்க—நம்பிக்கையுள்ள—உண்மை வாய்ந்த—இளைஞர்கள் தேவை. அத்தகைய ஒரு நூறு இளைஞர்கள் கிடைத்தால், இவ்வுலகமே மாற்றியமைக்கப்பட்டுவிடும்.

உங்கள் மனத்தையும் எதிர்கால நம்பிக்கையையும், உலகளவு அகல்முடையதாய், விரிவு படுத்திக்கொள்ளுங்கள். வெறியர்களின் ஆழமான உணர்ச்சியையும், உலகாயதர்களின் பரவலான உணர்ச்சியையும் ஒரு சேர, நான் விரும்புகின்றேன். கடல்போன்ற ஆழமும், வானம் போன்ற எல்லையற்ற விரிவும் உடைய மனந்தான், நமக்குத் தேவைப்படுகிறது.

என் சகோதரர்களே! நாம் ஏழைகளாக—ஒன்றுமில்லாதவர்களாக - இருக்கின்றோம். ஆனால் அத்தகையவர்கள்தான், மிகப் பெருமை வாய்ந்த இறைவனின் கருவிகளாக விளங்கி வந்திருக்கின்றனர். உங்களுக்குப் பிறர் உதவி செய்ய வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்காதீர்கள்.

மனிதர்களின் உதவியைவிட, இறைவனின் உதவி மிக மிகப் பெரியதன்றோ? புனிதர்களாக இருங்கள். இறைவன்பால் நம்பிக்கை வையுங்கள்; அவனையே பற்றுக்கோடாகக் கொள்ளுங்கள், அப்போது நீங்கள் சரியான வழியில் நிற்பீர்கள். உங்களுக்கு எதிராக ஒன்றும் செயலாற்ற இயலாது. "அன்பியல் ஒளியே! வழிகாட்டு" என்று நாம் வேண்டுதல் புரிவோம். இருளினின்று ஓர் ஒளி வரும். நம்மை வழிகாட்டி அழைத்துச் செல்ல ஒரு கை நீண்டு வெளிப்படும். இறைவன் சிறப்புறுக! அவர்தான் நம் படைத் தலைவர்! புறப்படுக! யார் விழுகின்றார்கள் என்று பார்க்கப் பின்னே திரும்பற்க. முன்னோக்கி, மேன்மேற் செல்லுக.

சகோதரர்களே! இவ்வாறு, இவ்வாறுதான், நாம் செல்லுதல் வேண்டும். ஒருவர் விழுந்தால் அடுத்த மற்றொருவர் அக்கடமையை ஏற்பார். கடமையைப் புரிந்துகொண்டே செல்லுங்கள். துணிவுள்ள உள்ளங்கள் பிழைபடுவதில்லை. இயலுமா என்று தயங்காதீர்கள். பாடுபடுங்கள். கடவுள் நமக்குப்பின் இருப்பார். தேவி மகா சக்தி எப்போதும் நம்முடன் துணையாக இருக்கின்றாள்.

புதிய இந்தியா :

புதிய இந்தியா எழுவதாக! ஏர்க்கலப்பையைப் பிடித்துள்ள உழவர்களின் குடிசையினின்றும், மீன் பிடிப்போர் - தோல் வேலை செய்வோர் - தெருக்கூட்டுவோர் குடிசைகளிலிருந்தும், புதிய இந்தியாவை எழுப்புவோமாக. கூல வாணிகரின் கடைகளினின்றும், சிற்றுண்டி விற்போரின் சமைப்பிடத்தின் அருகிருந்தும், இந்தியத் தாய் புறப்படுமாறு செய்வோம். தொழிற்சாலைகள், கடைகள், அங்காடிகள் ஆகியவற்றிலிருந்து அவளை வெளிவரச் செய்வோம். வனங்கள் - காடுகளிலிருந்தும், குன்றுகள் - மலைகளிலிருந்தும், அவளைப் புறம்போதருமாறு செய்வோம்.

இந்தப் பொதுமக்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகக் கொடுமைகளை அனுபவித்துள்ளார்கள். ஒரு சிறிதும் முணுமுணுப்பு இல்லாமல் கொடுமைகளை அனுபவித்ததன் விளைவாக, அவர்கள் வியக்கத்தகுந்த மனஉறுதியைப் பெற்றுள்ளனர் என்றும் தீராத இடர்ப்பாடுகளை அனுபவித்தமை, தளராத நல்ல ஆற்றலை அவர்களுக்கு அளித்துள்ளது. ஒரு கவளம் புற்கையை மட்டுமே உண்டு விட்டு, உலகத்தையே அசைத்து ஆட்டிவிட, அவர்களால் முடியும். அவர்களுக்கு ஒரு பாதி ரொட்டித் துண்டைக் கொடுங்கள். இப்பெரிய உலகமும் அவர்களின் வலிமைக்குப் போதியதாக இராது.

அத்தகைய அமைதி இயல்பு-மனநிறைவு-அன்பு - பேசாத இடைவிடாத உழைப்பின் ஆற்றல் - செயலாற்றும்பொழுது வெளிப்படும் சிங்கம் போன்ற பேராண்மைத்திறன் - ஆகிய இவற்றை வேறு எங்கே காணமுடியும்? கடந்த காலத்தின் எலும்புக்கூடுகளே! அதோ-அங்கே-உங்கள் முன்னே எதிர்கால இந்தியா இருக்கின்றது. உங்கள் சந்ததியினர் உள்ளனர். நீங்கள் மறையும் கணத்திலேயே எழுச்சியுறும் புதிய இந்தியாவின் தொடக்க விழா முழக்கத்தை, நீங்கள் கேட்பீர்கள். நூறுயிரக் கணக்கான இடியோசை போன்ற குரலில், உலகம் முழுவதும் அஃது எதிரொலிக்கும்!

"குருமணிதன் தாள் வாழ்க"

சென்னை ஸ்ரீ வடபழநி ஆண்டவர் கோயிலின் முன்தோற்றமும், சந்நிதித் தெருவும்.

ஸ்ரீ பழநி ஆண்டவர் சிறப்பு

முன்னுரை :

பழநி :

பழநி என்பது முருகன் தலங்களுள் மிகவும் முதன்மையும் சிறப்பும் வாய்ந்தது. மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களைக் குறிப்பதாகக் கூறப்படும் முருகனின் ஆறு படைவீடுகளுள், பழநி (திரு ஆவி நன்குடி) மூன்றுவதாகத் திகழ்கின்றது.

முருகனின் திருவுருவங்கள் :

பழநி என்னும் பழம்பெரும் பதியில் எழுந்தருளி விளங்கும் பரமனாகிய ஆண்டவருக்கே, பழநியாண்டவர் என்று பெயர். முருகனுக்குரிய பதினாறு வகையான திருவுருவங்களுள் பழநியாண்டவர் திருவுருவமும் ஒன்றாகும். குமார தந்திரம் என்னும் ஆகம நூல், 1. சக்திதரர் 2. கந்தசுவாமி, 3. தேவசேனாபதி 4. சுப்பிரமணியர், 5. கஜவாகனர் 6. சரவணபவர் 7. கார்த்திகேயர் 8. குமாரசுவாமி 9. சண்முகர் 10. தாரகாரி 11. சேனாபதி 12. பிரமசாத்தர் 13. வள்ளி கல்யாண சுந்தரர் 14. பாலசுவாமி 15. கிரவுஞ்ச பேதனர் 16. சிகிவாகனர் என்னும் திருவுருவங்கள் முருகனுக்கு உரியன என்று மொழிகின்றது. தணிகைப் புராணம் என்னும் தமிழ் நூலும் இவற்றின் இயல்புகளை இனிதெடுத்து விளக்கியிருக்கின்றது.

பழநியாண்டவர்

இத்திருவுருவங்களுள் ஒருமுகமும் இரண்டு கைகளும் உடையவராய், வலக்கையில் தண்டாயுதம் ஏந்தி, இடக்கையை இடுப்பில் வைத்துக் கொண்டு, கோவணம் உடுத்திய நிலையில், செந்தாமரை போன்ற நிறத்துடன், நின்ற திருக்கோலத்தில் காட்சி கொடுத்தருள் பவர் ஆகிய கந்தசுவாமியே, பழநியாண்டவர் என வழங்கப்படுபவர் ஆவர். கையில் ஞானம் ஆகிய தண்டாயுதம் ஏந்தி யிருத்தல் பற்றி, இவருக்கு ஞானதண்டாயுதபாணி எனவும் ஒரு பெயர் வழங்கும்.

வைவாய் கணிச்சிப் படையென்ன
வதிவித் திடும்கோ வணத்தண்டு
கைவாய் வலத்தின் அமைத்தருளிக்
கடியில் இடக்கை பதித்தருளி
ஐவாய் வழங்கும் பொறிபுலனை
அவித்த உறுவர் இமையவர்கள்
உய்வான் இறைஞ்ச அருள் வழங்கும்
கந்தன் உருவம் தொழுதுய்வாம்

—கச்சியப்ப முனிவர்.

தண்டாயுதபாணியாகிய கந்த சுவாமிக்கு மக்களிடையிற் பழநியாண்டவர் என்ற சிறப்புப் பெயர், மிகவும் பெருவழக்காகப் போற்றி வழங்கப் பெற்று வருகின்றது.

உத்தம நிலை :

உலகியல் வாழ்க்கையில், ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்தில், என்றேனும் ஒரு நாள், பண்பட்ட மனப்பக்குவம் ஏற்பட்டு, விருப்பு வெறுப்பற்றுப் பரந்த மனப்பான்மையுடைய பற்றற்ற தன்மை உண்டாதல் திண்ணம். அந்நிலையிலேயே அவன் தன் நலம் இன்றி உலக நலம் குறித்துப் பெரிதும் உழைக்கும் உயரிய குறிக்கோள் உடையவனாக விளங்கப் பெறுகின்றான். பற்றற்ற தூய மனப் பண்புடன், உலக நலம் கருதி உழைக்கும் உயரிய பெருந்தகைமையாளனே உத்தமன் என்று போற்றப் படுவான்.

அத்தகைய உத்தமர்களாலேயே உலகம் நின்று நிலவி அழிந்துபடாமல் இருந்து வருகின்றது. எனப் புறநானூறும் திருக்குறளும் புகலுகின்றன.

இங்ஙனம் தன்னலம் நீத்து, மன்பதை நலம் குறித்துப் பற்றற்ற தன்மையுடன் மனி தன் வையத்து வாழ் வாங்கு வாழ்தல் வேண்டும் என்னும் உயரிய உண்மையினையே பழநியாண்டவர் திருவுருவம், நமக்குப் பண்புற விளக்கிக் கொண்டு திகழ்கின்றது.

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணம்

முருகப் பெருமான் குழந்தைகளுக்குக் குழந்தை வேலன் ஆகவும், இளைஞர்களுக்குப் பால சுப்பிரமணியன் ஆகவும், கலைஞர்களுக்கு ஷண்முகநாதன் ஆகவும், வீரர்களுக்குத் தேவ சேனுபதி ஆகவும், மந்த்ரோபதேசம் பெற விரும்பி மாணவ நிலையில் வழிபடும் அன்பர்களுக்குச் சுவாமிநாதன் ஆகவும், இல்லற நிலையினர்களுக்கு வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணிய சுவாமி ஆகவும், பற்றற்ற தூய ஞானத் துறவற நிலையினர்க்குப் பழநியாண்டவர் ஆகவும் பிறவாறும் விளங்கி, அவரவர்க்கு ஏற்ற நிலைகளிற் பலவேறு வகைகளில், ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணம் அறிந்து, அருள் புரிந்து காத்து வருகின்றான்.

உலகியற் பற்றிலா உணர்வு :

*"உபநிஷத காலம் தொட்டே நாம் உலகுக்கு ஒரு பெரிய அறைகூவலை விடுத்திருக்கின்றோம். "ந தநேந ந நப்ரஜயா த்யாகேநைக அமிர்தத்வம் நஷு": அழியாத் தன்மை அடைவது செல்வத்தினாலோ அன்றிச் சந்ததியினாலோ இல்லை, துறவு நெறி யுணர்வினாலேயே ஆகும்.

ஒவ்வோர் இனமும் வரிசையாக இந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டு, தங்களால் இயன்ற வரையில் முயன்று, உலகச் சிக்கல்களை ஆசாபாசங்களால் விடுவிக்க முயன்றுள்ளன. கடந்த காலத்தில் அவைகளெல்லாம் தோற்றுப் போயின. பொருளும் பதவியும் காரணமாக எழும் சூழ்ச்சி—வஞ்சகம்—துன்பம் முதலிய சுமைகளால் நலிவுற்று, அப் பழைய இனங்கள் யாவும் மறைந்தொழிந்தன. புதியனவும் கூட, நிற்க முடியாமல் தள்ளாடிக் கொண்டுள்ளன. அமைதியா போரா, பொறுமைத் தன்மையா பரபரப்புணர்வா, நல்லியல்பா வல்லியல்பா, உடல் வலிமையா அறிவு வலிமையா, உலகாயதமா ஆன்மீகமா, இவற்றுள் எது முடிவில் வெற்றி பெறும்? என்பது இனிமேல்தான் தெரியும்!

ஆனால் எவ்வளவோ காலத்திற்கு முன்பே, நாம் நம்முடைய சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டு விட்டோம். ஆகூழ்—போகூழ் இரண்டிலும், கடைசி வரையிலும், அதனையே கடைப் பிடித்தொழுகக் கருதியுள்ளோம். நம்முடைய தீர்வு: உலகியற் பற்றிலா வுணர்வும்—தூய துறவு நெறி வாழ்க்கையுமே யாகும்" எனச் சுவாமி விவேகானந்தர் அவர்கள், தம் சொற்பொழிவு ஒன்றிற் குறிப்பிடுகின்றார். அஃது ஈண்டு நாம் எண்ணி யுணர்தற்கு உரியது.

பற்றற்ற தூய துறவு நிலையே, உலகில் மனித வாழ்வின் வளர்ச்சிப் படி நிலைகளுள் முடிபாகச் சிறந்து நிற்பதாகும். * "மகவெனப் பல்லுயிர் அனைத்தையும் ஒப்ப நோக்கும்" பரந்த மனப்பான்மையும், பற்றற்ற தூய துறவொழுக்கப் பண்பும், எளிய இனிய நல்ல குழந்தையுள்ளமும், உயரிய சிறந்த பல குறிக்கோளும் வாய்க்கப் பெறுதலே, மனித வாழ்வின் உயர்வற உயர்ந்த பெருஞ் சிறப்பு வளர்ச்சி நிலையாகும். இதனை மக்களாகிய நாம் அனைவரும் எய்திச் சிறப்புறுதல் வேண்டும் என்னும் உண்மையினைத் தெள்ளிதின் உணர்த்துவதே பழநியாண்டவர் திருவுருவம் எனலாம்.

---

* "As far back as the days of the Upanishads, we have thrown the challange to the world—'Na dhanena na prajaya tyagenaike amritatwam nashuh—not by wealth, not by progeny, but by renunciation alone immortality is reached.' Race after race has taken the challenge up, and tried their utmost to solve the world-riddle on the plane of desires. They have all failed in the past, — the old ones have become extinct...we have solved our problem ages ago and held on to it through good or evil fortune, and mean to hold on to it till the end of time. **Our solution is unworldliness—renunciation.**"

—Sri Swami Vivekanandar.

* "Hinduism has given us in the form of the Sannyasin, its picture of the ideal man. The ideal of the Sannyasin has ever an appeal to the Indian mind.

—Dr. S. Radhakrishnan.

துறவும் தவமும் :

துறவு நெறி—தவ வாழ்க்கை என்னும் இரண்டின் சிறப்பும், இனையன என்று எல்லை யிட்டுச் சொல்லுதற்கரியன.

துறவே துன்பம் பலபோக்கும் !
துறவே இன்பம் பலவாக்கும் !
துறவே கொடிய தன்னலத்தைத்
தொலைக்கும் ! உயிர்கள்
தமைப் புரக்கும் !
துறவே துரிசு பல அகற்றும் !
துறவே தூய்மை உண்டாக்கும்
துறவே இறையைச் சார்விக்கும்
துறவின் பெருமை சொலல்எளிதோ ?

தவமே மேலாம் நெறியாகும் !
தவமே சித்தி பலபயக்கும் !
தவமே துறக்கம் அடைவிக்கும் !
தவமே நரனைத் தேவாக்கும் !
தவமே சிறந்த வாழ்வாகும் !
தவமே ஞானம் தனைக்கொடுக்கும் !
தவமே இறைவன் அருள்பயக்கும் !
தவத்தின் உயர்ந்த தொன்றில்லை.

இத்தகைய துறவு நெறிச் சிறப்பு, தவ வாழ்க்கையின் மேன்மை ஆகியவற்றைக் குன்றின் மேல் இட்ட விளக்கென உலகுக்கெல் லாம் உணர்த்தி நிற்கும் சிறப்புடையதே, ஸ்ரீ பழநியாண்டவர் திருவுருவம் எனலாம்.

தவநிலையோர் தெய்வம் :

இது பற்றியே ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள், தமது சிவஞான சித்தியார் பர பக்கப் பகுதியில், "தவநிலையோர் தெய்வம்" என முருகப் பெருமானைக் குறித்து மொழிந் துள்ளார். அஃது ஈண்டுச் சிந்தித்து இன்புறு தற்குரியது. ஸ்ரீ பழநி யாண்டவர் "தவநிலை யோர் தெய்வம்" எனத் திகழ்தல் குறித்தே, ஆசிரியர் நக்கீரர் நமது திருமுருகாற்றுப் படை யில், திருவாவினன் குடி பற்றிய பகுதியில்,

"சீரை தைஇய உடுக்கையர் ; சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர் ;
மாசற இமைக்கும் உருவினர் ; மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந்து இயங்கும் யாக்கையர் ; நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் ; இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் ; யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் ; கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் ; காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் ; இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் ; மேவரத்
துனியில் காட்சி முனிவர் "

ஏனைய எல்லாத் தேவர்களெல்லாம், தங்களைத் தொடர்ந்து பின்னே வரத் தாங்கள் மட்டுமே, முற்படச் சென்று முருகனைத் தொழுது மகிழ்கின்றனர் எனச் சிறந்தெடுத்துக் கூறியிருக்கின்றார் ! பழநியாண்டவர் "தவநிலை யோர் தெய்வம் "என்பதை இஃதுணர்த்தும்.

நீத்தார் பெருமை :

சுருக்கமாகக் கூறலுறின், ஆசிரியர் திரு வள்ளுவர் தம்முடைய திருக்குறளில் "நீத்தார் பெருமை" எனக் கூறிய அதிகாரத்திற்கும், "பொறி வாயில் ஐந்தவித்தான்" என இறை வனைக் குறிப்பிட வழங்கிய பொருள் பொதிந்த தொடர்க்கும், சிறந்த இனிய எடுத்துக் காட் டாகத் திகழ்வது, பழநியாண்டவர் திருவுருவம் எனக் கூறி முடித்தலும் பொருந்தும்.

முடிவுரை :

பழநி யாண்டவர் காட்சிக்கு எளியவர் ! கருணைக்கு இனியவர் ! குணம் என்னும் குன்றேறி நிற்பவர் ! "அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை, விடல் வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு" என நம்மனோர் அனைவர்க் கும் அறிவுறுத்தியருள்பவர் ! குழந்தை யுள்ளம் படைத்தவர் ! எளிதாகவும் விரைவாகவும் அருளை இனிது வழங்கும் இயல்பினர் ! அதனு லேயே அப் பெருமானை, அடியவர் உலகம் மீக்கூறிப் போற்றித் துதித்து, வழிபட்டு மகிழ்ந்து வருகின்றது. கலியுகத்திற் கண் கண்ட தெய்வம் என விளங்கி வரும் பழநி யாண்டவர்தம் பெருமை, பகர்தற்கு எளியதோ ?

—ஆசிரியர். ★

ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள்

முன்னுரை :

ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், தமிழ்நாட்டில் தோன்றியருளிய 'ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்' மிகப் பலருள் தலைசிறந்த ஒருவர். "தம்மானை அறியாத சாதியார் உளரே!" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வியந்து வினவி இரங்கியமைக்கேற்ப, அருள்நந்தி சிவம் போன்ற அரும்பெருஞ் சான்றோர்களைப் பற்றி அறிந்துகொள்ளாமலே, நம் தமிழ் மக்களுள் எத்துணையோ பல்லாயிரவர் வாழ்ந்து வருகின்றனர்! இந்நிலை மிகவும் இரங்குதற்குரியது!

தமிழ்நாட்டுச் சான்றோர்களுள் ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையில் தலைசிறந்து திகழ்ந்தொளிரக் காண்கின்றோம். இலக்கணத் துறையில் தொல்காப்பியரும், இலக்கிய (நீதி)த் துறையில் திருவள்ளுவரும், காப்பியத்துறையில் இளங்கோ அடிகளும், கவிதைத் துறையிற் கம்பரும், பக்தித் துறையில் மாணிக்கவாசகரும், வரலாற்றுத் துறையிற் சேக்கிழாரும், யோகானுபவத் துறையில் திருமூலரும் போல, நம் தமிழ்நாட்டில் தத்துவத் துறையில் தலைசிறந்த வித்தகர் என விளங்குபவர், ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் ஆவர்.

தத்துவ ஞானத் தலைவர் :

உலகம் முழுவதற்கும் உரிய உயர்ந்த தத்துவ மேதைகளாகக் கருதி மதிக்கப்பெற்று வரும் பிளேட்டோ, அரிஸ்டாட்டில், பேக்கன், ஸ்பைனோசா, வால்ட்டேர், கேண்ட், ஷோபனேர், ஸ்பென்ஸர், நியட்ஸ்கி, பெனடட்டோ குரோஸ், பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், ஜியார்ஜ் சாந்தாயனா, வில்லியம் ஜேம்ஸ், ஜான் ட்யூவி முதலிய தத்துவ நூலறிஞர்கள் (Philosophers) பலருள்ளும், மிகவும் தலைசிறந்த ஒருவராக மதித்துப் பெரிதும் போற்றத் தகுந்தவர், நம்முடைய ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் எனத் துணிந்து கூறலாம்.

உண்மையாகக் கூறலுறின், மனித நிலையில் வைகிய பிறநாட்டுத் தத்துவப் பேரறிஞர்களைக் காட்டிலும், தெய்விகப் புனித நிலையிற் சிறந்து திகழ்ந்திருந்த ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள் அவர்களின் அருமை பெருமைகள், சாலவும் வியந்து புகழ்தற்கு உரியன என்பதில் ஐயமில்லை. நம்முடைய சுவாமிகளை, நாம் "தத்துவ ஞானத் தலைவர்" எனப் புகழ்ந்து போற்றுதல், பெரிதும் பொருந்துவதாகும்.

'தண்டமிழின் மேலாம் தரம்'

சிறந்த சில நூல்களைப் படிப்பதனால், நம்முடைய வாழ்க்கை திருந்தி வளம் பல பெற்றுப் பொலிகின்றது. அத்தகைய சிறந்த சில நூல்களைப் பயிலும் வாய்ப்பு நேராதபோது, நம் வாழ்க்கை வளம் பெறாது வாடி வதங்கிக் குன்றிப் போகின்றது. "நூல்களும் நீங்களும்" (Books and You) என்னும் ஒரு சுவடியில், சாமர்செட் மாகம் (Somerset Maugham) என்னும் ஆங்கிலேய அறிஞர், தாம் படித்து மகிழ்ந்த நூல்கள் சிலவற்றைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு, "யான் இந்நூல்களைப் படித்ததனால் என் வாழ்க்கை வளம் பெறுவதாயிற்று; யான் இவற்றைப் படியாது போயிருப்பின், இப்போதுள்ள நிலையினை யான் எய்தியிருக்க மாட்டேன்" ("These are the books that I feel the richer for having read, and I think *I should not be quite the man I am, if I had not read them.*") என்று கூறுகின்றார்.

அதனைப் போலவே, தமிழ்நாட்டில் தமிழராகப் பிறந்த நாம், தமிழ்ப் பெருஞ்சான்றோராய் - தத்துவ ஞானத் தலைவராய் - விளங்கும் ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த **சிவஞான சித்தியார்** என்னும் சிறந்த ஞானப் பெருநூலைப் பயின்றுணர்ந்து கொள்ள முற்படாது போவோமாயின், தமிழ்நாட்டில் தமிழராகப் பிறந்தும், அதனாற் பெறத்தக்க பெரும் பயனைப் பெறாது, இழந்தவர்கள் ஆவோம்!

தமிழ்நாட்டில் தமிழராகப் பிறந்தவர்கள், தமிழ் நூல்கள் அனைத்தையுமே பயின்றுணர்ந்து பயன்பெறக் கடமைப்பட்டவர்களாயினும், அனைத்தையுமே கற்க முடியாத நிலையில், திருவள்ளுவரின் **திருக்குறள்**, மாணிக்க வாசகரின் **திருவாசகம்**, தொல்காப்பியர் அருளிய **தொல்காப்பியம்**, பரிமேலழகர் இயற்றிய **திருக்குறள்உரை**, சேக்கிழார் பெருமான் பாடிய **திருத்தொண்டர் புராணம்**, ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள் செய்தளித்த சிவ ஞான சித்தியார் என்னும் ஆறு நூல்களை மட்டுமாவது, கற்றுணர முற்படுதல் வேண்டும்! இவை ஆறு நூல்களும் "தண்டமிழின் மேலாம் தரம்" ஆன நூல்கள் என, அறிஞர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர்.

வள்ளுவர் நூல், அன்பர் திரு
வாசகம், தொல் காப்பியமே,
தென்னுபரி மேலழகன்
செய்தவுரை,—ஒன்னியசீர்த்
தொண்டர் புராணம்,
தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்
—ஸ்ரீ உமாபதிசிவம்,
தனிப்பாடல்.

"தொகுசித்தி":

இத் தனிப் பாடலின்கண், சிவஞான சித்தியார் "தொகுசித்தி" எனச் சுட்டப் பெற்றிருத்தல்காணலாம். அதனால், இதனை ஸ்ரீஅருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் வேதம்—ஆகமம்—உபநிடதம்—சங்க நூல்கள்—திருமுறைகள் — பிறசமய நூல்கள்—உலகியல் நூல்கள் ஆகிய அனைத்து நூல்களினுடைய தனிப்பெருஞ் சாரம் (Quintessence) ஆகத் தொகுத்துத் திரட்டி அருளிச் செய்துள்ளனர் என்னும் அருமைப்பாடு புலனாகும்.

"பார்விரித்த நூல் எல்லாம்
பார்த்தறியச் சித்தியிலே
ஓர் விருத்தப் பாதி போதும்"

எனச் சிவபோகசாரமும்,

"பாதிவிருத் தத்தால் இப்
பார்விருத்த மாக உண்மை
சாதித்தார் பொன்னடியைச்
சாரும்நாள் எந்நாளோ?"

எனத் தாயுமான சுவாமிகளும் அருளிச் செய்திருத்தல், இவ்வுண்மையை இனிது வலியுறுத்தும். "அறியாமை அறிவகற்றி, அறிவினுள்ளே அறிவுதனை, அருளினால் அறியாதே அறிந்து, குறியாதே குறித்து, அந்தக் கரணங்களோடும் கூடாதே வாடாதே குழைந்திருப்பையாக!" (சுபக்கம், 8 : 30) எனவரும் விருத்தச் செய்யுளின் பாதி மட்டுமே, தாயுமான சுவாமிகளுக்கு அவர்தம் அருட்குரவரால் உபதேசிக்கப் பெற்றது என்றும், அப்பாதி விருத்தச் செய்யுளின் பொருளுபதேசம் கேட்ட அளவிலேயே தாயுமானவர் ஞானநிட்டை கைகூடப் பெற்றனர் என்றும், அறிஞர்களால் வரலாறு கூறப்படுதலை ஈண்டு நாம் உணர்தல் வேண்டும். உணர்ந்தால், "தொகுசித்தி" என்று சுட்டிய தன் உண்மை, நமக்குத் தெற்றென மேலும் இனிது விளங்கும்.

சித்தியார் சிறப்பு:

ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் செய்தருளிய சிவஞான சித்தியார், சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் மிகவும் தலையாயது. சொற் சுருங்கிப் பொருள் விரிந்து தெளிவுமிக்குத் திகழும் வகையில், 'அறிவு நூல்களின் முடிபெலாம் அகத்தடக்கி', ஆசிரியர் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் என்னும் செந்தமிழ் ஞானத் திருநூலைத் தழுவி, அதன் வழி நூலாக அமைந்த பெருமாண்புடையது சிவஞான சித்தியார்.

திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்

எனப் பாரதியார் பாடியதற்கு ஏற்ப, மேலை நாட்டார் இந்நூலைக் கற்றுணர முற்படுவ ராயின், இதன் அருமை பெருமைகளை இனி துணர்ந்து சாலவும் தலைவணங்கிப் போற்றுவர் என்பதில் ஐயமில்லை.

சிவாகமப் பொருள்களின் உரையாணி :

சிவஞான சித்தியார், தமிழ் மக்களின் சமய தத்துவ உண்மைகளை விளக்கும் தன்னிகரற்ற நூலாகத் தனிமேம்பாடு பெற்றுப் பிறங்குகின் றது. இதனைச் "சிவாகமப் பொருள்களுக் கெல்லாம் ஓர் உரையாணி" என ஆசிரியர் சிவ ஞான சுவாமிகள், பெரிதும் புகழ்ந்து போற்றி மகிழ்ந்தின்புறுகின்றார்.

இலக்கண இலக்கிய எழில்வளங்களும், தருக்கநெறி முறைச் சிறப்புக்களும், சமய நெறித் தத்துவக் கொள்கைகளின் திட்பநுட்பங் களும், திருமுறை நூல்களின் செம்பொருட் கருத்து நலங்களும், யோக ஞானனுபவ உண் மைச் செய்தித் திறங்களும் பிறவுமெல்லாம் செறிந்தொளிர்ந்து, சிவஞான சித்தியார் அறி வின்ப விருந்தாய்ச் சுவை துளும்பித் திகழா நிற்கின்றது. சிறந்துயர்ந்த இனிய எளிய செய்யுள் நடையில் இத்துணைப் பலதிற எழில் நலங்களும் ஒருங்கியைந்து இனிதமைய இயற் றப் பட்டுள்ள பிறிதொரு நூலை, வேறு பிறிதெங் கணும் நாம் காண்டல் அரிது.

தமிழ்மொழிப் புலமைத் துறையில் "நூலா ருள் நூல்வல்லார்" எனப் பிறங்க விரும்பும் எவரும் இதனை இன்றியமையாது கற்றுணரற் பாலராவர் !

பல்கலைக் குரிசில் :

அருள் நந்திசிவம் 'சகலாகம பண்டிதர்' மட்டுமே யன்றி, ஒரு சிறந்த 'பல்கலைக் குரிசில்' (Versatile genius) எனவும் விளங்கி யிருந்திருக்கின்றார். மந்திரம் யோகம் மருத்துவம் இரசவாதம் முதலிய பல கலைகளில், அவர்க்கு நுணுகிய பேருணர்வு அமைந்திருந்தது எனத் தெரிகின்றது. இறைவன் "இந்தனத்தின் எரிபோல் மந்திரத்தின் வந்துதிப்பன்" என்றும்; "...அஞ்செழுத்தை விதிப்படி உச் சரிக்க மதியருக்கன் அணையரவம் போல் தோன்றும் ஆன்மாவில் அரனே" என்றும் பிறவாறும்; ஆங்காங்கே மந்திரங்களின் இயல்பு பற்றி அருள்நந்திசிவம் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

இவ்வாறே இரசவாதம் பற்றிய செய்தி களை, "செம்பிற் காணலுறும் களிம்பு இரத குளிகை பரிசிக்கக் கழியும்"; "செம்பு இரத குளிகையினாற் களிம்பற்றுப் பொன்னாய்ச் செம் பொனுடன் சேரும்"; "அருங்களங்கம் அறுக்கும் அக்குளிகை தானும் பொன் ஆகா தாகும்" என்று ஆங்காங்கே உவமை கூறிச் சுட்டிச் செல்லுதலின், அருள்நந்தி சிவத் திற்கு இரசவாதம் முதலிய கலைகளில் இருந்த உணர்வு புலனாகின்றது.

தோற்பாவைக் கூத்து, தொல்லை மரப் பாவை இயக்கும் (214); நாடகம் நடித்தல் (164); அதன்கண் ஒருவனே இராவணாதி பாவகம் உறுதல் (87); பார்ப்பாய வேடம் கட்டி ஆடும் பரிசு (214) முதலிய பலப்பல செய்திகளையும், ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரியர் குறிப்பிடக் காண்கின்றோம்.

ஈதொன்றோ! இவர்க்குச் சோதிடக் கலை யிலும் நல்ல புலமை யிருந்ததென்பது,

"பழுதி லாமறை கண்ட நூல்பழுது
இன்றி யுண்டு; அது பாரின்மேல்
மொழிவர் சோதிடம் முன்னி, இன்னது
முடியும் என்பது முன்னமே"

என வரும் பரபக்கச் செய்யுளினாற் புலனா கின்றது. இவர்தம் மருத்துவக் கலைப் பயிற்சி யின் மாண்பினை,

மன்னுளே சிலவி யாதி
மருத்துவன் அருந்தி யோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித்
தீர்த்திடும்; சிலநோய் எல்லாம்
கண்ணிய கட்டிய பாலும்
கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்;
அண்ணலும் இன்ப துன்பம்
அருந்தியே, வினைஅ றுப்பன்!

என வரும் சிவஞான சித்தியார் செய்யுள், தெளிவுறக் காட்டுகின்றது. உயிர்கள் இன்ப துன்பங்களை நுகருமாறு செய்து, இறைவன் தனது அறக்கருணையாலும் மறக்கருணையாலும்

முறையே உயிர்களின் நல்வினை தீவினைகளை அறுத்துத் தீர்த்து அருள் புரியும் தன்மையினை, இச் செய்யுளால் எத்துணை அழகுற விளக்கி யருள்கின்றார் ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள்!

"வண்டுகள் ஆகி மாறும்
மயிர்க்குட்டி; மற்றோர் செந்துப்
பண்டைய உருவந் தானே
வேட்டுவ னுய்ப்பி றக்கும்"

என்றும்;

"இரங்கிய வாரணம் ஆமை
மீன் அண்டம் சினையை
இயல்பினொடு பரிசித்தும்
நினைந்தும் பார்த்தும்
பரிந்து இவைதாம் ஆக்கும்"

என்றும் போதரும் சுபக்கச் செய்யுட்களால் (சுபக்கம்: 134, 328), இஞ்ஞான்றைச் சிற்றுயிர் நூற்றுறைகளிலும் (Biology), ஸ்ரீ அருள்நந்தி சிவம் கொண்டிருந்த ஈடுபாட்டுணர்வை இனிது தெளியலாம்.

இவ்வாற்றால், ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள், இணையற்றுச் சிறந்துயர்ந்த ஒரு பெரும் 'பல்கலைக் குரிசில்' என விளங்கியவர் என்னும் உண்மை, இனிது தெளியப்படுகின்ற தன்றோ?

பரந்த உளப்பான்மை

ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் செந்தமிழ்ச் சங்க நூல்கள், திருமுறைச் செம்பொருள் நூல்கள் ஆகிய வற்றிலும், மிக்க ஈடுபாடும் தேர்ச்சியும் வாய்ந்தவர். பிற சமய தத்துவ நூலாசிரியர்கள் ஒருசிலர் போல, இவர் குறுகிய நோக்கம் (Parochialism) சிறிதும் உடையவர் அல்லர்! எல்லாச் சமய நூல்களையும் இவர் இனிது ஆராய்ந்து கற்றுணர்ந்திருந்தார். சமயச் சச்சரவுகளையும் பூசல்களையும் சற்றும் விரும்பாதவர் இவர்! இவர்தம் காலத்தில் சமய வாதங்கள் பெருகி யிருந்தன! காதி மோதி வாதாடும் நூல்கற்றிடுவோர் பலர் இருந்தனர்! 'தர்க்கமொடு உத்தரங்களினுற் சமயம் சாதித்து' ஒழுகுவோர் பலர் வாழ்ந்திருந்த காலம் அது! எனினும், எல்லாச்சமயங்களையும் சோபான முறைப்படி, ஏற்ற பெற்றி இனிது தழுவிக்கொண்டு மகிழும் சமரச நோக்கும், பரந்த உளப்பான்மையும் (Catholicity of Mind) உடையவராக அருள் நந்தி சிவம் விளங்கினார்!

* "ஒருதலைப் பட்ட தத்துவக் கொள்கைகள் யாவும், என்றும் அரை குறை யுண்மையையே கூறுவன வாகும் என்பதனைக் கருத்தில் இருத்திக் கொள்ளுங்கள். கடவுள் இவ்வுலகத்தைக் கடிய கொடிய தருக்கநூற் பயிற்சியாகப் படைத்திலர்; இனிய நல்ல இசையொழுக்கமாகவே படைத்தருளியுள்ளனர். பல்வேறு வகையான வேற்றுமைகளின் எல்லையற்ற ஒருமைப்பாடாகவே இவ்வுலகம் அமைந்துள்ளது. கட்டற்று, முழுவதாகவும் உள்ள இவ்வுலகின் உண்மை இயல்பை, உயிரற்ற தருக்க நெறி முறைகளால் வரையறுத்துச் சொல்லுதல் இயலாது. ஒரு சிறந்த சமயமானது எங்ஙனம் தன்பாற் பிற எல்லாச் சமய உண்மைகளையும் ஏற்றுக் கொள்ளுகின்றதோ, அங்ஙனமே ஒரு சிறந்த தத்துவக் கொள்கையானது, ஏனைய எல்லாத் தத்துவங்களின் உண்மைகளையும் உடன்பட்டு ஏற்றுத் தழுவிக் கொண்டு, அவ்வவற்றிற் குரிய இடத்தினை முறையே அளிக்கின்றது" என்று ஸ்ரீ அரவிந்த மகரிஷிகள் கூறும் கருத்து, ஸ்ரீ அருள்நந்தி சிவத்திற்கும் உடன்பாடு உடையதேயாகும். இதனை,

"ஓது சமயங்கள், பொருளுணரும் நூல்கள்,
ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் உள பலவும்;
இவற்றுள் யாது சமயம்? பொருள் நூல் யாது?
இங்கு என்னில், இது ஆகும் அது அல்லது
எனும் பிணக்கது இன்றி, நீதியினால் இவை
யெல்லாம் ஓரிடத்தே காண நின்றதுயாதொரு
சமயம், அது சமயம்! பொருள் நூல்!...(சுபக்கம், 265)

என அவர் அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்! இஃது அருள்நந்தி

* "Remember that one-sided philosophies are always a partial statement of truth. The world, as god has made it, is not a rigid exercise in logic but like a strain of music, an infinite harmony of many diversities, and its own existence, being free and absolute, cannot be logically defined. Just as the best religion is that which admits the truth of all religions **so the best philosophy is that which admits the truth of all philosophies and gives each its right place."**

—**Sri Aurobindo,**
Yoga and its Objects.

சிவத்தின் பரந்த உள்ளப் பான்மையை அறிவிக்கும் சிறந்த சான்றாகும்.

வாழ்க்கை நெறிப்போக்கு :

கவிஞர்கள் தம் நூல்களில் இடையிடையே பாடிச் செல்லும் பொருள் பொதிந்த மொழிகளால், அவர்களின் வாழ்வியல் நெறிகளையும் கருத்துக்களையும் நாம் உணரப் பெறலாம் என ஆராய்ச்சி யாளர்கள் கூறுவர்.

"We are such stuff
As dreams are made on ;
and our little life
Is rounded with a sleep"

என்பன போன்று வரும் கவிதைப் பகுதிகளால், அவற்றைப் பாடிய ஷேக்ஸ்பியரின் வாழ்க்கைத் தத்துவமும், மனப்பான்மையும் இத்தகையன என்று கருதி யுணரலாம் என அறிஞர்கள் கூறுவதுண்டு.

அம் முறையிற் கருதி ஆராயலுறின், ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகளை நாம் நேரிற்காணும் பேறு பெற்றிலோ மாயினும், அவர் தம் வாழ்க்கை நெறிப் போக்கு இத்தகைய தாக இருந்திருத்தல் கூடும் என நாம் ஒருவாறு உணர்தற்கு வாயில் உள்ளது.

அவர் படிக்கும் நூல்கள் சிவாகமங்கள்; அவர் பிறர்க்கு எடுத்து இயம்புவன, பதிபசு பாசம் பற்றிய விளக்கங்கள்; அவருடைய தொழில், இறைவன் திருவடிகளை வழுத்துதல்; எப்பொழுதும் அவரால் விலக்கப் பெறுவன, காமவெகுளி மயக்கங்கள் ஆகிய தீய இயல்புகள்; அவர் விரும்பி அடைய முயலும் பொருள் இறைவனின் திருவருள்; மும்மலங்களை ஒழித்து, நின்மலனாகிய இறைவனுடன் இரண்டறக் கலத்தலே, முத்தி என்பது அவர் கருத்து. இங்ஙனம் அவர்தம் சிறந்த இயல்பினை, ஒருவாற்றான் நாம் உணர்தற்குத் துணைபுரிவது, பின்வரும் சிவஞான சித்தியார் செய்யுள் ஆகும்.

படிக்கும் நூல்கள் சிவாகமம்; பசு
பாச மோடு பதித்திறம்
எடுத்தியம் புவது; ஈசன் வார்கழல்
ஏத்திடும் தொழில்; என்றுமே
விடுத்திடும் பொருள் காமம் ஆதிகள்;
வேண்டிடும் பொருள் ஈண்டருள்;
முடித்து மும்மலம் விட்டு, நின்மல
னோடு நின்றிடல் முத்தியே !

—பரபக்கம் 63.

எழில் ஞான பூசை :

ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், ஒரு சிறந்த சிவபூசைச் செல்வர்! இறை வழிபாட்டு முறைகளை யெல்லாம் உலகுக்கு வகுத்துணர்த்திய சான்றோர் அவர்! அத்தகைய அவர், நாம் இறைவனைக் கன்மம் தபம் செபம் தியானம் முதலிய வகைகளிற் பூசித்து வழிபடுதல் முறையே யாயினும், அவை யெல்லா வற்றையும் விட, ஞானபூசை செய்தலே மிகவும் நலம் பயக்கும் என்றும்; "ஞானபூசை" யாவது, மெய்ப்பொருள் நூல்களை ஓதலும் ஓதுவித்தலும், நற்பொருளைக் கேட்டலும் கேட்பித்தலும், செம்பொருள்களைச் சிந்தித்தலும் ஆகிய ஐந்தையும் செய்தல் என்றும்; இம்மை மறுமைப் போகங்களை மட்டுமே நுகர்வித்துக் கழியும் பிறவகைப் பூசைகளைப் போலாது, ஞான பூசையானது நம்மை இறைவனடி நிழலில் அடைவிக்கும் என்றும், நமக்கு அறிவுறுத்தியருள்கின்றார் !

"ஞான நூல் தனை ஓதல், ஓது வித்தல்,
நற்பொருளைக் கேட்பித்தல்,தான்கேட்டல், நன்கு
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்,
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை"

—சுபக்கம், 275

முடிவுரை :

ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், இங்ஙனம் சிறந்தெடுத்துக் கூறியுள்ள "எழில் ஞான பூசை"யினை, நாம் அனைவரும் இனிது செய்ய முற்படுவோமாக! திருமுறைகள் ஓதுதல், சித்தாந்த சாத்திரங்கள் பயிலுதல் ஆகிய இவற்றினும் சிறந்த ஞானபூசை வேறு பிறிதொன்றில்லை ஆகலின், நாம் அவற்றை ஆராய்ந்து பயின்றேறுதி நலம்பெற முற்பட்டு, நம் சித்தாந்தச் செந்நெறியைச் செவ்விதின் வளர்த்துக் காத்துப் போற்றியுய்யத் தலைப்படுவோமாக !

[சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 58 ஆம் ஆண்டு விழாச் சார்பில், புதுவை ஸ்ரீவேதபுரீசுவரர் கோயிலில், 27-12-63 வெள்ளிக்கிழமையன்று, நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவிய சுருக்கம். —ஆசிரியர்]

சிவஞானபோதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.,L.T., காஞ்சிபுரம்.

ஒன்பதாஞ் சூத்திரம் :

தவமுதிர்ச்சியுடையார்க்கு, உயிருக்குயிராயிருந்து உணர்த்தி வரும் முதல்வனே ஞான குருவாய்த் தோன்றுவன்; தோன்றி, தத்துவங்களைச் சார்ந்து நிற்கும் உயிர்க்கு அத் தத்துவங்களாகிய பாசம் பகைப் பொருளாம் எனவும், பதிப் பொருளே உறவு எனவும் உணர்த்துவன்; அவ்வறிவுரையைக் கேட்டுணர்ந்த பக்குவான்மா பாசத்தை விட்டுப் பதியை அணைந்து ஒன்றியின்புறும்—என்னும் கருத்துக்கள் எட்டாஞ் சூத்திரத்துக் கூறப்பட்டன.

இங்ஙனம் ஆசான் உரைத்ததைக் கேட்ட அளவிலே தம்மையும் தலைவனையும் தெளிய உணர்ந்து மாறிலா வீடு பேறு எய்துவோர் சிலர்; மற்றும் பலர் கேட்ட அளவானே தெளிவு பெற மாட்டார். தம்மையும் தலைவனையும் பொதுப்பட உணர்தலும், பின்னர் இரட்டுற உணர்தலும், முடிவில் தெளிய உணர்தலும் என்னும் படி முறையால் முடி நிலை மெய்யுணர்வு எய்தப் பெறுவர். அவர்க்குக் கேட்டல் மாத்திரம் போதாது; கேட்டதனைச் சிந்தித்தலும், அதனைத் தெளிதலும், தெளி நிலையில் தம் உணர்வை நிறுத்துதலும், ஒன்றன்பின் ஒன்றாக, நிகழ்தல் வேண்டும். அன்னோரை நோக்கி, சற்குரவன் அறிவிக்கக் கேட்டதனைச் சிந்தித்து உணரும் முறையை விளக்குவது ஒன்பதாஞ் சூத்திரம். பொதுப்பட உணர்தலை உருவம் எனவும், இரட்டுற உணர்தலைக் காட்சி (தரிசனம்) எனவும், தெளியக் காண்டலைச் சுத்தி எனவும் குறியிட்டு வழங்குதல் சித்தாந்த மரபு.

எட்டாம் சூத்திரம், கேட்டல் ஆமாறு கூறித் தத்துவ சுத்தி வாயிலாகச் சிவ ரூபத்தில் நிகழும் ஆன்ம தரிசனம் உணர்த்திற்று எனவும், ஒன்பதாஞ் சூத்திரம் ஆன்ம சுத்தியைப் பயக்கும் சிவ தரிசனம் உணர்த்துவது எனவும் கொள்ளப்படும். இவற்றின் நுட்பங்களைப் பின் ஒருவாறு விளக்க முயல்வேன்.

'ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி;
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதி; விதி எண்ணும்
அஞ்செழுத்தே'

என்பது ஒன்பதாஞ் சூத்திரம்.

குறையறிவாகிய பசு ஞானத்தாலும் பாச ஞானத்தாலும் உணரப்படாத முதல்வனைச் சிவ ஞானத்தால் உன் அறிவில் நாடு; சிவ ஞானம் எப்படி விளங்கும் எனின், பாசம் எனப்படும் உலகம் அனைத்தையும் கானல் நீர்போல நிலையாதன எனமதித்து அவற்றிற் பற்றுச் செய்யாது நீப்பின், அப்பற்றறுதியில் உன் உணர்வில் பதியை அறிவிக்கும் ஞானம் பிறவி வெப்பத்திற்குத் தண்ணிய நிழல் போலத் தோன்றும். அதனாற் சிவமாகிய ஞேயத்தைக் காணும் காட்சி சலியாதிருத்தற் பொருட்டு இங்கு விதித்தபடி திருவைந்தெழுத்து எண்ணப்படும்—என்பது சூத்திரத்தின் பொருணிலை.

ஊனக்கண் — குறையறிவு; ஊனம் — குறைவு, கண்—அறிவு. பாசம்—பாசத்தால் விளங்கும் அறிவு. ஞானக்கண்—சிவஞானம். நாடி—நாடு, ஏவல் ஒருமை முற்று. உராத் துனைத் தேர்—பேய்த் தேர் எனப்படும் கானல் நீர், பரவுதற் கண் விரைவுள்ள தேர்—என விரித்து உணரப்படும். உரா—உரவுதல், பரவுதல். துனை—விரைவு, வேகம்.

விதி—பதியைப் பாசம் ஒருவுவதால் விளங்கும் ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி என மேலே விதித்தபடி; ந, ம ஒருவிச் சிவ்வை வவ்வால் யவ்வில் நாடுக என்றபடி. அங்ஙனம் நாடுதலால் உளதாம் நிலை.

ஆசின்நவா நாப்பண் அடையா தருளினல்
வாசியிடை நிற்கை வழக்கு

என்னும் திருவருட்பயனல் உணர்த்தப் படுவது.

எண்ணுதல்—பிறர் செவிக்குக் கேட்க எண்ணும் வாசகம், நாப்புடை பெயரும் அளவில் பிறர் செவி கேளாமை எண்ணும் உபாஞ்சு, மனத்தால் நினைக்கும் மானதம் என மூவகைப்படும். ஈண்டுக் கூறியது மந்திரத் தாற் குறிக்கப்படும் பொருணிலையில் அறிவை நெறிப்படுத்து உய்ப்பதாய சுத்த மானதம் என்பது உணரத்தக்கது.

"ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது", "அந்நெறியே சென்றங்கு அணைந்தவர்க் கெலாம்—நன்னெறியாவது" என்னும் அருளுரைகள், சுத்தமானதம் பற்றியவையாதல் காண்க. இனி, மூவகை ஞானம் பற்றிய சிறு விளக்கம் தரத்தக்கது: உயிர்க்கு, பாசமாகிய தத்துவங்களைச் சார்ந்தபோது விளங்கும் அறிவு பாச ஞானம்.

பாசமாகிய அத்தத்துவங்களின் இயல்பைத் தனித் தனிச் சுட்டி யறிந்து, அவை தன்னால் தொழிற்பட்டுத் தன்னை மயக்கு மாற்றை உணர்ந்து, அவை தனக்கு வேருய்க் கீழ் உள்ளவை என அறிந்து, அவற்றின் நீங்கும் போது, ஆன்மாச் சுட்டறிவு நீங்கித் தன் வியாபக நிலையை உணரும். அவ்வுணர்வு நிலையில், தத்துவ சுத்தியால் பாசம் நீங்கினும், அவற்றைச் சார்ந்து யான் எனது எனச் செருக்கி வந்த பசுத்துவ வாதனை நீங்காமையால், அது தன்னை முதற் பொருள் (அஹம் பிரம்மம்) என உணரும். இவ்வுணர்வு நிலை ஆன்மாவின் இயல்பைப் பொதுப்பட உணர்வதாகிய ஆன்ம ரூபம். இவ்வுணர்வு தோன்றும் போது அதுவரை நிகழ்ந்து வந்த சுட்டறிவாகிய பாச அறிவு அறியாமையாய்க் கழியும்.

இந்நிலை நின்ற உயிர்க்கு ஞான குரவன் பின்வருமாறு திருவருளின் உண்மையை அறிவுறுப்பன் :—

"அன்றுமுதல் இன்றளவும்
அண்ணல் அறிவிப்பதன்றி
இன்றறிவேன் 'நான்' என்
றியம்புவதென்?

என்றும்,

அவத்தை தனில்உணர்த்தி
ஆங்(கு)அருத்தி இன்றித்
தவத்தில் உணர்த்தினர்ஆர் தான்?"

என்றும்,

"உன்னறிவை நீயே உணர்வையே ஆமாகில்
இந்நெடுநாள் பாசத்(து) இயையாயே—
உன்னறிவை
நீங்கா அறிவாகி நீரும் இரதமும்போல்
ஆம்காண் அரனுர் அருள்"

—துகளறுபோதம்

இங்ஙனம் உணர்த்தப் பெற்ற ஆன்மாத் தன் அறிவுக்கு வியஞ்சகமாகத் திருவருள் இருந்து வருதலை உணரும். இவ்வுணர்வு நிலை சிவ ரூபம் எனப்படும். இதனல், நான் முதல் என நின்ற அறிவு அறியாமையாய்க் கழியும்; முதல்வனுக்கு உரிய செயல் அனைத்தும் தன்னாற் செய்யக் கூடும் என்ற உணர்வு எழும். இஃது ஆன்ம தரிசனம் எனப்படும். இங்கும் ஆன்மா முதல்வனுக்குரிய செயலைத் தன்னுடையது என நிற்றலின், இவ்வுணர்வும் எனது எனும் செருக்காய மருட்கை உணர்வு எனவே படும். இவ்வுணர்வு நிலையே முடி நிலை எனப் பேசும் பேச்சே, சிவ சமவாதம் எனப்படும்.

நான் முதல் என நிற்கும் அஹம் பிரம்ம உணர்வும், முதல்வன் செயலெல்லாம் எனக்குக் கைகூடும் என்னும் சிவ சம உணர்வும் மேற் கூறியபடி, யான் எனது என்னும் செருக்காய மருட்கை உணர்வாகலின், இவை இரண்டுமே பசு ஞானம் எனப்படும்; அஃதாவது பசுத்துவ வாதனை பற்றி உளதாகும் ஞானம்.

இனி, நெருப்பிற் காய்ச்சிய இருப்புக் கம்பியால் சுடும்போது சுடுவது நெருப்பே யன்றி இரும்பன்று; அதுபோல, என்பு பெண்ணுருவாக்கல், அரவந் தீண்டியதனல் இறந்த மகனை உயிர்ப்பித்தல், முதலையுண்ட பாலனை மீட்டல் முதலிய செயல்கள் அடியவர்பால்

நிகழினும் அவை யெல்லாம் முதல்வன் செயல் எனவே கொள்ளப்படும். அங்ஙனம் கொண்டு, "அவனன்றி ஓரணுவும் அசையாது" எனவும், "நஞ்செயலற்றிந்த நாம் அற்ற பின் நாதன் தன் செயல்தானே என்றுந் தீ பற— தன்னையே தந்தான் என்றுந் தீ பற" எனவும் முதல்வன் திருவருளின் வல்லபத்தை உணர்தல் சிவ தரிசனம் எனப்படும். இதனால் தன்னைச் சிவ சமம் என அறிந்து நின்ற அறிவு அறியாமையாய்க் கழியும்; ஏகனாகி இறைபணி நிற்றல் எனப்படும் ஆன்ம சுத்தி உளதாகும்.

இந்நிலையில், "சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது" எனவும், "இரந்திரந்துருக என் மனத்துள் எழுகின்ற சோதியே" எனவும் எழுந்த அருண்மொழிகளாற் குறிக்கப்படுவதாகிய அருளொளியே சிவஞானம் எனப்பட்டது. அவ்வருளொளியில் அடங்கி நின்று உணரும் உணர்வே நன்னலம் பெற நிறைந்த ஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம், நிலைப்பட்ட மெய்யுணர்வு என்றெல்லாம் போற்றப்படும் பரஞானம் ஆகும்.

இங்கு "அறிதோ றறியாமை கண்டற்றால்" என்றபடி, பசு ஞானம் எய்தப் பெற்ற வழிப் பாச ஞானம் அறியாமையாய் முடிதலும், சிவ ஞானம் எய்திய வழி அப் பசு ஞானமும் அறியாமையாய் முடிதலும், அவ்வாறு சிவ ஞானத்தை மாற்றுதற்கு அதற்கு மேலாய் ஒரு ஞானம் இல்லாமையால் அதுவே முடி நிலைத் தெளிவுணர்வாய் நிலைப்பட்ட மெய்யுணர்வு எனப்படுதலும் உளங்கொளத் தக்கன.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப(து) அறிவு"

என்ற இடத்துச் செம்பொருள் காண்பது எனப் பட்ட அறிவே சிவஞானம் ஆம்; ஆண்டுப் பிறப்பென்னும் பேதைமை என்றது அச் சிவ ஞானத்தாற் கண்டித்துக் கழிக்கப்படும் அஹம் பிரம்ம உணர்வும், சிவ சமவுணர்வுமாகிய பசு ஞானத்தை. "மருளான் ஆம் மாணாப் பிறப்பு" "மருள்நீங்கி மாசறு காட்சியவர்க்கு" என்னும் இடங்களில் மருள் என்றது பாச ஞானத்தை.

இச் சூத்திரத்து, 'ஊனக் கண் பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி' என்பது ஓர் அதிகரணம், 'உராத் துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத் தண்ணிழலாம் பதி' என்பது ஓர் அதிகரணம், 'விதி எண்ணும் அஞ்செழுத்தே' என்பது ஓர் அதிகரணம்; ஆக மூன்று அதிகரணங்களை உடையது இச் சூத்திரம்.

முதல் அதிகரணம்

1. வார்த்திகம்: ஈண்டு அம் முதலை ஞானக் கண்ணாலே காண்க என்றது; அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான்.

ஆறும் சூத்திரத்தில் முதற்பொருள் வாக்கு மனங்களுக்கு அதீதமாயும் ஒற்றுமைப்பட்டு உணரும் அனுபவ ஞானத்திற்கு விடயமாவன் என்பது துணியப்பட்டது. வாக்கு என்பது பாச ஞானத்தையும், மனம் என்பது பசு ஞானத்தையும் குறிக்கும் என்பதும் ஆண்டே உணர்த்தப்பட்டது. ஆதலால் அதனை ஏதுவாகக் கொண்டு, ஈண்டுச் சிவஞானக் கண்கொண்டே முதல்வன் காணத் தக்கவன் என்பது மெய்ப்பிக்கப்படுகின்றது.

பகற் காலத்து உண்ணான் ஒருவன் உடல் பருத்து இளைப்பின்றிக் காணப்படின், அவன் இரவிற் கரந்து உண்பான் என்பது கருதி உணரப்படும். இவ்வாறு உண்மையை உணரும் முறையை அருத்தாபத்தி அளவை என்பர் எண்ணர். முதல்வன் பசு பாச ஞானங்களுக்கு எட்டாதவன் ஆகியும் ஒருவாற்றான் உணரவே படுவன் எனின், அவன் உணரப்படுதல் அவன் அருளே கண்ணாகக் காணும் காட்சியாகிய சிவஞானக் காட்சிக்கே என்பது துணியப் படும்; இது மேலே காட்டிய எடுத்துக்காட்டுப் போன்று அருத்தாபத்தி என்பது உணரப் படும்.

2. (அ) இங்குத் தன்னாற் கூறப்படும் பொருள்: முதற் பொருள் சிவ ஞானத்தாலே ஒற்றுமைப்பட்டு நின்றே உணரப்படும். [ஒளியில்லாத பொருள்களை ஒளியின் உதவியால் காண்போம்: உதாரணமாக ஒளியில்லை எனின், எதிரில் உள்ள இக் கட்டுரையைப் படிக்க முடியாது. ஆயினும், சூரியனைக் காணும்போது அதன் ஒளியின் துணை கொண்டே காண்கின்றோம்; சூரியனை விளக்க வேறொரு விளக்கைத் தேட மாட்டோம்; யாதேனும் ஒரு

விளக்கைக் கொண்டுவரினும் அதன் ஒளி ஞாயிற்றின் ஒளி முன் முனைந்து தோன்ற மாட்டாது. அதுபோல, முதல்வன் அருள் ஒளியுள்ள பொருள்; அருளொளி அவனுக்குச் சொருபமாகவும் குணமாகவும் உள்ளது. ஆதலால், அவ்வருளொளியைப் பெற்றே அதற்கு முதலாகிய முதல்வனைக் காண்டல் வேண்டும் என்பது கருத்து.]

(ஆ) ஐயப்பாடு: முதல்வன் பாசபசு ஞானங்களால் உணரப்படுவானோ? சிவஞானம் ஒன்றுனே உணரப்படுவானோ?

(இ) பிறர் கூறும் பக்கம்: முதல்வன் பாச ஞானத்தாற் காணப்படான் என்பது வேண்டும். வீட்டு நிலையில் ஆன்மாவிற்குச் சுட்டுணர்வு நீங்கி வியாபக வுணர்வு விளங்குகிறது என்பது ஆகம நூற்றுணிபு; ஆதலால், அவ் வியாபக உணர்வுக்குக் கோசரமாவன் என்பதே பொருத்தமாவது. இவ்வாறு கூறுவோர் சிவ சமவாத சைவர்.

(ஈ) மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு: ஆன்மாப் பிற பொருள்களை அறிவது போலத் தன்னை யறியாது. ஒரு பொருளை அறியும் போது, அப்பொருளின் விளக்கத்தைப் பெறுவதுதான் எனப் பொருண்மை பற்றியே தன்னை யறியும்; அறியப்படுவதொரு பொருள் இல்லாத போது தன்னறிவு நிகழாது; நிகழாமையின், தன் இருப்பையும் உணராது. இங்ஙனமே முத்தி நிலையினும், தன்கண் விளங்கும் அருளொளியைப் பற்றி அதில் அறிவடங்கி நிற்கப் பெற்று முதற் பொருளை உணர்ந்த பின்தான் அவ்வாறு முதல்வனை அறிவது தானே எனத் தன்னையும் அறியும்; இல்லையேல் தன்னை வியாபக வுணர்வுடையதாக அறிவதில்லை. இவ்வாறு தலைவனை அறிந்த பின் தன்னை அறிவதாகிய (சிவ ரூபத்தில் ஆன்ம தரிசனம் பெறும்) ஆன்மாத் தன் அறிவால் தலைவனைக் காணும் என்றல் பொருந்தாது.

அஃது அறியுமாறு: யான் யார்? நாடியோ, என்போ, பிறவோ? எனைத் தேடியும் அறியகிலேனே என முட்டி; இவ்வாறு ஆராய்ந்து வந்த என் அறிவில் தோன்றுத் துணையாய் முதல்வன் திருவருள் உடனின்று உணர்த்தினமையான் அன்றோ இவ்வாராய்ச்சி எனக்கு உளதாயிற்று; அதுவே இனி என்னைத் தெளிவித்தற்கு உரியது என இரை தேர் கொக்கு ஒத்துத் தன் முனைப்பின்றி இருக்கப் பெறின் சிவஞானம் அவ்வமைந்த உணர்வில் தெளிவுணர்வாய் வெளிப்படும்; அவ்வான் உணர்வால் அரனைக் கண்டு, பின் அவ்வாறு காணும்தான் சுதந்தர ஈனன் என்பதை உணர்வது ஆன்மா.

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடிஎனை அறியேன்; தேர்ந்தவகை
— நாடி அரன்
தன்னாலே தன்னையும் கண்டு தமைக்காணுர்
என் ஆம் எனஅறிவார் இன்று.

“அவமாய தேவர்
அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை
ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர்
நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமானவா பாடித்
தெள்ளேணங் கொட்டாமோ”

என்னுந் திருவாசகமும்,

“மேவிய புன்மயிர்த் தொகையோ? அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ? தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ? புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ!....
இன்ன(து) யானென் றறியேன்; என்னை
ஏதினும் தேடினேன்; யாதினும் காணேன்:
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத! பொருவிடைப் பாக!
மங்கை பங்க! கங்கை நாயக! நின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலம் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையும் கண்டேன்:
காண்டலும்
என்னையும் கண்டேன்: பிறரையும் கண்டேன்;
நின்னிலை அனைத்தையும் கண்டேன்: என்னை
நின்னைக் காணு மாந்தர்
தன்னையும் காணுத் தன்மை யோரே”

என்னும் பட்டினத்துப்பிள்ளையார் திருவகவலும் இங்குக் கூறும் பொருளுக்கு மூல மறையாதல் உளங் கொள்க.

ஒருதடை : ஆன்மா நாடியோ, என்போ என்றாற்போலப் புறப்பொருளாகிய தத்துவங்களையும் அவற்றின் காரியங்களையும் அறியும் என்றீர். எதிரே இருக்கும் பொருளைக் காணும் கண், முதுகுப் பக்கம் உள்ள பொருளையும் திரும்பிக் காணுதல் போல, புறப் பொருளாகிய தத்துவ தாத்துவிகங்களை ஆராயும் பசு அறிவு அகப்பொருளாகிய சிவத்தையும் அறியும் எனின் என்ன இழுக்கு ?

விடை: எதிரில் உள்ளதும் முதுகின் பக்கல் உள்ளதும் பருப்பொருளே. ஆதலால் அவற்றைக் கண் காணும் என்றல் அமையும். ஆன்மாவும் தத்துவமும் கண்ணும் காணப்படும் புறப் பொருளும் போன்றவை. தத்துவம் பருப் பொருள், கண் நுண் பொருள்.

இனி, ஆன்மாவும் அதன் உணர்வின் முதலாக உள்ள சிவமும், கண்ணும் அதனைச் செலுத்திக் காட்டும் உயிரும் போன்றவை, சிவம் நுண் பொருள், ஆன்மா அதனை நோக்கப் பருப்பொருள். புறப் பொருள்களைக் காணும் கண்ணே தன்னையும் காணாது; தன்னை உடனின்று செலுத்தும் ஆன்ம போதத்தையும் காணாது. அதுபோல ஆன்மாத் தத்துவங்களைக் காணும்; தன்னையும் தன் உணர்வின் முதலாகிய சிவத்தையும் காணாது; ஆயினும், ஆன்மாக் கண் போலச் சமமன்று. ஆதலால், ஆன்மா 'நான் ஆர் ?' என ஆராயும் ஆராய்ச்சி யறிவில், உடன் கலந்து கரந்து உறைபவன் முதல்வன் (கள்வன்; தோன்றாத் துணையாக உள்ளவன்). அத் தேர்ச்சி யறிவில் தன்னைக் காணலுறுவார்க்குத் தன் கள்ளம் நீங்கிச் சோதியாய் வெளிப்படுபவன் ஆகலின், அவனை ஆண்டு அவ்வாறு காண்.

" காட்டிய கண்ணே தனைக்காணா ; கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண்காணா—காட்டிய
உள்ளம் தனைக்காணா ; உள்ளத்தின் கண்ஆய
கள்வன்றான் ; உள்ளத்திற் காண் "

" கள்ளரோ டில்லம் உடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென் றுந்தீபற
வீடும் எளிதாம் என்றுந் தீபற "

என்றதும் இக் கருத்துப் பற்றியது.

முதல் அதிகரணம் முற்றிற்று

(தொடரும்)

செய்திச் சுருக்கம்

பாவை மாநாடு : பேரளம் சரகம், மாயூரம் தாலுக்காவிலுள்ள திருக்கோயில்களின் சார்பில், ஜனவரி மாதம் 11, 12 தேதிகளில், மாயூரம் ஸ்ரீ மயூரநாதர் திருக்கோயிலில் நடைபெற்றது. தஞ்சைத் துணை ஆணையர் திரு. K. சோமசுந்தர தேசிகர், M.A., அவர்களும், நாகை உதவி ஆணையர் திரு. B. சுந்தரமூர்த்தி, B.A., அவர்களும் கலந்து கொண்டனர். திரு. G. சுப்பிரமணிய பிள்ளை, M.A.,B.L., சிவத்திரு. நா. சரவண மாணிக்கவாசக சுவாமிகள், திரு. M.செல்லக்கண்ணு ஸ்தபதி, திருமதி இராஜாம்பாள் சுந்தரராஜன், திரு. S. ஆறுமுகம், B.A., (R.D.O), திரு. ஆ. இராமசாமி பிள்ளை, M.A.L.T., M.Litt., திரு. N.R. முருகவேள், M.A.,M.O.L., திரு. B.திருஞானம் பிள்ளை, B.A.B.L., குடந்தை ஸ்ரீ இராமாநுஜ தாத்தாச்சாரியார், திரு. ச. தண்டபாணி தேசிகர் ஆகிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பொம்மலாட்டம், பரத நாட்டியம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் சிறப்புற நடைபெற்றன. திருக்கோயில்களின் அறங்காவலர்களும், இறை பணியாளர்களும், இம்மாநாடு இனிது நடைபெறப் பெரிதும் தொண்டாற்றி மகிழ்ந்தனர்.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இவ்விதம் பரம ரகசிய அர்த்தங்களைக் கேட்டுத் தம்மிடத்தெழுந்தருளிய இராமாநுசருடைய திருவுள்ளம் நிறைவு பெற்று மகிழ வேண்டியது இயல்பு. ஆனால் பண்பட்ட அவ்வுள்ளம் ஒரு நிலை நில்லாது தத்தளித்தது. இவ்வர்த்தங்களைப் பெறத் தாம் பட்ட பாடெல்லாம் அவருள்ளத்தே பச்சையாகவே விளங்கிற்று. அவர் எண்ணமிடலானார். "இப்படி உயிர் தருமாறும் பரீக்ஷைக்குட்பட்டே இவ்வர்த்தம் பெற வேண்டுமென்றால் கோடியில் ஒருவர் கூடக் கிட்ட அரிதாகுமே. இந்த தர்சனம் நன்கு பரவாமையின் காரணம் இப்போதல்லவா தெரிகிறது! நாமும் இந்த முறையைப் பின்பற்ற எண்ணினால் நாம் ஆளவந்தாரின் திவ்ய சரம விக்கிரகத்தின் முன்பே அவர் திருவுள்ளக் குறிப்புக்களைத் தலைக் கட்டி வைப்பதாகச் செய்த சூளுறவு எப்படி நிறைவேறும்? நாம் இதைப் பலர் அறியக் கூறினாலோ ஆசார்ய தோஷம் உண்டாகும். என் செய்வது!" என்று பலபல வகையாய் அன்றிரவெல்லாம் தம்மில் தாமே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அப்போது திருக்கோட்டியூர்க் கோயிலிலே உற்சவம் நிகழ்ந்து கொண்டிருந்தது. மேற்கண்ட வண்ணம் தம் சிந்தனைச் சுழலிலே மனந்திரிய விட்டு இரவைக் கழித்த இராமாநுசர், விடிந்தவாறே தம் மனத்திலே ஒரு உறுதியுடன் எழுந்தார். தம் செய் கடன்களை முடித்துக் கோயிலுக்கு எழுந்தருளினார். அங்கு தெற்காழ்வான் சன்னிதியில் பெருமாள் திருவோலக்கமாக எழுந்தருளியிருக்க ஏராளமான ஸ்ரீ வைஷ்ணவர்கள் குழுமியிருந்தனர். அங்கு எழுந்தருளிய இராமாநுசர் நரசிங்கப் பெருமானைச் சேவித்து நின்றார். பின் வைணவத் திரளை நோக்கித் திரும்பி, தம் ஆசார்யரான நம்பிகளை மனத்தில் தியானித்து, அவரிடம் அர்த்த விசேஷங்களைக் கேட்டதால் வந்த அரச குலப் பெருமை அனைத்தும் முகத்திலே ஒளிர, ஒரு பெய்யுமா முகில் வள்ளல் தன்மை மனத்திலே தேக்கிட, வைணவத் திரளை நோக்கி, அனைவர் செவிகளிலும் படும்படி திருக்கோட்டியூர் நம்பிகளிடம் தாம் கேட்ட அர்த்தங்களைத் தமக்கே உரிய கம்பீரமான குரலிலே திருவாய் மலர்ந்தருளி, அதனாலே தம் திருமேனி பூரிக்கப் பெற்று, கராவின் வாய்ப்பட்ட கஜேந்திரனைக் கடாட்சித்து நின்ற வரதனைப் போலே, வைணவ கோஷ்டியைக் கருணையோடு திருக்கண்களால் நோக்கி மகிழ்வெய்தினார். அன்று பாரதப் போரிலே இரு சேனைகளின் நடுவே பகவான் கண்ணன் சோகித்த அருச்சுனன் ஒருவனுக்குச் சில அர்த்தங்களை அருளினான். இங்கு இராமாநுசர் வைணவப் பெருந் திரளுக்கு அர்த்த விசேஷங்களை அருளினார். இவ்விரண்டையும் ஒப்பு நோக்கி இராமாநுஜார்ய திவ்ய சரிதை அருளிய ஸ்ரீ பிள்ளை லோகம் சீயர்,

"ஒருவன் சோகம் தீர ஒரு சுலோகத்தை அங்கொரு கால் இங்கொரு காலாய் அந்தரத்தினின்று உபதேசித்து அவன் அதிகார மாந்த்யத்தாலே (மந்தந் தன்மையினாலே) பின்பு பதண் பதண் (துணுக்குத் துணுக்கு) என்றான். அதுதான் ஒருத்தி தலையில் மயிர் முடிப்பிக்கைக்காக விறே; இந்த இராமாநுசனே எல்லாருடைய சோகமும் போகப் பாரிலே பதஸ்தராயிருந்து (கால் ஊன்றியவராயிருந்து) யாவரும் அதிகாரிகளாம்படி திருத்தித் தலை வணங்கும்படி பண்ணி 'காம்பறத்தலை சிரைத்து' என்கிற

படியே அவர்கள் தலையில் சும்மையையும் கழித்து, தாமும் பிரியதராய் நிர்ப்பரதாய் (மகிழ்ந்தவராய் மனச் சுமையற்றவராய்) அருளினீரே" என்று பாராட்டுகிறார். இவ்வரும் பெரும் பொருளைக் கேட்ட ஸ்ரீ வைஷ்ணவர்கள் இராமாநுசரை மிகவும் கொண்டாடித் தாம் பெருப்பேறு பெற்றதாக எண்ணி மகிழ்ந்தனர்.

இராமாநுசர் பகிரங்கமாகப் பலர் முன்னிலையில் தம்முடைய ஆணையை மீறி அர்த்த விசேஷங்களை உபதேசித்தார் என்ற செய்தி, திருக்கோட்டியூர் நம்பிகளுக்கு எட்டியது. முதலில் அவர் திகைத்தார். பின் "இவ்விதம் இராமாநுசர் செய்ததில் ஏதோ இன்றியமையாத உட்கருத்து இருக்க வேண்டும்" என்று தீர்மானித்தார். உடனே இராமாநுசரை வரவழைத்தார். அவரும் எவ்வித கலக்கமுமின்றி வந்து தண்டனிட்டார். நம்பி அவரை நோக்கி "நாம் உம்மைப் பலகாலும் சோதித்து, ஒருவர்க்கும் சொல்லலாகாது என்று நியமித்து, மிக அந்தரங்கமாக அருளிய அர்த்த விசேஷங்களை, நீர் பெருமாள் திருவோலக்கத்தில் பெருந் திரளிலே நின்று கொண்டு, யாவர் செவியிலும் விழும்படியாக வெளியிட்டீர் என்று யாம் கேட்டோமே! இது உண்மைதானா?" என்று வினவினார். இவரும் "சுவாமி! இது உள்ளதே. அடியேன் தேவரீர் திருவடிகளை முன்னிட்டுக் கொண்டு சொல்லியிருக்கிறேன்" என்று விண்ணப்பம் செய்தார். நம்பிகள் "நீர் ஒருவர்க்கும் சொல்லலாகாது என்று நியமித்தன்றோ சொல்லி வைத்தோம். அதை மறுத்து இப்படிச் செய்த உமக்குப் பலன் எதுவாகும்? என்று எண்ணுகிறீர்"

"பாரினில் ஒருவர்க்(கு) இந்த
உண்மையைப் பகரேல் என்ன
நீர்எனை ஆணையிட்டு
நீங்கினீர்; அதனைப் பாரா(து)
ஊரவர்க்கு எல்லாம் கூறி
உமக்கும் என் பெற்றீர்?"

என்று கேட்டார். அதற்கு இராமாநுசர் இவ்விதம் தேவரீர் நியமனத்தை மறுத்து,

"பொன்றலில் நரகம்
பெற்றேன் புனிதனே!"

என்று கூறிக் கை குவித்து நம்பிகள் திருவடிகளை நோக்கிக் கொண்டு தலை குனிந்தபடி நிற்க, நம்பியும் "ஐயோ! இதை அறிந்திருந்தும் செய்வானேன்?" என்று கேட்டார். அப்போது இராமாநுசர்,

"நான் ஒருவனுமே அன்றோ
நசிப்ப(து)? இத் திரள்கள் எல்லாம்
ஆனவான் பேரின்பத்தை
அருந்துமே அந்தோ!"

"அடியேன் ஒருவன் நரகம் புகுவதைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. தேவரீருடைய திருவடிகளை முன்னிட்டுக் கொண்டு சொல்லுகையாலே இவ்வாத்ம கோடிகளெல்லாம், அந்த சம்பந்தத்தால் உஜ்ஜீவிப்பர்களன்றோ! என்று சொல்லிவிட்டேனித்தனை" என்று விண்ணப்பித்தார். இதனைக் கேட்ட நம்பிகள் பெரு வியப்பிலே மூழ்கினார். தம் எதிரே இராமாநுசரைக் கண்டிலர். ஒரு பெருங் கருணை வெள்ளம் பெருகித் தேங்கிய காட்சிதான் அவர் கண்டது. அதற்கு முன்னே நிற்கும் தன்னையும் தாமே ஒரு சோதனை செய்து கொண்டார். உடனே இரு கையும் நீட்டி "இராமாநுசரே! உமக்கிருந்த பரஸம்ருத்தி நமக்குக் கூடிற்றில்லையே!" என்று பொருமியவராய்,

"சென்றெடுத்(து) உடலும் தூய
சிந்தையும் அழுந்தப் புல்லி
ஒன்றிய அன்பினாலே
உச்சியை வளைத்து மோந்து
நன்று நன்று அன்ப! உன்னை
நானிலத்து எவர்கள் ஒப்பார்!"

என்று கொண்டாடி, அப்பனே!

தன்னுயிர் தன்னைக் கொண்டு
தான்பிழைத் திடுவ தன்றி
மன்னுயிர்க்(கு) இரங்கித் தன்னை
மைந்தனே! மாய்க்கப் புக்கார்
இந்நிலத்து இல்லை! இல்லை!
ஏழுல கத்தும் இல்லை!

என்று பாராட்டி "மைந்த! முன் நம் பெருமான் தம்முடைய கோயில் நிர்வாகத்தை அளிக்கும்போது "நம்முடைய உபய விபூதி ஸாம்ராஜ்யத்திற்கும் நீரே "உடையவர்" என்று கூறியருளினார். பெரிய நம்பிகள் தொடக்கமாக நாங்கள் யாவரும் உம்மை "உடையவர்" என்றே அழைக்கிறோம். ஆனால் அப்பெயரின் முழுப் பொருளையும் உணரவில்லை. இப்போது தான் "உயிர்கள் எல்லா உலகும் உடையவன்" என்று ஆழ்வார் பெருமானை நோக்கிக் கூறிய பொருளிலேயே, பெருமானும் உம்மை "உடையவர்" என்று அழைத்திருக்கிறார் என்று உணர்கிறோம். நீர் உமது "பன்னரும் குணத்தால் செஞ் சொல் பரஞ்சுடர் ஆகும்" என்று பரவிப் புகழ்ந்தார். பின்னர் நம்பிகள் திரும்பிக் கூடியிருந்த முதலிகளையும் வைஷ்ணவத் திரள்களையும் நோக்கி "கண்டீர்களோ முதலிகாள்! இது வரையில் இந்தத் தர்சனம் பரம வைதீக சித்தாந்தம் எனப் பெயர் வகித்திருந்தது; இன்று முதல் இது "எம்பெருமானார் தர்சனம்" என்னநின்றது. ஆகையால் நம்மவர்கள் எல்லாரும் இதை "எம்பெருமானார் தர்சனம்" என்றே சொல்லக் கடவீர்கள்" என்றருளிச் செய்தார்:

பின்னர் நம்பிகள் உடையவரைத் தனியே அழைத்துச் சென்று,

"முன் உனக்கு உபதேசித்த
மந்திர முதன் மையாலே
உன்னரும் மகிழ்ச்சிதன்னை
உடையனாய் இருந்தாய் நானும்
பன்னரும் பொருளை மேலிட்டு
ஒருபடி பகர்ந்ததன்றி"

"பதந்தோறும் அறுத்துச் சொல்லின்
பயன் உனக்குரைத் தேனில்லை
திதம்பெறச் சொற்கள் தோறும்
செப்பென வலிய நீயே
இதம்பெறக் கேட்டபின் நாம்
இயம்புதல்கடன் என்று எண்ணிக்
கதம் கெடு சிந்தையாய்நீ
கழறென என்னை முந்தி"

கேட்டிலை. ஆனால் எல்லாம் கேட்டவர்கள் போன்ற ஒரு ஞானனந்த மதியரின் மன்னு நின்றாய். இந் நிலைக்குக் காரணம் என்? என்று கேட்டார். இராமாநுசரும் சுவாமி! தேவரீர் அருளிச் செய்த அர்த்தத்துக்கு மேலே இன்னும் ஒன்று உண்டு என்று இருந்தேனாகில் அவிசுவாசி ஆவேன். தேவரீர் நியமித்திருக்கிறபடியே கேளாதிருந்தேனாகில் அருளிச் செய்திருக்கிற அர்த்தம் நெஞ்சில் படப் பெற்றிலேன் ஆவேன் என்று தோன்றுகையாலே, விண்ணப்பம் செய்ய விரகறியாமல் இருந்தேன் அத்தனை என்று விண்ணப்பித்தார். நம்பிகளும் பின்னும் இராமாநுசரைப் புல்லி,

நன்றிசேர் குணத்தினேனே
நலைவற நின்னை யொத்து
நின்றநற் றருமான் இந்த
நீணிலத்து ஒருவரில்லை."

என்று இராமாநுசரை மீண்டும் புகழ்ந்து,

"மருவதும் அர்த்தம் ஒன்று
வழங்குவேன் இன்றுபோய்
நீ ஒருவருய் வருதி"

என்று அருளிச் செய்தார். இராமாநுசரும் அவர் ஆணையைச் சிரமேல் ஏற்று,

"பொருவிலா நம்பி செய்ய
பூங்கழல் இறைஞ்சி மீண்டு
திருவரங்கத்தின் மன்னிச்
சில பகல் இருந்து வாழ்ந்தார்"

(தொடரும்)

செய்திச் சுருக்கம்

பாவை மாநாடு: கோடம்பாக்கம் ஸ்ரீ வடபழநி யாண்டவர் கோயிலில், 10-1-64 வெள்ளிக்கிழமை யன்று, சிறப்புற நடைபெற்றது. ஆட்சி அறங்காவலர் திரு. கே. கமலக்கண்ணன், M.L.C. அவர்கள், வரவேற்புரை கூறினார்கள். வித்துவான் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், திரு. N. R. முருகவேள், M.A.,M.O.L ஆகியவர்கள் முறையே திருவெம்பாவை திருப்பாவைபற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள் அறங்காவலர் திரு. V. சுந்தரமூர்த்தி முதலியார், M.A.B.L, அவர்கள் நன்றியுரை நவின்றார்கள். பாவைப் போட்டியிற் கலந்து கொண்ட பாடசாலைக் குழந்தைகளுக்குப் பரிசுகள் பல வழங்கப்பட்டன. நிர்வாக அதிகாரி திரு. K. சிதம்பரம், B.A. ஆகியவர்கள், விழா நன்கினிது நடைபெறப் பெரிதும் பணியாற்றினர்.

அரங்கமும் — அரங்கனும்

திரு. என். எஸ். தூத்தாச்சாரியார் அவர்கள்

மனிதசக்திக்கு அப்பாற்பட்ட பொருள்களையோ, செயல்களையோ ''திவ்வியம்'' என்றழைப்பது உண்டு. ஸ்ரீ வைணவர்கள் இந்தத் திவ்யம் என்ற சொல்லை மூன்று பொருள்களில் நிரந்தரமாகக் கையாண்டு வருகிறார்கள். ஆழ்வார்களை — திவ்வியசூரிகள் எனவும், நாலாயிரப் பிரபந்தத்தைத் திவ்வியப் பிரபந்தங்கள் எனவும், நூற்றெட்டு விஷ்ணு ஆலயங்களைத் திவ்விய க்ஷேத்திரங்கள் எனவும் அழைக்கிறார்கள். இந்த திவ்வியங்களில் ஒவ்வொன்றிலும், மூன்று திவ்வியங்கள் உள்ளன எனலாம். திவ்விய சூரிகளில்-நம்மாழ்வார், ஆண்டாள், திருமங்கைமன்னன் என்பவர்கள் ஒருவகையில் சிறந்தவர்கள். திவ்வியப் பிரபந்தங்களில் திருவாய் மொழி, திருப்பாவை, பெரியதிருமொழி என்பன ஒருவகையில் திவ்வியங்கள். திவ்விய க்ஷேத்திரங்களில் ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சிபுரம், மூன்றும் திவ்வியங்களாம். இவைகளையே கோயில் திருமலை, பெருமாள் கோயில் என்றும் ஸம்பிரதாயமாக அழைப்பார்கள். திருப்பதியில் மூலவருக்கும், காஞ்சீயில் உத்சவருக்கும், ஸ்ரீரங்கத்தில் இருவர்களுக்கும், சிறப்பைச் சிலர் சமத்காரமாகக் கூறுவார்கள். அரங்கன் தன் வலக்கை முத்திரையால் மேல் விமானத்தைக் காட்டித் 'திருமந்திரம்' என்னும் எட்டெழுத்து மந்திரத்தைக் காட்டுகிறாராம். காஞ்சீ-தேவப் பெருமாள் தம் மார்பைக் குறித்துக் காட்டும் வலக்கை முத்திரையால் ''த்வயம்'' என்ற மந்திரத்தைக் குறிக்கிறாராம். திருவேங்கடமுடையான் தம் வலக்கையைக் கீழ்ப்பக்கம் திருப்பிக்காட்டி ''சரமசுலோகத்தை''க் குறிக்கிறாராம். இந்த மூன்று ரகஸ்யங்களையும் ''ரஹஸ்யத்ரயம்'' என்று வைஷ்ணவ பரிபாஷை கூறுகிறது. இம்மாதிரி அனுபவ ரஸிகர்கள் அனுபவிப்பது வழக்கம். நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஸ்ரீரங்கமே இதயமாக அமைந்துளது. காஞ்சிபுரத்தை 'ஸ்ரீவைஷ்ணவீ' என்ற பெண்ணுக்குப் பிறந்தகமாகக் கூறினால், ஸ்ரீரங்கத்தை அவளுடைய புக்ககம் எனலாம். இன்றைக்கு எல்லாக் கோயில்களிலும், எல்லா வீடுகளிலும் ஆராதனம் முடிந்த பின் செய்யும் சாற்றுமுறையில் 'சுவாமிந்'! என்றும் ஸ்ரீரங்கத்தின் செல்வமும் சிறப்பும் ஓங்க வேண்டும் எனப் பகவானிடம் வேண்டி வருகிறார்கள். ஸ்ரீ ராமாநுசர் காலத்திலிருந்து இப்பழக்கம். இந்த ஸ்ரீரங்கத்தைத் தென்னாடும் வடநாடும் தொழநின்றதலம் எனப் போற்றுவார்கள்.

தனிச் சிறப்பு :

இந்தத் திருவரங்கத்திற்குப் 'பூலோக வைகுண்டம்' எனப் பெயர். ஊர் அமைப்பும், கோயில் அமைப்பும் வைகுண்டம் மாதிரியே இருக்கிறது. திருவிருத்தத்தில் ஆழ்வார், காஞ்சிபுரத்தைத் ''தியாக மண்டபம்'' என்றும், திருப்பதியைப் ''புஷ்ப மண்டபம்'' என்றும், திருவரங்கத்தைப் ''போக மண்டபம்'' எனவும் வாழ்த்துகிறார்.

ஆசாரிய ஹ்ருதய வியாக்யானத்தில் ''தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்'' என்கிறபடியே போக மண்டபமான கோயிலில் என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் பெரிய கோயில் திருவரங்கம், ஸ்ரீரங்கம், திவ்வியஸ்தானம் என்றெல்லாம் இத் தலத்திற்குப் பெயருண்டு. திருச்சிக்கு அருகே கொள்ளிடம் - காவிரியின் இடையே உள்ள தீவில் இந்தத் தலம் உள்ளது. ''அம்ருதேன ஆவ்ருதாம்புரீம்'' (நாலா பக்கமும் அமுத ஜலத்தால் சூழப்பட்ட நகர்) என்று வேதம் கூறுவதை இந்தத் தலம் நினைவுபடுத்தும். ''அற்ற பற்றர் சுற்றிவாழும் அந்தணிர் அரங்கமே'' என்ற மழிசைப்பிரான் திருவாக்கை நினைத்தால் இந்த ஊரில் அடிவைக்காத அடியார்கள் இல்லை, போற்றிப் புகழாத

புண்ணியர்களும் இல்லை எனலாம். "பொங் கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங் காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான் உறைவிடம்" என நாச்சியார் திருமொழி இத் தலத்தின் பெருமையை மெய் சோர்ந்து வாய லற்றிப் பேசுகிறது. மேலும் ஒரு பங்குனி உத் திரத்தன்று தாயாரும் - பெருமாளும் சேர்ந்து எழுந்தருளி யிருக்கும் பொழுது இராமாநுஜருக் கும் அரங்கனுக்கும் பேச்சு வார்த்தைநடந்தது. அப்பொழுது அரங்கன் இராமாநுஜரைப் பார்த்து "சுத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகம் ஆஸ்வ" "உடல் விழும் வரையில் துவயத்தை ஜபித்துக் கொண்டு இந்தத் திருவரங்கத்திலே இருக்க வேண்டும்" எனச் சொன்னதாக ஐதிஹ்யம் உண்டு. இதனால் ஸ்ரீரங்கத் தலத்தின் பெரு மையை அரங்கனே போற்றினான் என்று கூறத் தடையுண்டோ? "ரதிம் கதோ யத: தஸ்மாத் ரங்கம் இத்யபி தீயதே" என்ற வச னப்படி அரங்கனே இந்த உபய காவேரியின் இடை நிலத்தை உகந்தார். அதனால் இதற்கு "ரங்கம்" எனப் பெயர் ஏற்பட்டது என்றும் சொல்லுவார்கள். இறைவனைக் குறித்து அகி லாண்டநாயகி தவம் செய்த இடமும் இதுதான். மற்றும் பகவானுடைய மகிழ்ச்சிக்காக மகா லக்ஷ்மியே அரங்கமேறி நடனம் ஆடினாள். அத னாலும் இது அரங்கமாயிற்று எனத் 'திருவா னைக்கா ஸ்தல புராணம்' கூறுகிறது. ஸ்ரீ வேதாந்த தேசிகனும் ஸ்ரீரங்கத்தில் வசிப்பதை அரங்கனிடம் விரும்பிக் கேட்கும்படி அன்றே இத்தலத்தின் பெருமை ஏற்பட்டுள்ளது. சைவர்கள் சிதம்பரத்தைக் கோயில் என்று அழைப்பது போல், வைணவர் ஸ்ரீரங்கத்தைக் கோயில் என்று அழைப்பதால், ஊரே கோயில் கோயிலே ஊர் என்றபடி ஊர் அமைந்திருப் பதும் இந்த க்ஷேத்திரத்திற்குள்ள ஏற்றம். இவ்வாறு அமைந்த ஊர்கள் கிட்டத்தட்ட மதுரையும், ஸ்ரீரங்கமும்தான். பேயாழ்வார் "தேனார் திருவரங்கம்" என்று ஸ்ரீரங்க க்ஷேத் திரத்திற்குப் பாடல் இடுகிறார். திருமழிசைப் பிரான் "பீடு கோயில் கூடுநீர் அரங்கமென்ற பேரதே" என்றும், நம்மாழ்வார் "பொருநீர்த் திருவரங்கா" என்றும், குலசேகரர் "அணி யரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள் இன்ப மிகு பெருங்குழுவு கண்டு" என்றும், பெரியாழ் வார் "சேமமுடை நாரதனார் சென்று சென்று துதித்து இறைஞ்சக் கிடந் தான் கோயில் திரு வரங்கமே" என்றும், "காவிரி நீர் செய்ப் புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்" என்றும், தொண்டர் அடிப் பொடியாழ்வார் "சோலை அணி திருவரங்கம் தன்னுள்" என்றும், திருப்பாணாழ்வார் "வெங்கணைக் காகுத்தன் கடியார் பொழில் அரங்கத்தம்மான்" என்றும் திருமங்கை மன்னன் "அணியார் பொழில் சூழ் அரங்கநகரப்பா" என்றும் ஆழ்வார்கள் எல் லோரும் அரங்கத்தின் சிறப்பைக் கலந்தே அரங்கன் பெருமையைப் பாடினார்கள்.

பிரமலோகத்திலிருந்து புறப்பட்ட அரங் கன் அயோத்தியிலும் தங்காமல் ஸ்ரீரங்கத்தில் நிலையாகப் படுத்திருக்கிறார் என்று கூறித் திரு வரங்கத்தின் பெருமையை வேதாந்ததேசிக னும் போற்றினார். இன்றும் "தும்மல் கொட்டாவி முதலியன ஏற்பட்டால் பாபசமனமா "ரங்கம் ரங்கம் இதிப்ரூயாத் க்ஷுத:ப்ரஸ் கலனாதிஷு" என்றபடி ஸ்ரீமத்ரங்கம் என்று க்ஷேத்திரத்தின் பெயரைச் சொல்லுவது இன்றும் வழக்கம். (நாமம்-நாமீ: பெயர்-பெயரை உடையவன்)என இரண்டு வகையிலும் ராமனுக்குப் பெருமை ஏற்பட்டது போல, க்ஷேத்திரம், க்ஷேத்திர தேவதை என இரண்டு பெருமையும் தனித் தனியே விளங்குவதும் இந்த இடத்தில் தான். ஸ்ரீ ராமாநுசர் உஞ்சவ்ருத்தி எடுத்துக் கொண்டு செல்லுகையில் சில பிள்ளைகள் அரங்கன் பிரசாதம் என்று ஸ்தல தூளியைத் தர ஏற்றுக் கொண்டார் என்று கர்ண பரம்பரை ஐதிஹ்ய முண்டு. அதைக் கொண்டு நோக் கினாலும் ஸ்தலத்தின் தூளிக்கே மஹாசார்யன் என்ன பெருமை தந்தார் எனவும் விளங்கு கிறது. இன்னும் எவ்வளவோ இந்தத் தலத்தின் பெருமையை எழுதிக் கொண்டே போகலாம்.

இங்குத் தல விருக்ஷம் புன்னைமரம். சந்திர புஷ்கரிணி, வில்வதீர்த்தம், சம்பு தீர்த்தம், சூரிய புஷ்கரிணி முதலிய தீர்த்தங்களையும், சம்பு அச்வத்தம் புன்னை வகுளம் கதம்பம், ஆம்ரம், பலாசம் முதலிய தலவிருக்ஷங்களையும், திருவானைக் காவையும் சேர்த்துக் கூறுவது வழக்கம். ஏழுவிதமான தாதுக்களுடன் கூடிய உடலின் நடுவே இதயத்தில் இறைவன் இருப் பதுபோல், இங்கும் அரங்கன் அமர்ந்த க்ஷேத் திரத்திற்கு ஏழு பிராகாரங்கள் உள்ளன. 7வது பிராகாரம் சித்திரை வீதி. மதுரையிலும் கோயில் ப்ராகாரத்தை வீதி என்றழைப்பது இன்றும் உண்டு. இதற்குத் "திருமதில் வீதி"

எனவும் பெயர். இங்கு சித்திரைப் பெருவிழா நடக்கும். விஜய நகர மன்னன் "விருப்பன் உடையார்" இதை நடத்திவைத்தார். ஆகவே தான் சித்திரைத் திருவிழாவிற்கு 'விருப்பன் திருநாள்' எனப் பெயர். கிழக்குச் சித்திரை வீதியும், மேற்குச்சித்திரை வீதியும் 2100 அடி நீளம் உள்ளவை. வடக்கு வீதியும், தெற்கு வீதியும் 1846 அடி நீளமுள்ளவை. நான்கு பக்கங்களிலும் கோபுரம் உண்டு.

6வது பிராகாரம்:—திரிவிக்கிரமன் என்ற சோழமன்னரால் திருத்தி யமைக்கப்பட்ட தெருவாகும். அதனால் அவன் பெயரைக் கொண்டே அந்தத் தெருவை "திரிவிக்கிரமன் திருவீதி" என்றழைக்கிருர்கள். இந்த வீதியில் தான் "பூபதி உடையார்" என்ற விஜய நகரமன்னரால் ஏற்படுத்தப்பட்ட தைத்திருவிழா நடக்கிறது. அதனுல்தான் அந்த விழாவிற்குப் "பூபதித் திருநாள்" என்றும் பெயர் ஏற்பட்டது.

5வது வீதி:—"அகளங்கன்" என்ற மன்னரால் அமைக்கப்பட்டது. அதனுல் தான் மகாபக்தனுன அவன் பெயரால் அகளங்க நாட்டாழ்வான் திருவீதி என்று பெயர் அதற்கு ஏற்பட்டது. இந்த வீதியின் மேற்கில் கோபுரம் கிடையாது. தெற்குவாயில் கோபுரத்திற்கு 'நான் முகக் கோபுரம்' எனப் பெயர். இதில் ரங்கவிலாசம், கம்பன் உருவம் முதலியன உள. வடமேற்கில் ஸ்ரீரங்க நாச்சியார் ஸந்நிதி உண்டு.

4வது வீதி:—இந்த வீதி ஆலிநாடன் என்ற திருமங்கையாழ்வாரால் செப்பனிட்டு ஏற்படுத்தப்பட்டது. அதற்கு ஆலிநாடன் திருவீதி எனவும் பெயர். இங்கு முதலாழ்வார் சந்நிதி, சந்திர புஷ்கரிணிக் கரையில் நாள்பட்ட ஒரு புன்னைமரத்தை இன்னும் காணலாம். இதனடியில்தான் முன்புதிருவாய்மொழி உரைப் பிரவசனம் (பகவத்விஷயகால க்ஷேபம்) நடக்கும் என்ற செய்தியைப் பட்டர் எழுதிய ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவத்திலிருந்து அறியலாம். இன்றைக்கும் விஷய மறிந்த பக்தர்கள் இந்த மரத்தை நமஸ்காரம் செய்வார்கள். ஆரிய படாள் வாசல் முதலியன இருக்கின்றன. வடகிழக்கில்தான் "திருவாய் மொழித் திருநாள்" என்னும் இராப்பத்து உத்ஸவம் நடக்கும் ஆயிரக்கால் மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தின் நீளம் 5000 அடிகள், அகலம் 140 அடிகள்.

3வது வீதி:—குலசேகர மன்னரால் நிர்மாணிக்கப்பட்டது. அதனுல் அதற்குக் குலசேகரன் திருவீதி எனவும் பெயர். கொடிமரம் பலிபீடம், பரமபத வாசல், திருமடைப்பள்ளி, நாழிகை கேட்டான் வாயில் முதலியன உள்ளன.

2வது திருவீதி இராஜ மகேந்திரன் என்பவனுல் ஏற்படுத்தப்பட்டது. அதனுல் இராஜ மகேந்திரன் திருவீதி. இங்குக் கருவூலம் (திருவாபரணங்கள் வைக்குமிடம்) யாகசாலை, சேனை முதலியார் கோயில், (இந்தக் கோயிலுக்குள் விபீஷணன்—அனுமார் விக்ரகங்களும் உள்ளன) கிளிமண்டபம், ரேவதி மண்டபம், துருக்க நாச்சியார் ஸன்னிதி. இங்குதான் திருமொழித் திருநாள் என்னும் பகல்பத்து உத்ஸவம் நடை பெறும். அஷ்டாக்ஷரப்படி, முதலியன இருக்கின்றன.

முதல் திருவீதி:—தர்மவர்மன் என்ற அரசனுல் ஏற்படுத்தப்பட்டது. (இந்தச்சோழ அரசனுக்குப் பெருமாள் ப்ரத்யக்ஷமானுர்) அதனுல் அந்த வீதிக்குத் "தருமவர்மன் திருவீதி" எனவும் பெயர். இந்தத் தெருவில் (பிராகாரத்தில்) நாராயணன், நாபிநளினர், நாகசயனர், நற்சிம்மன் என்ற நான்கு மூர்த்திகள் ஸ்ரீரங்கம் பிரணவவிமானத்தைக் காப்பதாகக் கூறுவதுண்டு.

விமானம்:—இது ஓம் என்ற பிரணவம் போல் இருப்பதால் இதற்கு பிரணவாகிருதி விமானம், வேதசிருங்கம் எனப் பெயர். நான்கு வேதங்களும், ஆறு அங்கங்களும் தூபிகள். தென்பக்கத்தில் பரவாசு தேவன் இடுப்பளவில் காட்சிதருவார். வெளியில் மேற்குபாகத்தில் விக்கினேசுவரரும், கீழ்பாகத்தில் துர்கையும் அமர்ந்திருக்கிருர்கள். விமானத்தின் திருவாசலுக்கு "திருவணுக்கன் திருவாயில்" எனவும் பெயர். உள்ளே "திருமணத் தூண்" என்ற இரண்டு பெரிய கம்பங்கள் அரங்கன் கர்பகிருஹத்தில் உள்ளன. அவைகளுக்கு ஆமோத ஸ்தம்பங்கள் எனவும் பெயர். "மணத்தூணே பற்றி நின்று என்வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே" என்ற குலசேகராழ்வார் பாசுரத்தை நோக்க வேண்டும். அரங்கன்

அழகும், அருளும் அலைபாய்கின்றனவாம். அப்பொழுது அத்தூண்களைப் பிடித்துக்கொண்டே நின்றால் தான் உருகிய உள்ளம் உவந்து அனுபவிக்குமாம். ஆளவந்தார் அத்தூணைப் பிடித்துக் கொண்டுதான் அரங்கனைத் தரிசிப்பாராம். இன்றைக்கும் அத்தூண்களைக் கைகளால் தடவி வணங்கும் முறை உண்டு. ஏழுபிராகாரங்களின் (திருவீதிகள்) மொத்தப் பரப்பு சுமார் 160 ஏக்கர். மதில்களின் மொத்த நீளம் ஆறு மைல்கள். (இக்கருத்துக்கள் உயர் திரு.வை.மு. நரசிம்மன் அவர்களுடையன.)

திருப்பணிகள்

திருவரங்கம் கோயிலின் கோபுரங்கள் தரும வர்மன் என்ற சோழனால் கட்டப்பட்ட தென்பார்கள். பாண்டிய, பல்லவ, ஹோய்சள மன்னர்களாலும், அவர்கள் தளபதிகளாலும் அவ்வப்பொழுது திருப்பணிகள் செய்யப் பட்டன என்பார்கள். திருமங்கை மன்னன் மதில் அனைத்தையும் கட்டினார் எனப் பழைய நூல்கள் கூறுகின்றன. குலசேகரரும் திருப்பணிசெய்தார். பல அரசர்களும் பெருமாளுக்குத் திருவாபரணங்கள் செய்துள்ளார்கள். நகைகள் பழங்காலத்தவை என்றும்,மிகவும் விலை கொண்டவை என்றும் சொல்லுவார்கள். முத்துக்கள் வேயப்பட்ட முத்தங்கியும், நவரத்தினங்கள் இழைக்கப்பட்ட இரத்தின அங்கியும், உத்ஸவர் (நம்பெருமாள்) திருமார்பில் உள்ள நீல நாயக மணியும் மிகவும் விலையுயர்ந்தவை என்பார்கள். வைகுண்ட ஏகாதாசியன்று முத்தங்கியை மூலவருக்கும், இரத்தின அங்கியை உத்ஸவருக்கும் சாற்றுவார்கள். இங்குதான் திருவாய்மொழிக்கும் திருமொழி முதலிய மற்ற திவ்விய பிரபந்தங்களுக்கும் வருஷம் தோறும் உத்ஸவம் செய்வது பழங்கால வழக்கம். இதை ஒரு தமிழ்த்திருவிழா என அழைக்கலாம். முன்பு திருமங்கைமன்னன் திருக்குருகூரி லிருந்து நம்மாழ்வார் பிம்பத்தை எழுந்தருளப் பண்ணி வந்து மார்கழிமாதத்தில் திருவாய் மொழித் திருநாளை நடத்துவாராம். பெருமாளும் ஆயிரக்கால் மண்டபத்தில் ஆத்தானம் கொண்டு எழுந்தருளி இருக்க, எல்லா ஆழ்வார்களும் ஆச்சாரியர்களும் குழுமி இருக்க, அரையர்கள் திருவாய்மொழிக் கருத்தை அபிநயம்பிடித்துக் காட்டுவார்கள். கடைசி நாளன்று திருவடி தொடுதல் நாள் அன்று) நம்மாழ்வார் அரங்கன் திருவடிகளில் சேருவர். இந்த வழக்கத்தை இன்னும் இராப்பத்து உத்ஸவத்தில் கண்பெற்றவர்கள் கண்டு களிக்கலாம். தண்ணளி பெறலாம். ஆண்டு தோறும் ஆழ்வாரை எழுந்தருளப் பண்ணிவருவது சிறிது துன்பத்தைத் தருவதாக இருந்தபடியால் அங்கேயே ஆழ்வார் உருவத்தை பிரதிஷ்டை செய்வித்து உத்ஸவத்தைத் திருமங்கையாழ்வார் நடத்தினாராம். பின்பு நாதமுனிகள் காலத்து என்பார்கள். அப்பொழுது திருமங்கைமன்னன் திருப்பாசுரங்களுக்கும் மற்றும் திவ்வியப்பிரபந்தங்களுக்கும் 'திருமொழித்திருநாள்' என்ற பகற்பத்து உத்ஸவம் ஏற்பட்டது. இந்த அரையர் கோஷ்டியில் தான் முன்பு மகாவித்வான்களான "பட்டர்" முதலியவர்கள் எழுந்தருள, தேன், திவ்வியத் தமிழின் சுவையமுதைப் பெற்றோம் என்று ஆடிப்பாடி அள்ளிப் பருகுவார்களாம். அனுபவிக்கப் பாக்கியம் பெற்றவர்கள் செந்தமிழும், செந்தமிழ் நூல்களும் இந்தக் கோவிலில் நடையாடுவது போல் வேறெங்கும் காண இயலாது எனலாம். அங்கு தினப்படி நடக்கும் பூஜை முறைகள் முதற் கொண்டு, பேச்சு வரையில் நாதமுனிகளும், பின்பு இராமாநுசரும் ஏற்படுத்தி வேலியிட்டவைகளே.

அரங்கன்

அரங்கநாதன், பெரிய பெருமாள், ரங்கராஜன், யுகம் கண்ட பெருமாள், போக மூர்த்தி பதின்மர் பாடிய பெருமாள், ஆண்டாளுக்குரிமையான், தென்னரங்கன், அழகிய மணவாளன், பாதுகா ரங்கன் என்றெல்லாம் பெருமாள்பெயர்—நாச்சியார், ஸ்ரீ ரங்கநாயகி, என்றெல்லாம் அம்மாளுக்குப் பெயர். உத்ஸவருக்கு நம்பெருமாள் கஸ்தூரி ரங்கன் எனவும் பெயர். இவர் இராமன் ஆராதித்த பெருமாள். பட்டாபிஷேகத்துக்குப் பின் இராமன் விபீஷணனிடம் சுவர்ண விக்ரஹமான அரங்கனைப் பரிசாகக் கொடுத்தார். "லப்த்வா குலதனம் ராஜா" என்ற இராமாயண வசனப்படி விபீஷணன் இலங்கைக்குப் பெருமானை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்ற பொழுது சந்திரபுஷ்கரிணிக்கரையில் (ஸ்ரீ ரங்கத்தில்) பெருமாள் உகந்து எழுந்தருளிவிட்டார். பிறகு இங்கேயே தாம் பள்ளிகொண்டிருக்க விரும்புவதாகவும், ஆனால் என்றும் தம் நோக்கு இலங்கையையே நோக்கி இருக்கும் என்றும் சொன்னார். அதனால்தான் மேற்குப்பக்கம் திருமுடி வைத்து, கிழக்குப்பக்கம் திருவடி இட்டு, வடக்

குப் பக்கம் பின்பு காட்டி, சிரஞ்சீவியான விபீஷணன் அரசாளும் இலங்கைப் பக்கம் திரு முகமும், திருக்கண்களும் காட்டிப் பள்ளி கொண்டு இருக்கும் அரங்கன் அழகை இன்றும் காணலாம். வருடத்திற்கு ஒருதடவை விபீஷணனும் பெருமாளை ஆராதிக்க வருவதாகச் சம்பிரதாயம். "மன்னுடைய விபீஷணர்க்காம், மதில் இலங்கைத் திசை நோக்கி மலர்க் கண் வைத்த, என்னுடைய திருவரங்கர்க் கன்றி மற்றொருவருக்கு ஆளாவதோ" என்ற பெரியாழ்வார் பாசுரம் அரங்கன் பெருமைக்குப் பொன்முத்திரை யன்றோ? அரங்கன் திருக்கண் நிழலில் பல மகான்கள் அவதரித்து ஒதுங்கினார்கள். எனினும் பெரிய நம்பிகள் (இராமானுசருடைய ஆசாரியர்) பட்டர், வடக்குத் திரு வீதிப் பிள்ளை, உலகாரியன் முதலிய மகான்கள் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியவர்கள். தொண்டரடிப் பொடிகள், திருப்பாணாழ்வார், ஆண்டாள், ஆளவந்தார், இராமானுசர் முதலிய ஆசார்ய வள்ளல்கள் அரங்கன் திருமுற்றத்தே அடங்கினார்கள். மற்ற எல்லா திவ்விய தேசத்து எம்பெருமான்களைவிடப் பலபடியில் அரங்கனுக்கு ஏற்றம் சொல்லுவார்கள் பெரியோர்களாயினும், ஏழைகளின் தெய்வமாம், ஏற்புடைய தெய்வமாம், கலியுகத்தில் கண் கண்ட தெய்வமாம், பரதன் கண்டெடுத்த தெய்வமாம், பாதுகா தேவியினால் இன்னும் பன்மடங்கு அரங்கன் அழகும் ஏற்றமும் கொப்பேறி நிற்கின்றன. ஸ்ரீ வேதாந்த தேசிகன் தன்னைப் "பாதுகா ஸேவகன்" என்றே அழைக்க விரும்பினார் என்றால் பாதுகா தேவியின் பெருமை சொல்லத் திறமோ? ஸ்ரீரங்கம் சென்றவர்கள் அரங்கனுடைய, பாதகங்கள் தீர்க்கும் திருவடியைத் தரிசனம் செய்து தவறாமல் "ஸ்ரீசடாரி" என்ற ராம பாதுகையை உச்சந் தலையில் ஏற்றிக் கொண்டுவர வேண்டும். எல்லா நன்மைகளும் நிச்சயம் தாமே தளிர்க்கும்.

மற்றும் அரங்கன் அழகைக் காணக் கண்கள் கோடிதான் வேண்டும்! திருப்பாணாழ்வார் "என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றதும், ஆண்டாள் "என் அரங்கத்து இன்னமுதர் குழலழகர், வாயழகர், கண்ணழகர் கொப்பூழில் எழுகமலப் பூவழகர்" என்று வாய் வெருவி நின்றதும், பட்டர் ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில் அவன் அழகில் அலமந்து நின்றதும், ஸ்ரீ வேதாந்த தேசிகன் "தியான ஸோபானத்தில்" அவன் பேரழகு வெள்ளத்தில் ஆழ நின்றதும் இவைகளே சான்றுகள். கம்பர் தம் ராமாயணத்தை அரங்கேற்ற, அரங்கன் திருக்கோயிலையே பொறுக்கினதும் போதாதோ? இன்னும் எவ்வளவோ விஷயங்கள் சொல்ல வேண்டி இருப்பினும், இடத்திற்கு அஞ்சி இத்துடன் விடுத்தோம்.

மண்டலம் எல்லாம் விளங்கவே
மாணுருவாய் மாவலியை
வஞ்சித்து நெஞ்சுருக்கி
மண்ணளந்த பெருமாள்!
தெண்டிரைக் கடல் கடைந்து
தெள்ள முதில் வரும்
திருவை மார்பில் வைத்த
அரும்தேவு எங்கள் பெருமாள்!
வண்டணியும் மகிழ்மாறன்
ஒண் தமிழின் இசைகொண்டு
வரியரவிலே துயிலும்
மண வாளப் பெருமாள்!
கொண்டல் தவழ் சோலைசூழ்
கோயில் வாழும் நம்பெருமாள்!
—கட்டியப்பாட்டு (இராமானுசர்)

செய்திச் சுருக்கம்

பாவை மாநாடுகள்

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானங்களின் சார்பில், தஞ்சைப் பெரிய கோயிலில் 24-12-63 அன்று நடை பெற்றது. அறநிலைய ஆணையர் திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார், B.A., B.L., அவர்கள் தலைமை தாங்கினார்கள். திரு. ஆர். லக்ஷ்மண ஐயர், திரு. கே. ஆறுமுக நாவலர், திரு. கோதண்டபாணி முதலிய அறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தஞ்சை ஹரிகதாகாலட்சேபப் பயிற்சிப்பள்ளி மாணவிகளால் ஆண்டாள் என்னும் இசை நாடகம் நடை பெற்றது. ராஜ ஸ்ரீ ராஜாராம் ராஜா சாகேப் அவர்கள் வரவேற்புரையும், பொருளர் ஆட்சியர் திரு. என். சீனிவாசன், B.A., B.L., அவர்கள் நன்றியுரையும் நிகழ்த்தினார்கள்.

உய்திக்கு உரிய ஒரே வழி

திரு. டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, எம்.ஏ., எம்.ஓ.எல். பி.எச்டி.,

இறைவன் அருள் நிறைந்தவன்; அருளே வடிவமானவன்; எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன். எனவே, அருளும் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பதே யாகும். அருள் இல்லாத இடமே யில்லை. அங்ஙனமாயின் இறைவனருள் தமக்குக் கிடைக்க வில்லையே என்று சிலர் கூறுவது பொருந்தாக் கூற்றேயாகும். உண்மையில், எல்லா உயிர்களும் அவனருளில் மூழ்கிக் கிடப்பனவே யாகும்.

அம்மட்டுமா? இறைவனருள் எல்லோருக்கும் உரிய பொதுவுடைமையு மாகும். எனவே, எல்லோரும் அவனுடைய அருளுக்கு உரிமையுடையோரே ஆவர். ஆனால் அவன் அருளைத் தமக்கு உரிமையாகப் பெற்றிருந்தும், அதைத் துய்க்கும் வழி யறியாமையால்தான் சிலர், தமக்கு இறைவனருள் கிடைக்க வில்லை என்று ஏங்கித் தவிக்கின்றனர். அது யார் குற்றம்?

நீர் வேட்கை மிகுந்துள்ள ஒருவன் தூய நன்னீரில் மூழ்கிக் கிடந்தாலும் தன் வாயைத் திறந்து தண்ணீர் பருகாவிட்டால், நீர் வேட்கை தணியுமா? முயற்சியைத் தன்னுரிமையாகப் பெற்றுள்ளவன் மனிதன். வாய் திறந்து தண்ணீர் பருகுவதற்குரிய முயற்சி அவனிடம் உள்ளதேயாகும், முயற்சியால் எதையும் முடிக்கலாம் என்பதை அறிந்தவன் மனிதன். அவ்வாறிருந்தும் நீரில் மூழ்கிக் கிடக்கும் நீர் வேட்கையுடையவன் வாய் திறந்து தண்ணீர் பருகும் முயற்சியைச் செய்யாமல் துன்புறுவானேன்? வாயைத் திறந்து தண்ணீர் பருகவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு ஏன் வரவில்லை? தண்ணீர் நிரம்ப இருந்தும் நீர்வேட்கையால் அவன் துன்புறுவானேன்? "இதோ பருகும் நீர் உன் வாயருகிலேயே இருக்கிறது" என்று அவனுக்கு எவரேனும் உணர்த்த வேண்டும் போலும்!

எங்கும் நிறைந்த அருளை அனைவருக்கும் பொதுவுடைமையாக உரிமையாக்கி யிருந்தும், அதை உணர்ந்திருப்பவரைக் கண்டு, அருளே வடிவமான இறைவன் அவருக்கு அதை வாரி வழங்குகின்றான். வாரி வழங்கினாலும் அவரால் அதைத் துய்க்க முடிகிறதா? அருளைத் துய்த்தலில் குறைவிலா நிறைவாகிய இன்பம் ஏற்படவேண்டுமே! இறைவன் வாரி வழங்கும் அருளைத் துய்ப்பவருக்கு அஃதின்றித் துன்பம் ஏற்படுவானேன்?

பசி நிறைந்தவர், உண்ணும் உணவை நிரம்பப் பெற்றதும் பேராவலுடன் அதை வாரி வாரி விழுங்கவே தலைப்படுவர். பசி நிறைந்தவர்க்கு நா வறண்டிருக்கும்; தொண்டை உலர்ந்திருக்கும். அதனால், விரைவுடன் வாரிவிழுங்கும் உணவு உலர்ந்த தொண்டையில் எளிதில் புக மாட்டாமல் அடைத்துக் கொள்ளும்; உடனே விக்கலும் ஏற்படும். அப்போது பெருந் திண்டாட்டந்தான்! திண்டாட்டம் தணிப்பதற்கு உடனே செய்ய வேண்டுவது யாது? தண்ணீரைப் பருக வேண்டும்; தெளிந்த நன்னீரைப் பருகவேண்டும். அதையும் சிறிது சிறிதாகவே பருகவேண்டும். அப்போதுதான் விக்கலும் அடங்கி ஒழியும். தொண்டையும் நனைந்து விரியும். பிறகு உண்ணும் உணவு தடையின்றி உள்ளே செல்லும். உண்பதும் இனிதாகிச் சுவை பயந்து நிற்கும்.

பசி மிகுதியாயிருந்தாலும், பேருண்டியைப் பெற்றவுடன் அதைப் பேராவலுடன் வாரி விழுங்குதலில் உடனே கருத்துக்கொள்ளாமல், சிறிது நீரைப் பருகி நாவையும் தொண்டையையும் நனைத்து இளகச் செய்துகொண்டு பிறகு உண்டால் இடையில் இடர்ப்பாடுகள் ஏற்பட மாட்டா. நன்றியறிவுடைமை சிறந்த பண்பாடாகும். அதனால், பேருண்டியைப் படைத்தவனுக்கு முதற்கண் நன்றி செலுத்துதல் இன்றியமையாததாகும். அவ்வாறு செய்தால் உண்டி படைத்தவனுடைய முகமலர்ச்சியைக் கண்டு அகமலர்ச்சி பெறலாம். அகமலர்ச்சி

பெற்றபின், நீரால் தொண்டையை நனைத்துக் கொண்டு விரையாமல் தொண்டை கொள்ளும் அளவாகச் சிறிது சிறிதாக உண்டால் சுவையும் பெறலாம்; இடர்ப்பாடில்லாமல் வயிறு நிரம்ப உண்டு பசியும் ஆறலாம். ஆனுல், பேருண்டியை எதிரே கண்டதும் இவற்றையெல்லாம் கருதாமல் வாரி விழுங்குவதே மக்கள்பால் இயற்கையாக நிகழ்கின்றது. இதற்கு அடிப்படை யாது? அறியாமை, அறியாமை, அறியாமையேயாகும். இவற்றை அறிந்தவரும் அவற்றையெல்லாம் செய்யாமல் வாரி விழுங்குவதற்குக் காரணம் யாது? மறதி, மறதி மறதியேயாகும்! அறியாமையும் மறதியும் உணர்வை மறைப்பவையாதலால், அவற்றை உடன் பிறப்புக்கள் எனவும், மறைப்பை அவற்றிக்குத் தாய் எனவும் கூறலாம்.

ஏனைய உயிர்களுக்கு இல்லாத பகுத்தறிவைப் பெற்று உயர்வு பெற்றிருக்கும் உயர்திணையாகிய மக்களுக்கும் இம்மறைப்பு ஏற்படுவதற்குக் காரணம் யாது? அதுதான் முற்பிறப்புக்களில் அவர்கள் செய்த தீவினையாகும். தீவினைப்பயனே உணர்வை மறைத்து, அறியாமையையும் மறதியையும் உண்டாக்குகிறது.

முற்பிறப்புக்களில் தீவினை செய்தவர்க்கு உய்தியேயில்லையா? அவர்கள் கதி அதோகதி தானே? இல்லை! உய்தியுண்டு! தீவினைப் பயன் காரணமாக ஏற்படும் மறைப்புத் தானகத் தொழிற்படும் ஆற்றல் உடையதன்று. இறைவன் தொழிற்படுத்தினுல்தான், மறைப்பும் தன் தொழிலைச் செய்வதாகும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களும் இறைவனுக்கே உரிமையானவை. எனவே, தீவினைப் பயன் காரணமாக மறைக்குந் தொழிலையும் ஆற்றுபவன் இறைவனே.

படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களும் பிறந்து வாழ்ந்து மலம் நீக்கிக் கொள்வதற்கும், மலக்குறை உள்ளவிடத்து மீண்டும் புத்துடல் எடுத்து வருவதற்கு இறைவனிடம் ஒடுங்குதற்கும் பயன்படுவையாதலால் வரவேற்கத் தக்கனவே யாகும். மறைப்புத் தொழிலோ அறியாமையையும் மறதியையும் உண்டாக்கி அல்லலுள் ஆழ்த்துவதால் அது வரவேற்கற்பாலதன்ருகும். அருளல் தொழில் இனிப்பிறவாப் பேரின்பம் பயப்பதாதலால் சாலவும் வரவேற்கற்பாலதாகும்.

மறைப்பை நம் முயற்சியால் போக்கிக் கொள்ளமுடியாது. அருளே வடிவான இறைவன், பிறவி யறுத்துப் பேரின்பம் பெறுவதற்கு உரிய அருளை வாரி வழங்கிய வண்ணம் இருக்கின்ருன். அவனுக்கு நன்றி செலுத்தி, அவனருளைப் பெற்றுத் துய்க்கும் முறையறிந்து துய்த்துப் பேரின்பம் பெறுவதற்குரிய உணர்வு, நம் தீவினைப் பயனல் மறைக்கப் படுவதால், அருளைப் பெற்றும் துய்க்கமாட்டாமல் திண்டாட்டம் எய்துகின்ரேம். ஆனுல் மறைத்தலைச் செய்பவனும் அவனேயாதலால், அருளே வடிவமான அவனை அழுதழுது வேண்டினுல், அவன் மறைப்பைப் போக்கி உணர்வைத் தெளிவாக்கி அருளைத் துய்த்துப் பேரின்பம் அடையச் செய்துவிடுவான். உலகில் உள்ள ஏனையவரும் ஏனையவையும் உற்ற துணையாகமாட்டா என்பதைத் தெளிவாக அறிந்து, அவனெருவனே உற்ற துணையாவான் என்ற உறுதியுடன் அவனை அடைக்கலமாக அடைந்துவிட்டால், நமக்கு உய்தியுண்டாகும் என்பதில் எள்ளளவும் ஐயமேயில்லை. இவ்வுண்மையைத் தெள்ளத்தெளிந்து உய்திபெற்றவர்கள் நமக்குச் சிறந்த வழி காட்டிகள் ஆவர். நாயன்மார்களென்றும் ஆழ்வார்களென்றும் எண்ணற்றவர்கள் நமக்கு முன்னேடிகளாய் வழிகாட்டியுள்ளார்கள். அவர்களுள் மணிவாசகப் பெருமானுர் இவ்வுண்மையை நமக்கு உணர்த்தியிருக்கும் அருள்வாக்கமுதம் ஈண்டு நினைவு கூர்தற்குத் தக்கதாகும்.

"வழங்குகின்ருய்க் குன் அருளா
ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக் கினேன்வினை
யேன்என் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்
பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேனுடை யாயடி
யேனுன் அடைக்கலமே".

வாரி வழங்கும் அருளைத் துய்க்கும் முறையறிந்து துய்க்கமாட்டாமையால் விக்கல் ஏற்பட, அவ்விக்கல் நீங்குவதற்காக அவனை அடைக்கலமாக அடைந்து 'தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத் தந்து உய்யக் கொள்ளுமாறு' மணிவாசகப் பெருமானுர் வேண்டுவதை நாம் பலகால் எண்ணி யெண்ணிப் பார்த்துக் கடைப்பிடித்தல் வேண்டும்.

தழங்குதல் என்றால் ஒலித்தல் என்பது பொருளாகும். நீர் அலைந்து கொண்டேயிருந்தால் ஒலியுண்டாகும். ஒலியெழுப்பி அலை அடித்து நிற்கும் நீர் தெளிவின்றிக் கலங்கியிருக்கும். அதனாலே நீர் நிலையின் ஆழம், அதன்கண் உள்ள பொருள்கள் ஒன்றும் தோன்றா. கலங்கியுள்ள நீர் பருகுவதற்கும் ஏற்றதாகாது. பருகினால் உடலுறுப்புகளுக்கு ஊறு ஏற்படும். எனவே, ஒலித்தல் இல்லாத, அலை அடித்துக் கலங்குதல் இல்லாத தெளிவான நீர் தரவேண்டும் என்று அவர் வேண்டுகின்றார். தெளிவான தூயநீர் சுவையுடையதாய் இருப்பது இயற்கை. அதனால் தேனை ஒத்த நீர் தரவேண்டும் என்று அவர் வேண்டுகிறார். கலங்கல் நீர் மறைப்பைச் செய்யும்; தன்னுள் இருப்பவற்றை அறியாதவாறு தடுக்கும்; தன்னை உண்டார்க்கு உளத் தெளிவைப் போக்கி மறதி முதலியவற்றை உண்டாக்கும்; எனவே, அவர் மறைப்பைப் போக்கி, அருளைத் துய்க்கும் வழியை உணர்த்தி உய்யக் கொள்ளுமாறு இரங்கி வேண்டுவது இதனால் தெளிவாகின்றதன்றோ!

வேண்டுவார் வேண்டுவதே ஈபவன் இறைவன். உண்மையுடனும் ஈடுபாட்டுடனும் அவனை அடைக்கலம் அடைந்து வேண்டுபவர் வேண்டுவதை ஈயத் தன்னைத் தட்டிக் கேட்பவர் இல்லாத தலைவன் இறைவன். தான் விரும்பியவாறு எதையும் செய்ய வல்லவன் இறைவன். அவன் செய்யும் செயல்களில் காரண காரியத் தொடர்பு இல்லாமலே அவன் வினைவு செய்வான். எனவே, சஞ்சிதம் என்றும், பிராரப்தம் என்றும், ஆகாமியம் என்றும் மூவகையாகப் பகுக்கப்படும் வினைகளிலிருந்து விடுதலை பெற்று உய்தி பெற விரும்புவோர், அவனை அடைக்கலமாக அடைதலையே நாடி நிற்கவேண்டும். அவனை அடைக்கலமாக அடைந்தால் இவ் வினைகளெல்லாம் ஊழித்தீ முன்னர் பஞ்சுத்துய் ஒப்ப விரைந்து நீறுய்விடும் என்பதில் ஐயம் கொள்ள வேண்டுவதின்று. பிராரப்தத்தின் பயனை நுகர்ந்தே ஒழிக்கவேண்டும் என்பர். அவனை அடைக்கலமாக அடையின், பிராரப்தத்தின் பயனை வினைப்பயனும் மிகுந்து தாக்குதலின்றித் தணிந்திலங்கும் என்று உறுதியாகக் கொள்ளலாம். அருளே வடிவமான இறைவனை அடைக்கலம் அடைந்த பின் எதற்கும் அஞ்சாத வீறும் உண்டாய்விடும்.

இறைவனருளைப் பெறுதற்கு அவனிடம் அன்பைச் செலுத்துதல் மக்களுக்கு இன்றியமையாததாகும் என்பர். அருளே வடிவமான இறைவன் அனைவரும் தன்னை அடைக்கலமாக அடைந்து உய்திபெற வேண்டும் என்பதற்காகவே இடைவிடாது அரும்பாடுபட்டு வருகின்றான். தன்பால் அனைவரும் அன்பு கொண்டாலன்றி மக்கள் தன்னை அடைக்கலமாக அடையார் என்பதை அவன் நன்கு உணர்வான். அதனால், தன்பால் அன்பு கொள்வதற்கும் அவன் முயலும் முயற்சியும் உழைக்கும் உழைப்பும் எல்லையற்றனவாகும். தீவினை மிகுதியால் கல்லினும் வலியராய் நிற்கும் மக்கள் எண்ணிறந்தவர்; கல்லினும் வலியமனம் படைத்தவர்கள் அவர்கள். கனிந்த மனமே அன்பு செய்தற்கு ஏற்றதாகும். எனவே, கனிந்த மக்களே அன்பு செய்தற்குத் தகுதியுடையவர். கல் மனம் உடையவர் கனிந்த மனம் பெற்றாலன்றி அவனிடம் அன்பு செய்ய முடியாது. அனைவரையும் கனிந்த மனம் உடையராக்க வேண்டும் என்று விழைவு கொள்பவன் அவன். எனவே கல்லை மென் கனியாக்கும் வித்தையில் அவன் பழகி வெற்றி பெறுகிறான். எல்லா விச்சைகளுக்கும் இருப்பிடமான அவன் பழகித்தான் இவ்விச்சையில் வெற்றி பெற வேண்டுமா? நாம் இவ்வாறு நம் சிற்றறிவினால் எண்ணுகின்றோம். அவ்வளவே! கல்லை மென் கனி ஆக்கும் விச்சையைக் கொண்டு கல்மனம் உடையவரைக் கனிந்த மனம் உடையராகச் செய்து தன்கழலணிந்த திருவடிகளில் அவன் அன்பு கொள்ளச் செய்கிறான். அதனால் தம் முயற்சியின்றி அவன்பால் அன்பு செலுத்தி அவன் அருளைத் துய்க்கும் முறையையும் அறிந்து அருளில் மூழ்கித் திளைத்து இன்பம் தேக்கெடுத்து நிற்கும் நிலையை மக்கள் எய்துகின்றனர்.

ஆயினும் என்? உலகியல் மருட்சியுடையது. அவனை நோக்கும் நோக்கைச் சற்றுத் திருப்பினும், உலகியல் மருட்சி பலப்பல கோலங்கொண்டு தன்பால்ஈர்த்து விடுகின்றது; எல்லாம் அவனிடம் குறைவற உண்டென்றாலும், அவற்றை அணு அணு அளவே உடைய மருட்சி எப்படியோ மருட்டித் தன் பால்ஈர்த்து விடுகின்றது. பேர் என்றும், புகழென்றும், பதவி என்றும் நாட்டம் கொண்டு அங்கும் இங்கும் ஓடி அலைந்து முடிவில் மக்கள் துன்பத்

தில் தோய்கின்றனர். துன்பம் மிகுந்த இடத்தில் அவன் நினைவு மீண்டும் வருகிறது. அப்போது அவனை அவர்கள் நாடுகின்றனர். கல் மனத்தைக் கரைத்துத் தன்பால் வலிந்து அன்பு கொள்ளச் செய்த இறைவன் அவர்கட்கு எளிதில் காட்சி தராமல் ஒளிந்து திருவிளையாடல் நடத்தத் தலைப்படுகின்றான். இருந்தாலும் அவன் அருளே வடிவமானவன் அல்லனோ? தன்பால் அன்புண்டாக்கியவன் அவன் அல்லனோ? ஏன் அவ்வன்புண்டாக்கினான்? தன்னை நினைக்கமாட்டாத கல் மனத்தைக் கனிவித்து அன்புண்டாக்கிய அவன், மறுபடியும் அவ்வன்பை உண்டாக்க மறுப்பனோ? எனவே, தன் பிழை பொறுக்க வேண்டுமென்று மீண்டு வேண்டினால் அவன் மீண்டும் ஆட்கொள்வான் என்பது உறுதி. இதனை நன்குணர்ந்த மணிவாசகப் பெருமானார் தம் அநுபவத்தை நாம் உணரவேண்டும், உணர்ந்து தம்மைப்போல் திருந்தி அவனிடம் அடைக்கலம் அடைந்து உய்யவேண்டும் என்று அருளிச் செய்துள்ள பாடல் ஈண்டு நினைவு கூரற்குரியதாகும்.

"இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி ஆக்கும் விச்சைகொண்டு
என்னை நின்கழற்கு அன்பன் ஆக்கினாய்
எல்லை இல்லைநின் கருணை எம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லையேஎனக் கின்னும் நின்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே."

என்று அவனுடைய எல்லையில்லாத அருட்டன்மையில் உறுதிகொண்டு, அதனால் அவன் தன்னை உலகியலிலிருந்து மீட்டு, உய்தியளிப்பான் என்று மணிவாசகர் பாடிய பாடல் பொருளுணர்வுடன் பலகால் ஓதி நினைந்து கடைப்பிடித்தற்குரியதாகும்.

இதுகாறும் கூறியவாற்றால், இறைவன் அருளே வடிவமானவன் என்பதும், அவன் தன் அருளை அனைவர்க்கும் வேறுபாடின்றி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறான் என்பதும், அவ்வாறு வாரி வழங்கிக் கொண்டிருந்தாலும் மக்கள் தம் தீவினையால் அதைத் துய்த்தற்கு இயலாதவாறு இருக்கின்றனர் என்பதும், அவனை அடைக்கலமாக அடைந்தால் தீவினையை அகற்றி உய்தி பெறச் செய்வான் அவன் என்பதும், தன் அருளைப் பெற்றுத்துய்த்தற்கு உரிய அன்பையும் அவனே நமக்குத் தன் அருளுடைமையால் வழங்குகின்றான் என்பதும், உலகியல் மருட்சியால் ஏற்பட்டு அவனிடம் அன்பு செய்தலை விட்டு மக்கள் வெளிநோக்கு உடையராய் அலைந்து திரிந்து துன்பத்தால் மொத்துண்டு பின்னர் அவனே துன்பம் நீக்கி இன்பம் தரவல்லவன் என்பதை உணர்வர் என்பதும், அங்ஙனம் திரிந்து நின்றவர்களும் மீண்டு வந்து இரந்து வேண்டினால் பழையபடி அவன் அன்பைக் கொடுத்துத் தன்னை நாடி நிற்கச் செய்வான் என்பதும், அவனை அடைக்கலமாக அடைந்து பிறழாது நிலைபெற்று நிற்பவர்க்குப் பிறப்பறுத்துப் பேரின்பம் அடைதற்குரிய பேறு உண்டாம் என்பதும், அதனால் அவனை அடைக்கலமாக அடைதலே உய்தி பெறுதற்குரிய ஒரே வழி என்பதும் தெளியலாம்.

செய்திச் சுருக்கம் :

பாவை மாநாடு.

திண்டுக்கல் வட்டத்தைச் சேர்ந்ததாகிய, ரெட்டியார் சத்திரம் ஸ்ரீ கோபிநாத சுவாமி தேவஸ்தானத்தில் 10—1—64 அன்று நடைபெற்றது. துணை ஆணையர் திரு. அ. சக்கரை சேர்வை, பி.ஏ.,பி.எல்., அவர்கள் தலைமை தாங்கினார்கள். அறங்காவலர் திரு. ஓ. சின்னசாமி பிள்ளை அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். திருவாளர்கள் நீ. சி. சுந்தரராமன், ரா. முருகேச கவிராயர், பி. கே. சண்முகநாதன், பி.ஏ.,பி.எல்., உதவி ஆணையர் திரு. எம். சூரியராஜ், பி.ஏ.,பி.எல்., நகராட்சித் தலைவர் திருமதி. நாகலம்மாள் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். பாவைப் போட்டியில் வெற்றி பெற்ற 100 மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இறைபணியாளர் திரு. சீனிவாசன் அவர்கள் நன்றியுரை கூறினார்.

ஒன்று அவன் தானே!

'பாலகவி' வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் (தத்புருஷ தேசிகர்) அவர்கள்,
தேவகோட்டை.

"கடவுள் ஒருவரே" என்பது எல்லா மதவாதிகளாலும் ஏற்றுக் கொள்ளப் பெறுவது. குடியாட்சி நாட்டில் அப் பொறுப்பை மேற்கொண்ட தலைவனே; முடியாட்சி நாட்டில் அந்நாட்டையாளும் அரசனே பலராக இருக்க முடியாது. ஆனால் அரசாங்க அலுவல்கள் பல அதிகாரிகளால் மேற்கொள்ளப் பெறும். அதுபோலவே முதற் பொருளாகிய கடவுள் ஒருவராயிருக்க; அவரது ஆணையினைப் பெற்ற தெய்வங்கள் பலவாயிருந்து, அவரது கட்டளைப்படி உயிர்கள் போகங்களை உண்பதற்கு உதவி செய்து கொண்டிருக்கின்றன. இவ்வுண்மை வேதாகமங்களிற் கண்ட முடிந்த முடிபானது. இதனை உணரமாட்டாதார், வைதிக நெறி பற்றி அமைந்த திருக்கோயில்களிலிருக்கும் தெய்வத் திருவுருவங்கள் பலவற்றையும், முதற் பெருங்கடவுளின் உருவத் திருமேனிகள் சிலவற்றையும் கண்டு, "பல கடவுளரை வழிபடுபவர் நாம்" என்று சொல்லித் தங்களது அறியாமையை வெளிப்படுத்திக் கொள்ளுகின்றனர். இது, அரசனது ஆணையைப் பெற்று, அரசாங்க அலுவல்களில் ஈடுபட்டுள்ள அனைவரையும், அரசனென்றே கருதுவதையும், அரசன் அணிந்து கொள்ளும் ஆடையணிகலன்களின் வேறுபாடு பற்றி, அவனை ஒருவனல்லன் என்று துணிவதையும் ஒக்கும்.

அரும்பொருள்கள் பலவற்றைத் தமிழுலகத்திற்கு வழங்கத் திருமூலதேவ நாயனார், திருக்கயிலாய பரம்பரையிலிருந்து வந்தார். ஒப்புயர்வற்ற பரம்பொருளின் பேரருளைக் குறைவறப் பெற்ற அவர், தவங் கிடந்து கண்டு வெளிப்படுத்திய முதலுண்மை,

"ஒன்றவன் றானே யிரண்டவ னின்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தானைந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே"

என்னும் திருப்பாடலாகத் திருமந்திரத்தில் முதலிடம் பெற்று விளங்குகின்றது. மனிதர்களாகப் பிறந்த அனைவரும், கடவுளுண்மையை ஏற்றுக் கொள்ளுகிறவர்களென்று சொல்வதற்கில்லை. "கடவுள் உண்டு" என்ற நிச்சய புத்தி வருவதற்கு, மனிதராகவே சில பிறவிகள் எடுக்க வேண்டுமென்று மணிவாசகப் பெருந்தகையார் கூறுவர். கடவுள் நிச்சயம் பிறப்பட்ட பின்னரும், அக் கடவுளாவார் யார் என்பதில் தெளிவு உண்டாக, மேலும் பல பிறவிகள் எடுத்தேயாக வேண்டும்.

வைதிக நெறியாளரனைவருக்கும் வேதம் பிரமாண நூல். வேதத்தில் கடவுளின் இலக்கணம் விரிவாகப் பேசப் பெற்று, அவ்விலக்கணங்களெல்லாம் அமைந்த கடவுளாவார் யார் என்பது சுருக்கமாகவும், குறிப்பாகவும் பேசப் பெற்றுள்ளது. வேதாந்தமாகிய உபநிடதங்களையும் சித்தாந்தமாகிய சிவாகமங்களையும் உணர்ந்தவர், முதற் கடவுள் உண்மையில் தெளிவுடையவராயிருப்பர். அவ் வேதாந்த சித்தாந்தங்களின் சாரமாயிருப்பவை, செந்தமிழ்த் திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களுமாம். திரு முறைகளில் ஒன்றான திருமந்திரம் வேதத்தைப் போல, முதலில் கடவுளிலக்கணத்தை உணர்த்த முற்பட்டு, மேற்கண்ட திருப்பாடலை நமக்கு வழங்கியுள்ளது.

உபநிடதம் "ஏகம் ஏவ" என்று இறைவனைக் குறித்துக் கூறும். அதனைத் திருமூலர் "ஒன்று அவன்தானே" என்று அருளினார். வாக்கு மனாதீத கோசரனாய், ஆன்ம போதத்திற்கு நெடுந் தொலைவில் இருப்பவன் ஆண்டவன் என்பதைக் குறிக்கச் சேய்மைச் சுட்டுச்

சொல்லாகிய "அவன்" என்பதை, இங்கே ஆசிரியர் பயன்படுத்திக் கொண்டார். சுட்டிக் காட்டி உணர்த்த முடியாதனவற்றையெல்லாம் இங்ஙனம் சேய்மைச் சுட்டால் அறிவிப்பது, நமது பழைய மரபு. ஆளுடைய பிள்ளையார் சிவஞானம் பெற்ற நிலை, அறிந்தறிவிக்க முடியாத பெரு நிலையாகும். அதனை அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் சுவாமிகள், "தவ முதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்" என்று அருளிச் செய்திருப்பது இங்கே நினைவு கூருதற்குரியது.

கடவுள் உலகுயிர்களோடு கலந்து அவையே யாயும், அவற்றிற்கு அப்பாற்பட்டுத் தானேயாயும், அவற்றின் தொழிற்பாட்டுக்குக் காரணமாய் அவற்றோடு உடனாயுமிருப்பவர். இம் மூன்று நிலைகளில் எல்லாவற்றையும் கடந்து அப்பாற்பட்டு இருக்கும் நிலையே, அவரது தன்னிலையாகும். இந்த நிலையிலேயே அவர் 'ஏகன்' என்று பேசப் பெறுகிறார். இந்தத் "தானேயான தன்மையில் அக் கடவுள் ஒருவராகவே உள்ளார்" என்பதனோடு கடவுளுடன் இணையாக வைத்துப் பேச இரண்டாவது ஒரு பொருளில்லை என்ற உண்மையும், "ஒன்று அவன்தானே" என்பதிலிருந்து உணர்த்தப் பெறுகின்றது. "ஒருவனாயுலகேத்த நின்ற நாளோ" என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கும் "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்ற மணிவாசகமும் இக் கருத்துப் பற்றி எழுந்தனவேயாம்.

தன்னிலையில் ஒருவராயிருக்கிற கடவுள், ஆன்மாக்கள் பொருட்டாக அநேகராகி, அவைகளெல்லாம் அவருக்கு அடிமையாயிருக்க அவர் அவைகளுக்கு ஆண்டானாகி, இறைவனாயிருக்கிறார். இதனைச் சிவ புராணம் "ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க" என்ற வரியில் வைத்துக் கூறும்.

எல்லாவற்றையும் கடந்து நின்ற கடவுள் உயிர்களை நோக்கி அவற்றை உலகத்தோடு தொடர்பு படுத்தக் கருதி, அவ்விரண்டனோடு தானுங் கலக்க முற்படும் வேளையில் சிவம்—சத்தி என்னும் இரண்டு பொருள்களாக எழுந்தருளியிருப்பார். உயிர்களுக்கு அவ்வவற்றின் நல்வினை தீவினைகளுக்கேற்ப உடம்பு, உட்கருவி, உலகம், நுகர்ச்சி ஆகியவற்றை இறைவன் கூட்டுகின்றான்; பாசச் சேர்க்கை, சுதந்திரமின்மை முதலியவற்றால் அறிவுடைய பொருளாகிய உயிர் அறிவில் பொருளைப் போலச் செயலற்றுக் கிடந்த வேளையில், அதன்பால் ஆண்டவன் கருணை கொண்டு உதவி செய்யத் தொடங்கி இடையீடின்றி எக் காலமும் அதனைச் செய்தே வருகின்றான். இந்த இறைவனது பெருங் கருணையே 'சத்தி' என்று சொல்லப் பெறுவது.

"அருளது சத்தி யாகும்
அரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச்
சிவமின்றிச் சத்தி யில்லை"

என்பது சிவஞான சித்தியார். இறைவனது ஐந் தொழில்களுள் முதற்றொழிலாகிய படைத்தலைச் செய்ய அவன் முற்படும் பொழுது அவனும் அவனது அருளுமென இரண்டாகப் பிரிந்து அமையும் நிலை அவனுக்கு உண்டாகின்றது. சிவமும் சத்தியும் நெருப்பும் சூடும் போலக் குண குணித்தன்மையால் இரண்டாக உரைக்கப் பெற்றனவேனும், பிரிக்க முடியாத ஒற்றுமை பற்றி ஒன்றாகவே கொள்ள வேண்டியனவாகும்.

கடவுள் செய்கின்ற ஐந்தொழில்களுள் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றும் உடல் பற்றியன. மறைத்தல், அருளலாகிய இரண்டும் உயிரைப் பற்றியன. காணப் பெறுகின்ற இந்தத் தூல உடலுக்குள்ளே, காணப் பெறாத சூக்கும உடல்கள் நான்கு உள்ளன. அவற்றிற்கு உள்ளேயிருப்பது உயிர். உடலை விட்டு உய்தி பெற வேண்டிய உயிர், உடலை வைத்தே உய்திக்குரிய வழியைத் தேடிக் கொள்ள வேண்டும். இதனாலேயே நமது திருமூலதேவ நாயனார்,

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்"

என்று அருளிச் செய்தார். உயிருய்ய உடம்பு சாதனமாயிருப்பது பற்றி, உயிருக்குரிய தொழில்களாகிய மறைத்தல் அருளல்களை, உடம்புக்குரிய தொழில்களாகிய காத்தல் அழித்தல்களுக்குள் அடக்கிச் சொல்லுவதும் உண்டு. முத்தொழில்களுள் அடங்கும் ஐந் தொழில்கள் இறைவன் நேரே செய்வனவும்,

பிறரைக் கொண்டு செய்விப்பனவுமென இரண்டு முறைகளில் அமைவன. முன்னது உயர்ந்த தகுதியில் உள்ள ஆன்மாக்கள் பொருட்டாக நிகழும். பின்னது தாழ்ந்த தகுதியிலிருப்பவர் பொருட்டு நடைபெறும். உயர்ந்தோர் சுத்த மாயாபுவன வாசிகளென்றும், தாழ்ந்தோர் அசுத்த மாயாபுவன வாசிகளென்றும் நூல்கள் கூறுகின்றன.

அசுத்தமாயாபுவன வாசிகளுக்குப் படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில்களையும் இறைவன் நேரே செய்வதில்லை. எனினும் பிரமன், திருமால், உருத்திரன் ஆகியவர்களுக்கு அவ்விறைவன் வழங்கிய அதிகாரமே அத் தொழில்களை அவர்கள் செய்யும் தகுதியில் அவர்களை வைத்திருக்கிறது. தானே செய்வனவும் தனது அதிகாரம் பெற்றவர்களைக் கொண்டு செய்விப்பனவுமாகிய இவ்விருவகை முத்தொழில்களிலும் சிவன் ஒருவனே நின்று விளங்கி அருள் புரிகின்றான். இதனையே " நின்றனன் மூன்றினுள் " என்று திருமந்திரம் கூறியது. மேலே கூறப் பெற்ற மூன்று பொருள்களும் இந்த வரிசையிலேயே வைத்துத் திருவெழு கூற்றிருக்கையில் " ஓருரு வாயினை மானுங்காரத், தீரியல்பாயொரு விண் முதல் பூதலம், ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும், படைத்தளித் தழிப்ப மும்மூர்த்திக ளாயினை " என்று திருஞான சம்பந்த சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளப் பெற்றுள்ளன.

சிவபெருமானாகிய முதற் கடவுளை விசுவாதிகனென்றும், விசுவகாரணனென்றும், விசுவாந்தரியாமி என்றும், விசுவரூபி என்றும் வேதங்கள் கூறுகின்றன. பொருள்களெல்லாவற்றிலும் கலந்தும், அவையனைத்தையும் கடந்தும் விளங்குகின்ற இறைவனது சொருப தடத்த நிலைகள் இங்ஙனம் ஈரிரண்டு தன்மைகளில் உள்ளன என்பதை,

" உலகினை யிறந்து நின்ற
தரனுரு வென்ப தோரார்
உலகவ னுருவிற் றோன்றி
யொடுங்கிடு மென்ப தோரார்
உலகினுக் குயிரு மாகி
யுலகுமாய் நின்ற தோரார்
உலகினி லொருவ னென்ப
ருருவினை யுணரா ரெல்லாம் "

என்று சிவஞானசித்தியாரும் அறிவிக்கின்றது. இதனையே ஆசிரியர் திருமூலதேவ நாயனார் " நான்கு உணர்ந்தான் " என்று அருளினார். உணர்ந்தான் என்னும் தன்வினை முடிபு " உணரப் பெற்றான் " என்னும் பிறவினை முடிபுப் பொருளை உடையது.

மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளையும் அடக்கியாள்பவர் பெரியோர். இவர்களிடத்தும் கூட அப் பொறிகள் தத்தம் சேட்டைகளை இடமறிந்து செய்து கொண்டுதானிருக்கும். அங்ஙனம் செய்யுங் காலத்து அவற்றிற்கு அடிமைப்பட்டு உள்ளத்தை அவைகளின் வழியே செல்லவிடாது, அவர் தடுத்து நிறுத்துவர். செயற்கையால் பொறிபுலன்களை அடக்கியாளும் சிவஞானிகளுக்கு மேலாகச் சிவபெருமான், இயற்கையாகவே புலன்களை வென்றவராயிருக்கிறார். பொறிகள் புறப் பொருள்களின்பாற் செல்லக் கண்டு அங்ஙனஞ் செல்ல விடாது அடக்குதல் இறைவன் தன்மையன்று. பொறிகள் பொருள்களின்பாற் செல்லாதிருத்தலே அவன்பாலுள்ளது என்பதை உணர்த்த " ஐந்து வென்றனன் " என உரைத்தருளினார்.

சித்தும் சடமுமாகக் காணப் பெறுகிற எல்லாப் பொருள்களிலும் கலந்திருக்கின்ற இறைவன் எல்லாத் தெய்வங்களுமாயிருந்து உயிர்களுக்குப் போக போக்கியங்களை வழங்கி வருகின்றான். இறைவனது திருவருள் உயிர்களுக்கு ஐந்தொழில்களின் வாயிலாகவே வந்து அமைகின்றது. அவ்வைந் தொழில்களையும் ஆண்டவன், பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய திருவுருவங்களில் இருந்தும், அத்தொழில் நிகழ்ச்சிக்கு மூலமாகிய பிரணவ வடிவ விநாயகப் பெருமான் திருவுருவத்திலிருந்தும் செய்கின்றானென்பது சாத்திர முடிபு. நமது உடம்பினுள்ளே இவ்வறுவகைத் திருவுருங்களையும் கொண்டு ஆண்டவன் எழுந்தருளியிருக்கின்ற இடங்களை ஆறு ஆதாரங்கள் என்று கூறுவர். அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன.

சதாசிவத்துக்கு மேற்பட்டுப் பரசிவமாகத் துவாத சாந்தமாகிய ஏழாமிடத்தில் விளங்கிக் கொண்டிருக்கின்ற இவ்விறைவனே

மற்றை ஆறிடங்களிலும் வெவ்வேறு திருவுருவங்களை உடையவனாய் எழுந்தருளியிருந்து அநுக்கிரகம் செய்கின்றானென்னும் உண்மை "ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச் சென்றனன்" என்ற பகுதியில் அறிவிக்கப் பெற்றுள்ளது.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் என்னும் எட்டுப் பொருள்களும் இறைவனது வடிவங்கள் என்று சொல்லப் பெறும். இவற்றை "அட்ட மூர்த்தங்கள்" என்பர். "மேவ, வரும் அட்ட மூர்த்தமாம் வாழ்வே" என்பது கந்தர்கலி வெண்பா. உருவமாயும், அருவுருவமாயும், அருவமாயும் அவற்றிற்கு அப்பாற்பட்டும் இருக்கின்ற ஆண்டவன் அந்நிலைகளைத் தன்பாற் கொண்ட அட்ட மூர்த்தங்தளின் வடிவமாயிருக்கின்றானென்று உணர்ந்து கூறினர் ஆன்றோர்.

"இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
யியமான னாயெரியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகி"

என்பது அப்பரடிகள் திருவாக்கு. பார்க்குமிடம் எங்கும் பரிபூரணன் நீக்கமற நிறைந்திருக்கின்ற நிலை, உயர்ந்த ஞானிகளுக்கே புலப்படும். அப்பெரு ஞானிகளே, அட்ட மூர்த்தங்களிலும் ஆண்டவனது கலப்புண்மையை நன்குணர்வர். இவ்வட்ட மூர்த்தங்களின் சொரூபமாக அவனை உணரப் பெற்றவர்களுக்கு அவன் அவற்றினுள்ளேயிருந்து அருள் புரிவானென்பதை "தான் எட்டு உணர்ந்திருந்தான்" என்று இறுதியில் அறிவுறுத்தியருளினார் நமது ஞானாசிரியர்.

இங்ஙனம் ஒன்று முதல் எட்டு வரை எண்ணலங்காரம் பொருந்தச் செய்யுளை அமைத்து, இறைவனது சொரூபம் தடத்தமென்னும் இரு பெரும் நிலைகளையும் தமது திருமந்திர மாலை முதற் செய்யுளின் மூலமாக நமக்கு வழங்கியருளிய ஆசிரியர் திருமூலதேவ நாயனாரை வந்தித்து வாழ்த்துதல் கடமையாகும்.

நலம் பெருகுக

செய்திச் சுருக்கம்

மின் விளக்கேற்று விழா.

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான ராஜ கோபுரத்தின்மேல் பம்பாய் ஸ்ரீ பாசுதேவ சோமானி அவர்களின் நன்கொடையால் 16—12—63 அன்று, அறங்காவலர் ஸ்ரீ யு. பி. ஆழ்வார் அய்யங்கார் அவர்களால் மின் விளக் கேற்றப்பட்டது. நிர்வாக அதிகாரி ஸ்ரீ எம். சிதம்பரம் பிள்ளை வரவேற்புரையும், ஸ்ரீ அழகப்ப ஐயங்கார் நன்றி யுரையும் கூறினார்கள்.

பாவை மாநாடுகள்

சென்னை திருவேட்டீஸ்வரர் கோயிலில், திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் 11—1—64 அன்று நடை பெற்றது. உதவி ஆணையர் திரு இராமச்சந்திர ஐயர், எம்.ஏ., பி. எல். தலைமை தாங்கினார்கள். திரு உ. வே. சா. க. சுப்பிரமணிய ஐயர், வரவேற்புரை கூறினார். சென்னை நகர மேயர் திரு ஆர். சிவசங்கர மேத்தா, M.L.C., பன்னிரு திருமுறைப் பாடல்கள் பொறிக்கப் பெற்ற சலவைக் கற்களை ஷெ கோயிலில் திறந்து வைத்தார். திரு பூ. ஆலால சுந்தரம் செட்டியார், M. A., திரு அ. ச. ஞான சம்பந்தம், M. A., ஆகிய அறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

பழநி தேவஸ்தானத்தின் சார்பில் 11—1—64 அன்று நடைபெற்றது. திரு V. V. C. R. முருகேச முதலியார், துணை ஆணையர் திரு அ. சக்கரை சேர்வை, பி. ஏ., பி. எல்., டிரஸ்டி திரு ஏ. எஸ். மாணிக்கம் பிள்ளை, ஆகியவர்கள் கலந்து கொண்டனர். திருவாளர்கள் ரா. முருகேச கவிராயர், அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாத்தாச்சாரியார், நாகர் கோவில் ஆறுமுக நாவலர் ஆகிய பேரறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பெங்களூர் திருமதி ஏ. ஆர். ரமணி அம்மாள் குழுவினரின் இன்னிசை நடை பெற்றது. டிரஸ்டிகள் திரு பி. மௌன குருசாமி, திரு பி. எஸ். கே. லக்ஷ்மிபதிராஜு முதலிய பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிர்வாக அதிகாரி திரு ஆர். ராமையா நாயுடு நன்றியுரை கூறினார்கள்.

திருமுக்கூடல் கல்வெட்டுச் செய்திகள்

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார், சிதம்பரம்.

திருமுக் கூடல் இருக்குமிடம் :

இவ்வூர், செங்கற்பட்டு ஜில்லா **மதுராந்தகம்** தாலூகாவில், செங்கற்பட்டிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் ரயில் பாதையில் ரயில்வே நிலையமாகிய பழைய சீவரத்துக்கு இரண்டுமைல் தூரத்தில் இருக்கிறது.

பெயர்க்காரணம்

பாலாறு, வேகவதி, செய்யாறு என்னும் மூன்று ஆறுகளும் கூடும் இடத்தில் நிலைபெற்றிருப்பதால் இவ்வூர், **திருமுக்கூடல்** என்னும் பெயர் எய்திற்று. பழம் பெருமை வாய்ந்த வேங்கடேசப் பெருமாள்கோயிலைத் தன்னகத்துக் கொண்டு விளங்குவதால், இவ்வூர்க்குத் திரு என்ற அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள்

இவ்வூரிலுள்ள வேங்கடேசப் பெருமாள் கோயிலில் இருபத்திரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகள், கங்க பல்லவரில் விசய நிருபதுங்க விக்கிரமவர்மன்; சோழ மன்னர்களில் முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன், இராஜகேசரிவர்மன் வீரராசேந்திர தேவன், முதலாம் குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன்; விசயநகர வேந்தரில் வீரஸ்ரீ புக்கண்ண உடையார் காலங்களிற் பொறிக்கப் பெற்றனவாகும். துவஜஸ்தம்பத்தில் உள்ள கல்வெட்டு **வேங்கடப்பநாயக்கர்** காலத்தில் ஏற்பட்டது.

இன்றுவரை கல்வெட்டுத்துறையாளர் படியெடுத்துள்ள சற்றேறக்குறைய முப்பதினுயிரம் கல்வெட்டுக்களுள், இந்தக் கோயிலிலுள்ள வீரராசேந்திர சோழனின் ஐந்தாம் ஆட்சி ஆண்டு 348ஆம் நாளில் ஏற்பட்ட கல்வெட்டே **மிகமிகப் பெரிய**தாகும். இக் கல்வெட்டு 55 வரிகளை உடையது. இரண்டு பகுதிகளாகச் செதுக்கப்பட்டுள்ளது. முதற் பகுதியின் வரிகள் 55 அடி நீளமுள்ளவை. இக் கல்வெட்டின் பரப்பு 540 சதுர அடி. இக் கல்வெட்டுத் தமிழ்மொழியில் வெட்டப்பட்டிருந்தாலும் கொஞ்சம் கிரந்த எழுத்துக்களையும் உடையது. இக் கல்வெட்டு வேங்கடேசப் பெருமாள் கோயிலின் முதற் பிராகாரத்துக் கிழக்குப் புறச் சுவரில் இருக்கின்றது.

கோயிலின் பழமை

ஒன்பதாம் நூற்றுண்டில் இருந்த கங்கபல்லவ அரசனுகிய விசய நிருபதுங்க விக்ரமவர்மனுடைய கல்வெட்டு இக் கோயிலில் இருப்பதால் அவன் காலத்துக்கு முன்பே இக் கோயில் சிறப்புடன் விளங்கி இருந்திருக்கவேண்டும்.

திருமாலின் திருப்பெயர்

மேற்குறித்த பல்லவ மல்லனது கல்வெட்டில் இக் கோயிலில் எழுந்தருளி

யிருக்கும் திருமால் **விஷ்ணு** பட்டாரர் என்றும், சேழமன்னர்களது கல்வெட்டுக் களில் **திருமுக்கூடல் ஆழ்வார். மகா விஷ்ணுக்கள்** எனவும் குறிக்கப்பெற்றுள் ளனர். துவஜஸ்தம்பத்து (கொடிமரத்து) வேங்கடப்பநாயக்கர் கல்வெட்டில் **வேங்க டேஸ்வரஸ்வாமி** என்று வழங்கப் பெற் றிருக்கின்றனர். எனவே இக் காலம் வழங்கும் **வேங்கடேசப் பெருமாள்** என் னும் பெயர் வேங்கடப்ப நாயக்கர் காலத் திலோ, அல்லது அவர்க்குச் சற்று முன்போ ஏற்பட்டிருக்க வேண்டும்.

மண்டபங்கள்

செம்பியன் மாதேவிப் பெரு மண்டபம் :—

இது இம்முக்கூடலுக்கு அருகில் உள்ள மதுராந்தகச் சதுர்வேதி மங் கலத்தின் நடுவில் இருந்தது. இது முதலாம் இராசராச சோழ மன்னனால் கட்டப்பட்டது. இதற்கு இம் மன்னனது பெரிய பாட்டியாராகிய செம்பியன் மாதே வியாரின் நினைவிற்கு அடையாளமாகச் செம்பியன் மாதேவிப் பெருமண்டபம் என்னும் பெயர் வைக்கப் பட்டிருக்க வேண்டும். மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துப் பெருஞ் சபையார் இம் மண் டபத்தில் கூடி, சபைக் கூட்டங்களை நடத்தி வந்தனர். இம் மண்டபத்தைப் பற்றி இக்கோயிலில் உள்ள முதலாம் இராசராச சோழனின் 28ஆம் ஆண்டு 141 ஆம் நாளிலும், முதலாம் இரா சேந்திர சோழ தேவனின் 16 ஆம் ஆண்டு 32 ஆம் நாள் கல்வெட்டிலும் குறிப்புக்கள் உள்ளன.

ஜனநாத மண்டபம்

இது வேங்கடேசப் பெருமாள் கோயி லுக்குள் உள்ளது. இது செய்வித்தவன் **வைசியன் மாதவன் தாமையன் ஆவன்.** இம்மண்டபத்தில் வேதக்கல்லூரி நடை பெற்று வந்தது. சாத்திரர்களும், வேதம் ஓதும் குழுவினரும் இம் மண்டபத்தி லிருந்து உண்டு வந்தனர். திருநாட் களில் வந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் இம்மண்டபத்தில் உணவு அளிக்கப் பட்டது.

திருச்சுற்று மாளிகை

இக்கோயிலில் உள்ள திருச் சுற்று மாளிகை மாதவன் தாமையன் என்ப வனால் கட்டப்பட்டது. முன் குறித்த ஜனநாத மண்டபத்தைக் கட்டியவனும் இவனே யாவான். “திருச் சுற்று மாளி கையும், ஜனநாத மண்டபமும் செய்வித்த **வைசியன் மாதவன் தாமையன்** பிறந்த கார்த்திகைத் திங்கள்”-என்ற வீரராசேந் திர தேவன் காலத்துக் கல்வெட்டுப் பகுதியே, இவைகளுக்குச் சான்றாகும்.

வழிபாடுகள்

முக்கூடல் ஆழ்வார்க்கு (வேங்க டேசப் பெருமாளுக்கு)ச் சிறு காலைச் சந்தி, உச்சியம்போது சந்தி, இரவுச் சந்தி ஆகிய மூன்று காலங்களில் வழி பாடுகள் நடைபெற்று வந்தன. அவை களுள் சிறுகாலைச் சந்தியில் பருப்புப் போனகமும், உச்சியம் போது சந்தியில் அக்காரடலைப் போனகமும், இரவுச் சந்தியில் பால் போனகமும் பொரிக்கறி யமுதும் நிவேதிக்கப்பட்டன. இராகவச் சக்கரவர்த்திக்கு (இராமர்க்கு) உச்சியம் போதில் வழிபாடு நடைபெற்றது.

திருவிழாக்கள்

இக்கோயிலில் ஐப்பசித் திருநாள், மாசிமகத்திருநாள், இவைகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தன. ஐப்பசித் திருநாளில் அழகிய மணவாளர் எழுந் தருளுவார்.

பிறசிறப்புக்கள்

அமாவாசையில் ஆழ்வார் தீர்த்தம் பிரசாதித்தால் தீர்த்தம் ஆடவந்தவர்களில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இருபதுபேர்களுக்கும், திருவேங்கட மலைத் தீர்த்த மாடவந்தவர்களில் ஸ்ரீவைஷ்ணவர் நூறு பேர்களுக்கும், இவர்கள் தீர்த்த மாடி மீண்டு வந்தால் இவர்கள் நூறுபேர்களுக்கும்,புரட்டாசித் திருவோணத்து நாள் தீர்த்த மாடவந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் நூறுபேர்களுக்கும், ஐப்பசித் திருநாளில் திருவிழா எழுந்தருளும் நாள் ஆறில், ஸ்ரீ வைஷ்ணவர்கள் 25 ஆக நாள் ஆறில் உண்ணும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் 150 பேர்களுக்கும், தீர்த்தம் ஆடும் அன்று ஸ்ரீ வைஷ்ணவர் 50 பேர்களுக்கும், மார்கழித் திரு ஏகாதசியிலும், துவாதசியிலும் திருவாய் மொழி கேட்க வந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும், மாசிமகத் திருநாளில் ஸ்ரீ வைஷ்ணவர் இருநூறு பேர்களுக்கும் ஜனநாத மண்டபத்தில் உணவு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஜெயந்தி அஷ்டமி நாளில் வெண்ணெய்க் கூத்தாழ்வார்க்குப் பெருந்திருவமுதுக்கும், கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாள், பெருந்திருவமுதுக்கும் இந்நாளில் விடியும் அளவும் திருவுண்ணாழிகையிலும் திருச்சுற்றுமாளிகையிலும் எரிவதற்கு நூறு விளக்குகளுக்கும், நிவந்தங்கள் அளிக்கப்பட்டிருந்தன.

இவைகளன்றி ஆழ்வார்க்குச் சந்தனக் காப்புக்கு, சந்தனம் நாள்ஒன்றுக்கு அரைப்பலம் ஆக நாள் 360-க்கு, சந்தனம் 180 பலத்துக்குக் காசு ஒன்றுக்குச் சந்தனம் 8 பலம் ஆக காசு 22½-யும், ஆழ்வார்க்குத் திரு நுந்தா விளக்குகளுக்கும், ஆழ்வார்க்குத் திருமஞ்சனங்களுக்கு வேண்டும் கலசங்களுக்கும், ஆழ்வார்க்குப் பரிசட்டங்களுக்கும் நிவந்தங்கள் அளிக்கப்பட்டிருந்தன. திருச்சுற்று மாளிகைப் புதுக்குப்புறத்திற்கு ஆண்டு தோறும் 40 கல நெல் அளிக்கப்பட்டது. புரட்டாசித் திருவோணத்து நாளில் வெண்ணெய்க் கூத்தரை ஜனநாத மண்டபத்துக்கு எழுந்தருளச் செய்தல் உண்டு.

(வெண்ணெய்க் கூத்தர்—கண்ண பிரான்.)

திருவேங்கட மலை :

முக்கூடலுக்கும் ஆற்றுக்கும் எதிர்க் கரையில் ஒரு குன்று ஒன்று உண்டு. அதின்மேல் ஒரு திருமால் கோயில் இருக்கிறது. இதற்குத் திருவேங்கட மலைக் கோயில் என்று பெயர். காஞ்சிபுரத்திற்குச் செல்லும் யாத்திரிகர்கள் இக்கோயிலை வழிபடுவது உண்டு. இத்திருவேங்கட மலையைப் பற்றித் திருமுக்கூடலில் இராச கேசரிவர்மனாகிய வீர ராசேந்திரன் கல்வெட்டில் "திருவேங்கட மலை தீர்த்த மாடப் பெருங்கூட்டமாய் வந்து ஜனநாத மண்டபத்து உண்ணும் ஸ்ரீ வைஷ்ணவர்க்கு" என்னும் குறிப்பு உள்ளது.

---

* பெருந்திருவமுது — வடை, பாயசத்துடன் கூடிய உணவு. பிரசாதித்தல்—கொடுத்தல். திருவுண்ணாழிகை—ஆழ்வார் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிருகம் (Central Shrine). பரிசட்டம் - ஆழ்வார்க்குச் சாத்துதற்குரிய ஆடை. இக்காலம் இச்சொல் பரிவட்டம் என்று வழங்கப் பெறுகின்றது. பழைய கல்வெட்டுக்கள் அனைவற்றிலும் பரிசட்டம் என்றே இச்சொல் குறிக்கப்பெற்றுள்ளது. புதுக்குப்புறம்—பழுது பார்ப்பதற்கு அளிக்கப்பட்ட நிவந்தம்.

திருநாவுக்கரசர் தேவாரம்

தொண்டைமண்டலாதீனம் குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள், காஞ்சிபுரம்.

திருக்கோயிலுள் இரண்டிதழ்களில் வெளி வந்த கட்டுரைகளை நோக்கிய அன்பர் சிற் சிலர், தொடர்ந்து இவ்வாறுய உண்மைகளை யெழுதி வரல் வேண்டுமென்று வேண்டியதை யேற்று, இதிலும் சில எழுதுகின்றோம். அறிஞர் உலகம் இவ்வுண்மைகளை யேற்றுக்கோடல் எமக்கு ஊக்கம் உண்டாக்குகின்றது.

ஐந்தாவது திருமுறையில், திருவேட்களத் திலும் திரு நாகேச்சரத்திலும் பாடியருளியன வாக ஒரு திருக் குறுந்தொகைப் பாடல் உளது. அஃது இஃது :—

"வட்ட மாமதில் மூன்றுடை வல்லரண்
சுட்ட கொள்கையர் ஆயினும் சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் பொற்றிரு வேட்களச் செல்வரே"

இத் திருப்பாடல் திருநாகேச்சரத்ததாக உள்ள தில், மூன்றுடன் ஆகிலும்-சிட்டர் போல்திரு எனச் சிறிது வேறுபட்டுள்ளது.

மயிலை கிழார் இளமுருகனுர் பதிப்பில், எண் 5652, 5756 ஆக உள்ளவற்றை நோக்குக. பண்முறை யேடுகளே எங்கும் கிடைக்கின்றன என்று ஸ்ரீ இராஜம் ஐயங்கார் அவர்கள் சொல்லக் கேட்டதுண்டு. அதனுல், நூற்று நான்கு பாடல்கட்குள் இவ் வேறுபாடு காணப்படுகின்றதை நோக்கி, ஏடெழுதினோர் பிசகாகக் கோடல் எளிதே. ஈரிடத்திலும் ஒன்பதாவது திருக் குறுந்தொகைப் பாட லாகவே உள்ளதும் நினைக்கத்தக்கது.

இதனை முன்னர்க் காட்டியது ஏன்? பின்னர்க் காட்டுவதை நன்குணர்ந்து நம்புதல் குறித்தே. சீரளவிற் சிறியதை முற்காட்டுதல் அறிவார்க் கெளிதாக்கும். இது நாலாந் திரு முறையில் உள்ள திரு விருத்தம்; திருவை யாற்றுத் தலத்திற்குரியது.

"அந்திவட்டத் திங்கட் கண்ணியன்
ஐயா றமர்ந்து வந்தென்
புந்திவட்டத் திடைப் புக்கு
நின்றனையும் பொய்யென்பனே
சிந்திவட்டச் சடைக் கற்றை
யலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட்டத் தொடு கொன்றை
வளாவிய நம்பனையே."

இதன் வடிவம் சிறிது வேறுபட்டுத் தனித் திரு விருத்தங்களாக நாலாந் திருமுறை முடி வில் உள்ளவற்றுள் ஐந்தாவதாக இருக்கின்றது. முதலடியில், 'திங்கட் கண்ணியன்' என்பது 'இளங் கண்ணியன்' என்றும், மூன்றுவதடி யில் 'சிந்தி' என்பது 'சந்தி' என்றும் உள்ளதே அச் சிறு வேறுபாடு. இப் பாட பேதம் எவ்வாற்றுலும் சரியானது அன்று. கண் ணியில் இளங்கண்ணி முதுகண்ணி என்னும் பேதம் இல்லை. வட்டச் சடைக் கற்றையைச் சிந்தியலம்ப அலர்ந்த நந்தி வட்டம் என்பதே பொருள். 'சந்தி' என்று ஒன்று சந்தியில் நின்று மோனையையும் பொருளையும் கெடுத்தது அங்கு அடுத்தது ஆகாது. இதனை நாலாந் திருமுறைக் குறிப்புரையில் எழுதியிருக்கின் றோம். தருமையாதீனத் திருக் கோயில்களுள் எதிலேனும் அதனை விலைக்குப் பெற்று நோக்கி யின்புறலாம்.

'ஐயாறமர்ந்துவந் தென்புந்தி' என்றதை 'ஆறமர் மிசஞ் சடையான்' என்று தவருக எழுதியதை, யாவரும் அறிந்து கொள்ளலாம். அது பாட பேதம் ஆகாது. சிலர் பதிப்பில், பாட பேதத்திற்கும் தவற்றிற்கும் பேதம் தெரி யாத உண்மை பெரிது வெளிப்படக் காணலாம்.

"ஐயாறமர்ந்து வந்து" என்று புறத் திருப் பையும் "என் புந்தி வட்டத் திடைப் புக்கு

நின்றான்" என்று அகத் திருப்பையும் உணர்த்தியருளினார் நம் அப்பர். அவர்க்கு இவ்வாறு உணர்த்தும் பழக்கம் உண்டு.

"விண்ணினார் மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்கள் ஓதி எழுந்தஞ்சும்
கண்ணினாற் கழல் காண்பிடம் ஏதெனில்
புண்ணியன் புகலூரும் என் நெஞ்சுமே."

திருவையாற்றுத் திருப்பதிகங்களை யெல்லாம் ஊன்றி நோக்கின் இவ்வுண்மை இனிது புலனாகும்.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தை யுள்ளும் உறைவான்" என்னுந் திருக்கோவையில் உள்ளது போலத் திருமுறையிற் பல இடத்தில் உள்ளதைக் காணலாம். இத்தகைய இடங்களை நோக்கி நெடிது நினைந்து, அன்பின் பெருக்கம் உடைய கவிஞர் ஒருவர்,

'ஆகத்திலே ஒரு பாதியென்
அம்மைக் களித்து அவன் தன்
பாகத்திலே ஒரு பாதி கொண்டாய்;
மற்றைப் பாதியும் உன்
தேகத்திற் பாதியும் சேர்ந்தால்
இருவர் உண்டே! சிவனே
ஏகத் திராமல் இருப்பாய்
களந்தையும் என் னெஞ்சுமே'

என்று நயம் உறப் பாடினார். இது களக்காட்டுச் சத்தியவாசகர் இரட்டை மணிமாலைப் பாட்டு. இதை மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் வெளியிட்டுதவினார்கள். கலைமகள் வெளியீடாக வந்தது. இதுபோல அப் பாவலர் பிரானார் பாடிய பழநி யிரட்டை மணி மாலையும் மிக்க நயம் உள்ள பாக்கள் உடையது. அவ் விரண்டனையும் நோக்கின், இக் காலப் பாவாணர்கள் தம் பாட்டை நன்கு பாடிவர முயல்வார்கள்.

நாலாந் திருமுறையுள் 'முந்தி வட்டத் திடைப்பட்ட தெல்லாம்' எனத் தொடங்கும் திருவிருத்தத்தைப் போல, இக் கட்டுரையிற் காட்டிய திருவிருத்தம் வேறுபடாமையை உணர்தலும் இங்கு நலம் பயக்கும்.

திருவையாற்றுத் திருப்பதிகத்தில் "ஓதிய ஞானமும் ஞானப் பொருளும்" எனத் தொடங்குவதில், 'சோதியஞ் செஞ்சுடர் ஞாயிறும் என்றிருந்தது. எண்ணும்மையாகக் கொண்டு 'சோதியும' எனப் பிழைபடப் படித்து வருகின்றனர். 'சோதியே சுடரே' என்றதில், சோதி வேறு - சுடர் வேறு என்னும் உண்மை உணர்வார்க்கு இது தெரியும். ஞாயிறும் மதியும் கூறிய இடத்தில் தீயையும் கூறினார் என்று கொண்டார் எனச் சிலர் துணியலாம். அத் துணிவு ஈண்டுப் பொருந்தாது. 'சொரிவிப்பார்' என்னும் தொடக்கத்தையுடைய திருக்குறுந்தொகைப் பாடலைப் போல் பல இடங்கள் உள்ளன. அங்கெல்லாம் இவ் வண்ணம் கொள்ளல் கூடும்.

'ஈசன் என்னை அறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி ஏற்றப் பெறுதலால்;
ஈசன் சேவடி ஏத்தப் பெற்றேன் இனி
ஈசன் றன்னையும் யான்மறக் கிற்பெனே'

என்னும் குறுந்தொகைப் பாடலில், இரண்டாவது அடிக்கண், 'ஏற்றப் பெறுதல்' என்றிருப்பது பிழை. அஃது அடுத்த அடிக்கண் உள்ளவாறே ஏத்தப் பெறுதல் என்றிருப்பதே பிழையுறாதது. ஏற்றலுக்கும் ஏத்தலுக்கும் வேறுபாடு பெரிதுண்டு. எடுத்தல் என்றது ஏத்தல் என மருவியதும் உண்டு. அஃது எடுத்தேத்தல் 'ஏத்தெடுத்தல்' எனவரும். இது பயிற்சியில் உளது. 'எடுத்தல் படுத்தல் நலிதல்' என்னும் முத்திறத்துள் ஓரோசையைக் குறிக்கும் எடுத்தல் ஏத்தல் என மருவுதல் வியப்பன்று. பகுத்தீடு பாத்தீடு பாதீடு என்பதிற் போல, முதல் இருகுறில் (முதலாவது குறிலின்) நெடிலாகி (இரண்டாவது குறில் கெட்டு) நிற்றல் இயல்பு. பொழுது போழ்து போது; துகள் தூள்; நிகளம் நீளம்; அகழம் ஆழம்; புகுந்தான் பூந்தான் போந்தான் என்பவை பல உள்ளன. ★

ஸ்ரீ வைஷ்ணவம்

ஸ்ரீ ரா. தேசிகப் பிள்ளை அவர்கள், B.A.,B.L., செயலாளர், திருமால் திருநெறி மன்றம், புதுவை.

முன்னுரை : கடவுள் :

உலகத்தின்கண் தோன்றிய மாந்தர் அனை வரும் வாழப் பிறந்தவர்கள். வாழ்வாங்கு வாழப் பிறந்தவர்கள். அங்ஙனம் வாழ்ந்து வாழ்க்கையின் குறிக்கோளை அடையவேண் டியவர்கள். நில்வுலக வாழ்க்கையின் குறிக் கோள் யாது? இந் நிலவுலகத்தி னின்று நீங் கிய பின்னும் வாழ்க்கை தொடர்ந்து மேலாகிய ஓர் இடத்தின் கண் இடையீடின்றி இன்ப மய மாக நிகழவேண்டுமென்பதே. அஃது எங்ஙனம் இயலும்? ஒருவனுடைய ஒழுக்க நெறியின் கண் நின்றால் இயலும். அவ்வொருவன் யார்? மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினை அறுத்தவனே அவ்வொருவன்.

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

அத்தகையோன் எங்குளான்? அன்பு கொண்டு நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் தானே வந்து உறைகின்றான். அவனடிகளைச் சேர்ந் தால் எல்லா வுலகிற்கும் மேலாகிய வீட்டுல கின்கண் அந்தமில் இன்பத்தோடு நிலைத்து வாழலாம்.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

இங்கு நிலமென்றது எல்லாவற்றிற்கும் மேலா கிய வீட்டுலகம் என்பதாகும்.

பொறிவாயி லைந்தவித்தவனும் மலர்மிசை ஏகுபவனும் எவன்? அவன்தான் கடவுள்.

கடவுட் கொள்கை :

எல்லாம் கடந்த அவன் தொடர்பு மாந்தர் வாழ்க்கையில் பொருந்துதல் வேண்டும். கட வுட் கொள்கையோடு கூடிய வாழ்வே வாழ்வு. மாந்தர் தம் வாழ்வில் கடவுட் கொள்கையைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்பது இன்றி யமையாததொன்று.

இஞ்ஞான்று சிலர் கடவுள் இருப்பை மறுத் துப் பேசுகின்றனர். அப்பேச்சுக்கு ஆதாரம் இல்லை யென்பதைப் பல நிகழ்ச்சிகளால் அறிய லாம்.

இலின்னே என்பவர் சுவீடன் நாட்டு மரநூல் வல்லுநர். அவர் கடவுள் ஒருவர் உண் டென்பதை ஒப்புக்கொள்ளத் தயங்கினவர். அவர் செடி கொடிகளைப் பற்றி நீண்டதோர் ஆராய்ச்சி செய்தார். இந்த ஆராய்ச்சியினால் அவர் உள்ளத்தில் அருமையான கருத்தொன்று உதித்தது. கடவுள் இருப்பை அவர் நன்கு உணர்ந்தார். படிப்படியாகச் சென்ற அவரது ஆராய்ச்சி ஓர் இடத்தில் தடைப்பட்டு நின்று விட்டது. தம் ஆராய்ச்சி மேலே செல்ல முடியா மல் நின்றதன் காரணத்தை அவரால் உணர இயலவில்லை. திகைப்படைந்தார். இந்தத் திகைத்த நிலையில் தம் உணர்ச்சியைப் பின் கண்டவாறு வெளியிட்டார்.

"எல்லாம் அறிந்த, எல்லாம் செய்யக் கூடிய, மாபெரிய, அழிவில்லாத, கடவுள் என் முன்னே செல்லக் கண்டேன். அவரை நான் நேரில் பார்த்தேனில்லை. ஆனால் அவருடைய சாயல் என் உள்ளத்தைப் பற்றிக்கொண்டது. வியப்பிலும் களிப்பிலும் அதனைத் தோய்த்து விட்டது. உலகத்தில் காணப்படும் பொருள் களெல்லாம் கடவுளின் அமைதியையும் ஆற் றலையும் கொண்டிருக்கின்றன என்பதை என் ஆராய்ச்சிமூலம் அறிந்தேன். அப்பொருள்கள் தரும் பயன் கடவுளின் அன்பைக் குறிக்கிறது. அவற்றின் அழகு அவர்தம் அறிவைக் குறிக் கிறது. அவற்றின் இன ஒற்றுமை, அளவு

ஒற்றுமை, நிலைத்திருக்கும் தன்மை, பெருக்கம் முதலியவை அப்பெரியோனுடைய ஆற்றலைக் காட்டுகின்றன. எனவே, கடவுள் உண்டென்பது சரியே.''

இயற்கையை நன்காராய்ந்த பிரெஞ்சு அறிஞர் பெர்னர் தன் தெசேம்பியேர் கடவுள் இருப்பில் திண்ணிய நம்பிக்கையுறலானர். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் எழுப்பும் சில தடைகளை வைத்துக் கொண்டு அவைகளுக்கு விடை கண்டார். இயற்கையின் செயல் என்று சொல்லப்படுவதெல்லாம் அடிப்படையில் ஓர் ஒப்பற்ற ஒழுங்கமைதியைக் கொண்டிருக்கிறதென்றும், அந்த ஒழுங்கமைதிக்குக் காரணமானதொன்றுண்டென்றும், அந்த ஒன்றை உணரும்போது இறைவன் இருப்பு புலனாகிறதென்றும் முடிவு கட்டினர்.

கடவுட் கொள்கையே பொதுவாகச் சமயம் எனச் சுட்டப்படுகிறது. கடவுட் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு போற்றப்படும் ஒழுகலாறுகளெல்லாம் சமயந்தான். எனவே சமயம் என்பதற்குப் பலர் பலவிதமாகப் பொருள் கூறுவர். அஃது எங்ஙனமாயினும் சாரமாக நின்று மிளிர்வது அந்தக் கடவுள்தான். இறைவன் என்றும் அவன் இயம்பப்படுவான்.

சமயம் :

இறைவனைப் போற்றி வழிபடுதலே சமயம் என்பார் ஒருவர். 'மனித வாழ்க்கையில் சிறப்பான பகுதியாக அமையும் குறிக்கோளே சமயம்' என்று இயம்புவார் இரெனன் என்ற பிரெஞ்சு அறிஞர். 'இறைவனுக்கு அடிமைப் பட்டிருக்கிறேம் என்ற உணர்ச்சியே சமயம்' என்று இன்னொருவர் சாற்றுகிருர்.

'இந்தப் பேரண்டத்தின்கண் விளங்கித் தோன்றும் ஒரு பேராற்றலோடு நன்முறையில் தொடர்பு கொள்ளும் விருப்பத்துடன் செய்யப் பெறும் முயற்சியே சமயம்' என்று மற்றொரு மேனாட்டறிஞர் மொழிகிருர்.

இந்த இறையுணர்வு எல்லா மக்கட்கும் பொதுவானது. இந்த உணர்வு வந்தக்கால் எவ்வித இன்னல்களுக்கும் நாம் அஞ்ச வேண்டியதில்லை. புயலால் மோதப் பெற்ற ஒரு மரக்கலத்தை நங்கூரம் எப்படி நிலைநிறுத்துகிறதோ, அப்படியே துன்பச் சூழலில் சிக்குண்டானொருவனைச் சமயம் நிலைநிறுத்திக் காக்கிறது என்று கூறுகிருர் மோங்தெஸ்கியோ என்ற பிரெஞ்சு நாட்டுப் பேரறிஞர்.

சமயம் என்பதைப் பற்றி ஒருவர் கொண்ட கருத்து மற்றவர் கொண்டுள்ள கருத்துக்கு ஒரு வகையில் மாறுபட்டு நிற்கிறதையும் காண்கிறேம். ஆனல் அவர்கள் கருத்துக்கள் எல்லாவற்றுள்ளும் சில கூறுகள் ஒரேவிதமாக இருப்பதை நாம் அறிகிறேம். அந்த ஒரே தன்மையான கூறுகள் தாம் சமயம் என்ன என்பதை நன்கு விளக்குகின்றன. வேற்றுமையில் காணப்படும் இவ்வொற்றுமையைக் குறிக்கும் பொருள்தான் சமயத்தில் சிறந்து விளங்குகிறது.

உலகம்தோன்றிய காலத்திலிருந்து மாந்தரிடையே சமயம் குடி கொண்டிருக்கிறது. மலரினின்று மணத்தை எங்ஙனம் பிரிக்க முடியாதோ அங்ஙனமே சமயத்தையும் மக்களையும் தனித்தனியே பிரித்தற்கியலாது சமயம் அவர்கள் உடலோடும் உயிரோடும் ஒன்றி நிற்கிறது.

சமயம் என்பதற்கு நெறி, கொள்கை, மதம் என்னும் வேறு பெயர்களுமுண்டு. ஒருவர் நாடோறும் தம்வாழ்க்கையை ஒழுங்குபெற நடத்துவதற்குச் சில நன்னெறி அல்லது நற்கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அன்றேல் அவர் வாழ்க்கை நன்முறையில் நடைபெறுதல் அரிது. இதனல் தான் சமயம் ஒவ்வொருவர் வாழ்க்கையோடும் பிரிக்க முடியாத நிலையில் பிணிப்புண்டிருக்கிறது.

வைணவ சமயம் :

இங்ஙனம் மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புற்றிருக்கும் சமயங்கள் பலவாகும். அவற்றுள் வைணவ சமயமும் ஒன்று.

இது பல உயரிய கொள்கைகளைத் தன்னகத்தேகொண்டு ஒரு பரந்த சமயமாக விளங்குகிறது. இச்சமயம் விஷ்ணுவை முதற் கடவுளாகக் கொண்டுள்ளது. விஷ்ணு என்பதற்கு எங்கும் நிறைந்தது என்பது பொருள்.

இச்சமயம் நம் நாட்டில் இமயம் முதல் குமரி வரையில் பரவியுள்ளது. இது பண்டைக் கால முதற்கொண்டே பாரதநாட்டில் தலை சிறந்து விளங்குகிறது. பாரத நாடே பிற உலக

நாடுகளுக்கெல்லாம் மெய்ஞ் ஞானத்தைத் தந்த தென்பதை மறுப்பாரில்லை.

**கன்றெறிந்த தோளான் கனைகழலே காண்பதற்கு
நன்கறிந்த நாவலஞ்சூழ் நாடு**

என்பது ஆன்ம ஞானம் பெற்ற அறிஞர் கருத்து. இச்சமயத்தைப் பேணிப் போற்றும் முறையில் ஆங்காங்குச் சிற்சில வேறுபாடுகள் காணப்படலாம். அவ்வேறுபாடுகள் சமய வளர்ச்சிக்கும் ஒழுகலாற்றுக்கும் ஊறு செய்வன அல்ல. அல்லாமலும் அவற்றைப்பற்றிப் பொருள்படுத்த வேண்டிய அளவுக்கு அவ் வேறுபாடுகள் இருப்பதாகவும் தெரியவில்லை.

நம் தமிழ்நாட்டில் வைணவ சமயம் சிறந்த முறையில் வளர்ந்து வந்திருக்கிறது. அது திருமால் திருநெறியென்று கூறப்பட்டது. சங்க இலக்கியங்களும் பிறவும் திருமாலைப் பற்றிப் புகழ்ந்து பேசுகின்றன. பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியம் "மாயோன்" என்று அவனைப் போற்றுகிறது. கலித்தொகை என்னும் நூலில், திருமால் முல்லை நிலத்தாராகிய ஆயர் பெருமக்களுக்குக் குலதெய்வமாதலும், அங்கு அவர்களுக்கு அருள் சுரத்தலும் கூறப்படுகின்றன. மற்றும் புறநானூறு, அகநானூறு, பதிற்றுப் பத்து, நற்றிணை, பரிபாடல், பெரும் பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி முதலிய பண்டைய தமிழ் நூல்களெல்லாம் அவன் பண்பைப் பகர்கின்றன. சிலப்பதிகாரம் அவன் சீர்மையைச் செப்புகிறது. திருக்குறள் அவன் குணநலங்களைக் கூறுகிறது.

விசிஷ்டாத் வைதம்:

இப்படி இசையிலங்க நிற்கும் திருமால் திருநெறி அல்லது வைணவசமயம், விசிஷ்டாத் வைதமதம் என்றும் அழைக்கப்படுகிறது. விசிஷ்டாத்வைதம் என்பதில் இரண்டு சொற்கள் சேர்ந்திருக்கின்றன. அவை இரண்டும் வடசொற்கள். விசிஷ்டம் அத்வைதம் என்பன அச்சொற்கள். விசிஷ்டம் என்பதற்குச் சேர்க்கை என்றும் அத்வைதம் என்பதற்கு இரண்டற்றதென்றும் பொருள் கூறப்படுகிறது. இரண்டற்ற ஒன்று வேறு சிலவற்றைக் கூட்டாகக் கொண்டு திகழ்கிறது என்று பெரியோர் கூறுகின்றனர். அவை சித்தும் அசித்துமாம். சித்தையும் அசித்தையும் உடலாகக்கொண்டு மிளிர்கிறது அந்தத் தனிமுதல். சித்தோடும் கூடிய அதுவே பரப்பிரமம் எனப்படும். அஃது என்றும் நிலைத்திருப்பது. உண்மைக்குண்மையாயிருப்பது. வரம்பிகந்த அறிவுமயமாயிருப்பது. காலம் இடங்களைக் கடந்து நிற்பது. எங்கும் உள்ளது. எல்லாம் அறிவது. எல்லாஞ் செய்யவல்லது. அதற்கு வேறு பல பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேதங்களில் அது சத்து என்றும், ஆத்துமா என்றும், ஈசுவரன் என்றும், விஷ்ணு என்றும், நாராயணன் என்றும் பேசப்படுவதாக அறிகிறோம். வேறு சில ஞான நூல்களில் அது புருஷோத்தமன் என்றும், வாசுதேவன் என்றும் அழைக்கப்படுகிறது. சித்து, அசித்து என்பவற்றோடு கூடி விளங்கினும் அஃது அவற்றினின்றும் மாறுபட்டே நிற்கிறது. அஃது எதனையும் சார்பு கொள்ளுவதில்லை. அது தனித் தன்மையோடு இருப்பது. அதற்கு மாறுகச் சித்தும் அசித்தும் அதன் சார்பு கொண்டே விளங்குவன.

இம்மூன்றுக்கும் உள்ள உறவினை உடலுக்கும் அதனுள்ளிருக்கும் உயிருக்கும் ஒப்பிட்டுப் பேசுகின்றன வேதங்கள். அத்தனி முதலைப் பரப்பிரமம் என்று மேலே குறிப்பிட்டோம். சித்தும் அசித்தும் பரப்பிரமத்தின் உடல். அப் பரப் பிரமம் அவ்வுடலுள் உறையும் உயிர். விசிஷ்டாத்வைதத்தின் தத்துவம் இதுவே யாகும்.

பக்தி, பிரபத்தி:

இந்தத் தத்துவத்தை உள்ளத்தே கொண்டு மனித உடல் தாங்கிய நாம் விஷ்ணுவை, பரப் பிரமத்தை, நாராயணனை அடைய முயல வேண்டும். அங்ஙனம் அடைதற்குச் சில வாயில்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் இரண்டு சிறப்பாகக் கொள்ளப்பட்டுள்ளன. அவை பக்தி, பிரபத்தி எனப்படும். இறைவனை அடைவதற்குப் பக்தியும், பிரபத்தியும் எளிய மார்க்கங்கள். பக்தியைக் காட்டிலும் பிரபத்தி மிக எளியது.

ஒருவன் தன் உள்ளத்தின் ஆற்றல் முழுவதையும் கொண்டு இறைவனிடத்தில் அன்பு செலுத்துவது பக்தி. தான் என்பதை மறந்து தனது நம்பிக்கையை இறைவன்பால் வைத்து அவனிடமிருந்து வரும் ஆற்றல் முழுவதையும் கொண்டு அவனிடத்தில் அன்பு செலுத்துவது

பிரபத்தி. பிரபத்தி செய்வானொருவன் எவ்வித நிபந்தனையுமின்றி இறைவனிடத்தில் தஞ்சம் புகுகின்றான். அவனுடைய திருவடி நிழலில் மன உறுதியோடு பாதுகாப்பைத் தேடுகின்றான். அப்போது இறைவன் அவனையேற்றருளுகிறான். பக்தியை மேற்கொள்ளுவானொருவனுக்கு இறைவன் தன்னை எளிதில் கட்டுப்படுத்திக் கொள்ளுவதில்லை. பிரபத்தி காரியத்தில் அருள் செய்வதற்கு இறைவன் தானே கடமைப்பட்டு முந்துகிறான். பக்திக்கு இடைவிடாத அன்பும் வழிபாடும் வேண்டும். கருத்தும் அதில் தளர்வின்றி ஊன்றி நிற்கவேண்டும். பிரபத்திக்கு அப்படி வேண்டியதில்லை. தான் என்ற முனைப்பு ஒழிந்து முழு நம்பிக்கையை இறைவன்பால் வைத்து அவன் விருப்பத்திற்கு அடங்கிக் கிடத்தலே சாலும். ஒருவன் உள்ளத்தில் தோன்றும் சிறு முயற்சியினின்றும் எழுகின்ற அன்பின் சிறிய ஊற்றே பக்தி. அது தன் ஓட்டத்தில் பல இடர்களுக்குட்படலாம். ஒருவன் செய்கின்ற பிரபத்தியோ அவன்பால் இறைவனிடத்திலிருந்து இழிகின்ற அருளின் பெரு வெள்ளமாகும். அந்தப் பெரு வெள்ளத்தின் வேகத்தை எதனாலும் தடுத்தற்கியலாது. பள்ளத்திலிருந்து மேட்டுக்குப் பெருமுயற்சி கொண்டு நீரேற்றுவதை யொக்கும் பக்தி. அதற்கு மாறாகப் பிரபத்தி இறைவன் அருளை இயற்கையாக வானிலிருந்து கொட்டும் பெருமழைக்கு ஒப்பாகப் பெறச் செய்கிறது. இதனாலேதான் 'எல்லாப் பொருள்களையும் விட்டு உயிரினை அதற்குரியவனாகிற வண்புகழ் நாரணனிடம் சேர்த்து விடுங்கள்' என்று உபதேசிக்கிறார் ஆழ்வார்களுள் ஒருவராகிய நம்மாழ்வார்.

வீடுமின் முற்றவும் வீடுசெய்து உம்முயிர்
வீடுடை யானிடை வீடு செய்மினே.

என்பது அவர் திருவாக்கு.

ஆழ்வார்கள் :

தமிழ் நாட்டில் வைணவ சமயத்தை நிலைபெறுத்திச் சென்றவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் பன்னிருவர். இவர்கள் காலம் இன்னுஞ் சரியாக வரையறுக்கப்படவில்லை. பலர் பலவாறு கணக்கிட்டுக் கூறினும் இதுகாலை நடந்துவரும் புதிய ஆராய்ச்சிகள் இவர்கள் காலத்தை ஓரளவு நம்பும் வகையில் குறிக்கின்றன.

குருபரம்பரை என்னும் நூல் கீழ்க்கண்ட வண்ணம் ஆழ்வார்களை நிரல்படுத்துகின்றது. அந்நிரல்படி அவர்களை முற்காலத்தவர், இடைக்காலத்தவர், பிற்காலத்தவர் என்ற மூன்று பிரிவில் அடக்கலாம்.

I—முற்காலத்தவர் : (1) பொய்கையாழ்வார், (2) பூதத்தாழ்வார் (3) பேயாழ்வார் (4) திருமழிசை யாழ்வார்.

II—இடைக்காலத்தவர் : (5) நம்மாழ்வார் (6) மதுரகவியழ்வார் (7) குலசேகராழ்வார் (8) பெரியாழ்வார் (9) ஆண்டாள்.

III—பிற்காலத்தவர் : (10) தொண்டரடிப் பொடியாழ்வார் (11) திருப்பாணாழ்வார் (12) திருமங்கையாழ்வார்.

திருவரங்கத்தமுதனார் தாம் இயற்றிய இராமாநுச நூற்றந் தாதியில் ஆழ்வார்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்துகிறார். (1) பொய்கையாழ்வார், (2) பூதத்தாழ்வார், (3) பேயாழ்வார், (4) திருப்பாணாழ்வார், (5) திருமழிசையாழ்வார், (6) தொண்டரடிப்பொடியாழ்வார், (7) குலசேகராழ்வார், (8) பெரியாழ்வார், (9) ஆண்டாள், (10) திருமங்கையாழ்வார். மதுரகவியாழ்வார் பெயர் விடுபட்டிருக்கிறது. நம்மாழ்வாரைப் பற்றி மற்றோரிடத்தில் குறிப்பிடுகிறார். அவரை ஆசாரிய பரம்பரையிலே அடக்கிப் புகழ்ந்து பேசுகிறார். ஆழ்வார்களுள் நம்மாழ்வார் ஒருவரே ஆசாரிய பரம்பரையில் வைத்துப் போற்றப்படுபவர்.

ஸ்ரீ வேதாந்த தேசிகரும் தமது 'அதிகார சங்கிரகம்' என்னும் நூலில் நம்மாழ்வாரை ஆசாரிய பரம்பரையில் வைத்து வணங்குகிறார் :

அவரே தம்முடைய பிரபந்தசாரம் என்னும் நூலில் ஆழ்வார்களையும் அவர்கள் இயற்றியருளிய பிரபந்தங்களின் பெயர்களையும் அவைகளுக்குரிய பாட்டுக்களின் எண்ணிக்கைகளையும் விளக்கிக் கூறுகிறார்.

பிரபந்தசாரத்தில் அவர் ஆழ்வார்களை அடுக்கிக் காட்டும் முறை வருமாறு. (1) பொய்கையாழ்வார், (2) பூதத்தாழ்வார், (3) (3) பேயாழ்வார், (4) திருமழிசையாழ்வார், (5) நம்மாழ்வார், (6) மதுரகவியாழ்வார், (7) குலசேகராழ்வார், (8) பெரியாழ்வார், (9) ஆண்டாள், (10)தொண்டரடிப்பொடியாழ்வார், (11) திருப்பாணாழ்வார், (12) திருமங்கையாழ்வார்.

இக்காலத்துப் புலவர் சிலர் ஆழ்வார்களின் காலங் குறித்து ஆராய்ச்சி செய்துள்ளனர். இலக்கியங்களையும், வரலாறுகளையும் கல்வெட்டுக்களையும் ஆதாரமாகக் கொண்டு செய்யப் பெற்றது இவ்வாராய்ச்சி. பழங் கொள்கைக்கு மாறுகச் சில செய்திகள் இதன் மூலம் வெளியிட்டிருக்கலாம். அவற்றை ஒதுக்கித் தள்ளுவதும் கூடாது. எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து முடிவு காண வேண்டும்.

ஆழ்வார்களின் பெருமை அளவிடற்கரியது. அவர்கள் பொன்னுறு, ஆனந்தவாரிதியில் திளைக்கும் பேரமைதி. கடவுளின்பத்தை வாரி வழங்கும் அருட் கொண்டல்கள். இறைவனேடு இடையருது பொருந்தியதே அவர்கள் வாழ்க்கை. அவன் திருவடிகளே தஞ்சமென்று வாழ்ந்தவர்கள் அவர்கள். அவர்கள் சிந்தையெல்லாம் நாராயணன் பக்கலிலே மண்டிக் கிடந்தது. அவர்கள் உள்ளம் நாராயணன் திருக்கோயில். அவர்கள் நா பாடியதெல்லாம் அவன் புகழே.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் :

ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தவை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்றும், ஆழ்வார் அருளிச் செயல்கள் என்றும் வழங்கப் பெறும். உலகிற்கு வேண்டிய உயர் பொருள்கள் முற்றும் இவற்றுள் பொதிந்து கிடக்கின்றன நல்லொழுக்கம் நீதி முறைகள் சமய உண்மைகள் எல்லாம் இவற்றில் அடங்கியிருக்கின்றன. இவை வடமொழி வேதம் முதலியவற்றினும் தெளிவாகக் கருத்துக்களைப் புலப்படுத்துகின்றன. இதனலன்றோ வடமொழியும் தென்மொழியும் நன்கு கற்று அவற்றின் கரை கண்ட வேதாந்த தேசிகர், ஆழ்வார்களின் தமிழ்ப் பிரபந்தங்களைத் தெளிய ஓதித் தெளியாத மறை நிலங்களைத் தெளிந்ததாகச் சொல்லிப் போந்தார்.

பட்டர் என்பார் ஆழ்வார்கள் அருளிச் செயல்களை வெண்ணெய் என்றும், வடமொழி வேதத்தை மோர் என்றும் கொள்ளுவாரென்று, உரைவகுப்பதில் பெரும் புகழெய்திய பெரிய வாச்சான் பிள்ளை தாம் எழுதிய உரையொன்றில் உரைக்கிருர்.

ஆழ்வார்களின் பிரபந்தங்கள் அனைத்தும் சிறப்பானவை என்ருலும் நம்மாழ்வார் செய்தவை தனிச் சிறப்புற்று விளங்குகின்றன. அவைகள் வேதக் கருத்துக்களைத் தெற்றெனத் தெரிவிக்கின்றன என்று வேதங்களையும் பிரபந்தங்களையும் கற்றறிந்த புலமையாளர் புகல்கின்றனர். நம்மாழ்வார் இயற்றிய பிரபந்தங்களுள் திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி ஆகிய இம்மூன்றும் முறையே இருக்கு, யசுர், அதர்வண வேதங்களின் சுருக்கங்களென்று கொள்ளப்படுகின்றன. திருவாய்மொழி என்னும் பிரபந்தம் வேதங்களுள் சிறந்ததாகிய சாம வேதத்தின் உண்மைகளை உரைக்கின்றதென்று சொல்லப்படுகிறது. 'வேதங்களில் யான் சாமவேதமாயிருக்கிறேன்' என்று கண்ணன் கழறியது இங்கு நினைவு கூரத்தக்கது.

ஆசாரியர்கள் :

ஆழ்வார்களைப் போலவே அவர்கள் வழிவந்த ஆசாரியர்களும் வைணவ சமயத்தை வளர்த்தார்கள். சமய வளர்ச்சிக்கு அவர்கள் பட்டபாடு பெரிது. ஆசாரியர்களின் வரலாறு ஒருவாறு அறியக் கிடைக்கிறது இந்த ஆசாரியர்கள் தாங்களே நூல்கள் சில இயற்றியிருக்கின்ருர்கள். திவ்வியப் பிரபந்தத்திற்கும் வேறு பல நூல்களுக்கும் உரைகள் கண்டிருக்கின்ருர்கள். அவர்கள் எழுதிய உரைகள் ஒப்பற்று விளங்குகின்றன. அந்த உரைகளில் அவர்கள் எடுத்துக் காட்டும் நுணுக்கங்கள் பிறரால் செய்யப் பெற்ற வேறெந்த நூல் உரையிலும் காண்பதரிது என்று இக்காலத்திய புலமையாளர்கள் புகல்கின்ருர்கள். ஆழ்வார்கள் வழிவந்த ஆசாரியர்கள் பலர். அவர்களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள் நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார், இராமாநுசர் என்னும் ஐவர் ஆவர். இவர்களுள் மிகப் பரந்த நோக்கங் கொண்ட இராமாநுசருக்கு எல்லா வகையாலும் ஏற்றமுண்டு. இன்று விசிஷ்டாத்வைதம் என்று கூறின் அது பொதுவாக இராமாநுசர் உலகுக்கு ஓதியருளியதையே குறிப்பிடுவதாகிறது. அவர் ஓர் உண்மை வைணவராகவே நடந்து கொண்டார்.

சாதிவேறுபாடு :

உண்மை வைணவர்களிடத்தில் சாதி வேறுபாடு கிடையாது. பண்பாடும் குணநலனும் இறையடிமையுமே எண்ணப்படும். மற்றெவையும் எண்ணுகா. ஆழ்வார்களும் ஆசாரியர்களும் இந்தக் கொள்கையையே கடைப்பிடித்தார்கள்.

தொண்டரடிப்பொடியாழ்வார் தமது திருமாலை என்னும் பிரபந்தத்தில் :

பழுதிலா வொழுக லாற்றுப் பலசதுப்
பேதிமார்கள்
இழிகுலத் தவர்களேலு மெம்மடி
யார்களாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மி
னென்றுநின் னேடுமொக்க
வழிபட வருளினுய் போன்ம் மதிள்திரு
வரங்கத்தானே !

என்று கூறுகிருர். நம்மாழ்வார் நவில்வதைப் பாருங்கள்.

குலந்தாங்கு சாதிகள் நாலிலுங்
கீழிழிந்து எத்தனை
நலந்தானிலாத சண்டாளர் சண்டாளர்
களாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல்
மணிவண்ணற்காளென்றுள்
கலந்தார் அடியார் தம்மடியா
ரெம்மடிகளே.

சாதி வேற்றுமை கூடாது என்றிருக்கவும், சில வைணவர்கள் இக்காலத்தில் இந்த வேற்றுமையை உள்ளத்திற் கொண்டு ஆங்காங்கு நடந்து வருவது, நம் சமயத்திற்குக் கேடு சூழ்வதாகும். இவ்வேற்றுமையை அறவே போக்கி உண்மை வைணவம் ஓங்கி வளர வழி தேடவேண்டும்.

சமயவளர்ச்சி :

நமது சமயம் மிக உயர்ந்ததென்று நாம் கருதுகிறோம். இந்தக் கருத்துக்குத் திருமழிசை யாழ்வார் பாடியதாகவுள்ள பாட்டொன்று அரண் செய்கிறது.

சாக்கியங்கற்றோம் சமணங்கற்றோம்
சங்கரனுர்
ஆக்கியவாகம நூலாராய்ந்தோம்—
பாக்கியத்தால்
செங்கட்கரியானைச் சேர்ந்தோம் தீதிலமே
எங்கட்கரிய தொன்றில்.

இத்துணை வீறு கொள்ளச் செய்கின்ற வைணவ சமயம் இன்று எந்நிலையிலிருக்கிறதென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அஃது இலைமறை காய் போல் தானிருக்கிறதென்றால், அதில் வியப்பில்லை. அஃது எங்கும் படர்ந்து செழித்தோங்க வேண்டும். பாமர மக்களிடையும் அது பரவுதல் வேண்டும். தமிழ்நாட்டில் அது வளர்ச்சியுறுவதற்குத் தமிழில் புதியனவாக நூல்கள் பல வெளிவரவேண்டும். வடமொழியிலுள்ள நூல்களை எளிய நல்ல தமிழில் மொழி பெயர்த்து வழங்குதல்வேண்டும். சமய அறிவை ஏழை எளியவர்களும் அடையுமாறு சின்னஞ்சிறிய நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடல் வேண்டும். எல்லா ஊர்களிலும் சமயக் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறுதல் வேண்டும். சமயத் தத்துவங்களைப் பாமரர்களும் உணர்ந்து கொள்ளுமாறு எடுத்தியம்பவேண்டும். பிரபந்த பாடசாலைகள் ஆங்காங்கு நிறுவி, இளஞ்சிறுர்கள் பிரபந்தப் பாடல்களைப் பாடுமாறு செய்தல் வேண்டும். சமய வளர்ச்சிக்கெனத் தமிழில் ஒரு நல்ல பத்திரிகை வேண்டும். அது திங்கள் தோறுமேனும் வெளிவருமாறு செய்தல் வேண்டும்.

நமக்குள் வடகலை தென்கலைப் பகைமைகள் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. எந்தப் பகைமைக்கும் இடங்கொடாத எம்பெருமானர் திருநாமமிட்டு, எம்பெருமானர் தரிசனம் என்று அழைகக‌ப்பெறும் நமது சமயத்திற்கு இவையெல்லாம் புறம்பானவை. நமக்குள் வாதமும் பாகவத நிந்தனையும் செய்து கொள்வது நம் ஆசாரியர்களின் கொள்கைக்கு முரணாகும். ஆகவே, இப்பொருந்தாச் செயல்களெல்லாவற்றையும் கைவிட்டு நாம் அனைவரும் ஒன்றுபட்டு நம் சமயத்தைப் பேணிக்காக்கும் வழிதேடவேண்டும்,

ஐம்படைத் தாலி :

முற்காலத்தில் நம்மவரிடையே இருந்த சில நல்ல பழக்க வழக்கங்களை நாம் கைவிட்டுவிட்டோம். வைணவர் குடும்பங்களில் நிகழ்கின்ற சிறப்புக்களில் ஒன்று குழந்தைகளுக்குக் காப்பாக ஐம்படைத்தாலி என்ற ஒன்றை அணிவது வழக்கத்திலிருந்தது. இதனை அணியும் சடங்கினை ஐம்படைத்தாலி அணி விழா என்றழைத்தனர் அந்நாள் தமிழர். இன்று அஃது எங்குங்காணப்படவில்லை. பழந்தமிழ் நாட்டில் இவ்வழக்கம் இருந்ததென்பதைப் பண்டைய தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன. பிற்காலத்திலும் இது நடைமுறையில் இருந்து வந்ததென்றும் தெரிகிறது. காப்புக் கடவுள் என்று எல்லாராலும் போற்றப்படும் திருமாலின் சங்கு சக்கரம் வில் வாள் தண்டு ஆகிய ஐந்து படைகளையும் பொன்ணுற் செய்து குழந்தை பிறந்த ஐந்தாம் நாள் அதற்குக் காப்பாகக் கட்டி வந்தார்கள் தமிழர்கள். சைவரும் பிறருங்கூட இவ்வழக்கத்தை மேற் கொண்டிருந்தார்கள் என்று நூல்கள் பலவற்ருல் அறிகிறோம். கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் தாம் இயற்றிய மணிமேகலை என்னும் நூலில் ஐம்படைத்தாலியைப் பற்றிப் பேசுகிருர். திருத்தொண்டர் புராணத்தில் நம்பியாரூரர் வரலாற்றில் சேக்கிழாரும், திருவிளையாடற் புராணத்தில் மாமனுக வந்து வழக்குரைந்த படலத்தில் பரஞ்சோதி முனிவரும் ஐம்படைத்தாலியைப்பற்றி அழகுற எடுத்துரைக்கின்றனர். ஆகவே, ஐம்படைத்தாலி அணியும் நற்பழக்கத்தை நாம் மீண்டும் கைக்கொள்ளவேண்டும்.

முடிவுரை :

மக்கள் நிலை, கால நிலை முதலியவற்றிற் கேற்ப நம் ஆசாரியர்கள் புதுமுறையில் சிற்சில வளர்ச்சித் திட்டங்களை வகுத்து வைத்ததையும் நாம் அறிவோம். எனவே, பொதுமக்கள் கைக்கொள்ளும் வண்ணம் எளிமையான முறைகளைச் சமய ஞானத்தில் துறைபோகிய அறிஞர்கள் ஒன்றுகூடி வகுத்து, நாட்டில் வைணவம் சிறப்புற்றோங்கச் செய்வோமாக. ★

திருவஞ்சைக்களம் :

திருவஞ்சையப்பர் திருக்கோயிலின் திருவாயில்

இவ்வாயிலில்தான் சிவபிரானின் அருளாணையின்படி, தேவர் குழாங்கள் எல்லாம் எதிர் கொண்டு நெருங்கி வந்து பணிந்து, சுந்தர மூர்த்தி சுவாமிகளை வெள்ளை யானையின் மீது ஏற்றித் திருக்கயிலைக்கு அழைத்துச் சென்றனர் எனப் பெரிய புராணம் கூறி யருள்கின்றது.



சென்னை ஸ்ரீ வடபழநி ஆண்டவர் கோயில் தெப்பமும், நீராழி மண்டபமும்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34. Printed at The United Printers, 3/27 Broadway, Madras-1.